1-15 மே 2000

www.padippakam.com

ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்

இராமதாசு - வாழப்பாடி மோதல்: பங்குத் தகராறே!





www.padippakam.com

# உலக மேலாதிக்கப் போர்வெறியன் கிளிண்டனே திரும்பிப் போ!

## — புரட்சிகர அமைப்புகளின் கண்டன ஆர்ப்பாட்டங்கள்

அமெரிக்க வல்லரசின் அதிபரும் உலக மேலாதிக்கப் போர் வெறியனுமாகிய பில் கிளிண்டன் இந்தியாவுக்கு வருவதை எதிர்த்து, மார்ச் 23-ந் தேதியன்று - ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளி பகத்சிங் நினைவு நாளில் — மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி ஆகிய அமைப்புகள் தமிழகத்தின் பல பகுதிகளில் தெருமுனைக் கூட்டங்கள், சுவரொட்டிகள், பேரணி, ஆர்ப்பாட்டம் என வீச்சாகப் பிரச்சார இயக்கத்தை நடத்தின.

திருச்சியில், அண்ணா பவளவிழாக் கட்டிடம் அருகில் தொடங்கிய பேரணி, காந்தி மார்க்கெட் வழியாக பாலக்கரை வந்தடைந்தது. பாலக்கரை பிரபாத் திரையரங்கம் அருகில் உலக மேலாதிக்க வெறிபிடித்த அமெரிக்க வல்லரசுக்கும் அதன் அதிபர் கிளிண்டனுக்கும் எதிராக எழுச்சிமிகு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பேரணியில் ''கிளிண்டாவதாரம்'' என்ற பெயரில் 7 அடி உயர ''கட்-அவுட்''டில் கிளிண்டன் அமெரிக்கத் தொப்பியுடன், கையில் சிகரெட்டு, தோளில் அணுகுண்டுகளைச் சுமந்தபடி நவீன இராமன் போலவும், கிளிண்டனின் காலடியில் அனுமார் வேடத்தில் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் கைகூப்பி வணங்குவது போலவும் வரைந்து தள்ளு வண்டியில் வைத்துக் கொண்டு வரப்பட்டது. இந்த கிளிண்டாவதார உருவப் படத்திற்கு அமெரிக்கத் தொப்பியுடன் பூசாரி ஒருவர் கற்பூரம் கொளுத்தி தீபாராதனை காட்ட, அனுமார் வேடமிட்ட ஒருவர் ''ஜெய் கிளிண்டன்!'' என்று பக்தியுடன் முழங்கிக் கொண்டு இந்த வண்டியைச் சுற்றி வந்தார். இது மக்களிடையே பெருத்த வரவேற்பைப் பெற்றதோடு, நாட்டை மீண்டும் காலனியாக்கி வரும் இந்துவெறி ஆட்சியாளர்களின் துரோகத்தனத்தை எடுப்பாக அம்பலப் படுத்திக் காட்டுவதாக அமைந்தது. பூசாரி வேடமிட்டவர் கிளிண்டன் படத்திற்குச் சூடம் கொளுத்தி வணங்கி, பெப்சி - கோக் குடுவைகளிலிருந்து எல்லோருக்கும் 'தீர்த்தம்' கொடுத்ததை மக்கள் ஆவலுடன் ரசித்தனர்.

தஞ்சையில், ''ஸ்ரீ மோனிகா லெவன்ஸ்கி - ஹிலாரி சமேத பில் கிளிண்டன் பகவானின் திருவீதி உலா'' பெருத்த ஆரவாரத்தோடு நடைபெற்றது. ''ஸ்ரீராமபிரானின் தாசானுதாசரும் பதிமூன்றாவது ஆழ்வாருமாகிய மகாகணம் வாஜ்பாய் சாஸ்திரிகள் தூப தீப ஆராதனைகளை நடத்துவார்'' என்றும், ''பூஜ்யஸ்ரீ ராமதாஸ் பக்தர்களும், ஆச்சார்ய கோபால ஸ்வாமி அடியார்களும், ஸ்ரீலஸ்ரீ குருமஹா சன்னிதானம் கருணாநிதியடிகளின் திருத்தொண்டர்களும் மற்றும் அமெரிக்க மெய்யன்பர்களும் கலந்து கொண்டு கிளிண்ட பகவானின் திருவருளைப் பெறுமாறும்'' இந்துக் கோயில் திருவிழா அழைப்பிதழ் பாணியில் ம.க.இ.க. வெளியிட்ட துண்டுப் பிரசுரம் மக்களிடம் உற்சாக வரவேற்பைப் பெற்றது.

23-ந் தேதியன்று மாலை ஜூபிடர் திரையரங்கம் அருகில் புறப்பட்ட ''கிளிண்ட பகவானின் திருத்தேர்'' தலைமை அஞ்சலகம் சென்றடைந்தது. அங்கு ''சிறப்பு ஆராதனை''யாக எழுச்சிமிகு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. முறையான சாமி ஊர்வலம் போல, நாதஸ்வரம், தவில், உறுமி மேளம் சகிதம் நடந்த இந்த ஊர்வலத்தில் பூசாரி வேடமிட்டவர், கிளிண்ட பகவானுக்குச் சூடம் கொளுத்தி வணங்கி, பெப்சி - கோக் குடுவைகளிலிருந்து எல்லோருக்கும் 'தீர்த்தம்' கொடுத்தார். பெருமாள் கோயில்களில் வழிபாட்டுக்குப் பின் பக்தர்களுக்கு ''சடாரி'' வைத்து ஆசி வழங்குவது போல, இந்த ஊர்வலத்தில் அமெரிக்கத் தொப்பி வைத்து ஆசி வழங்கப்பட்டது. கிளிண்ட பகவான் தேரின் பின்னே ''உலக மேலாதிக்கப் போர் வெறியன் கிளிண்டனே திரும்பிப் போ'' என்றும் அமெரிக்க வல்லரசுக்கும் அதன் பாதந்தாங்கும் பா.ஜ.க. கூட்டணி அரசுக்கும் எதிராகவும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

மேலாதிக்கப் போர் வெறியன் கிளிண்டனின் வருகையை எதிர்த்து திருச்சியில் நடந்த ஊர்வலம்



# அரசுத் துறை நிறுவனங்களைத் தனியாருக்கு விற்காதே!

## பாய்லர் ஆலைத் தொழிலாளர்கள் கண்டனம்

சேலம் உருக்காலையை தனியார்மயமாக்குவதையும் 60 ஆயிரம் தொழிலாளர்களை வேலையிலிருந்து விரட்டி வீட்டுக்கு அனுப்பும் சதியையும், ''பெல்'' உள்ளிட்ட அரசுத்துறை நிறுவனங்களின் பங்குகளைத் தனியாருக்கு விற்பதையும் எதிர்த்து திருச்சி - திருவெறும்பூரில் பாய்லர் பிளாண்ட் ஒர்க்கர்ஸ் யூனியன் கடந்த மார்ச் 15-ந் தேதியன்று மிகப்பெரிய கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியது.

தோழர் சிங்கராயர் தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் பாய்லர் பிளாண்ட் தொழிலாளர் சங்கப் பொதுச் செயலாளர் தோழர் நாராயணசாமி, தோழர் பொன்னுசாமி, தொலை தொடர்புத் துறை ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த தோழர் வில்லியம், ம.க.இ.க. மாநில இணைச் செயலாளர் தோழர் காளியப்பன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். நாட்டின் உயிராதாரமான அனைத்து அரசுத் துறை நிறுவனங்களையும் தனியாருக்குத் தாரை வார்க்க உறுதுணையாக நின்ற ஓட்டுக் கட்சிகள் அனைத்தும் இன்று சேலம் உருக்காலையை மட்டும் தனியார்மயமாக்காதே என்று நாடகமாடுவதை அம்பலப் படுத்தியும், நாட்டை மீண்டும் காலனியாக்கி வரும் மக்கள் விரோத ஆட்சியாளர்களைத் திரைகிழித்தும் ஆர்ப்பாட்டத்தில் விண்ணதிர முழக்கங்கள் எழுப்பப்பட்டன. இறுதியில் ம.க.இ.க. மையக் கலைக்குழு புரட்சிகர கலை நிகழ்ச்சியை நடத்தியது. ''பெல்'' நிறுவனம் தனியார்மயமாக்கப்படுவதை எதிர்த்து எந்தவொரு சங்கமும் போராட முன்வராத நிலையில், பாய்லர் பிளாண்ட் தொழிலாளர் சங்கம் நடத்திய இந்த ஆர்ப்பாட்டம் தொழிலாளர்களிடம் புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது.

— பாய்லர் பிளாண்ட் ஒர்க்கர்ஸ் யூனியன்,
திருச்சி - திருவெறும்பூர்.



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 15

**இதழ் 10 -12**

1 ஏப்ரல் 2000 - 15 மே 2000

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம் : கரோ

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


## "கற்பி! ஒன்றுசேர்!! ஓட்டுப் பொறுக்கு!!!"

"புதிய தமிழகம்" கட்சித் தலைவர் கிருஷ்ணசாமியும், விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பாளர் திருமாவளவனும் கைதேர்ந்த ஓட்டுப் பொறுக்கி அரசியல் தலைவர்களாக உயர்ந்து விட்டார்கள். ஓட்டுப் பொறுக்கி அரசியல் தலைவர்கள்தாம், தமது சந்தர்ப்பவாத கூட்டணி சேர்க்கைகளுக்கெல்லாம் வினோதமான விளக்கங்கள் அளிப்பார்கள். சூழ்நிலைமைகளின் தவிர்க்க முடியாத நிர்ப்பந்தம் என்பதில் தொடங்கி கூட்டணித் தலைவர்களுக்குத் துதிபாடுவது, முந்தைய நிலைப்பாடுகளைப் பூசி மெழுகுவது போலப் பேசுவது - இவையெல்லாம் அவர்களது வாடிக்கை. இந்த நெறியையே அடிபிறழாமல் கிருஷ்ணசாமியும் திருமாவளவனும் பற்றி ஒழுகத் துவங்கி விட்டனர்.

சோனியா தலைமையில் மூன்றாவது அணி அமைக்க முயன்று தோற்றுப் போய், மூப்பனார் தலைமையில் தேர்தல் களம் கண்ட கிருஷ்ணசாமி இப்போது சொல்கிறார், தமிழகத்தைப் பொறுத்த மட்டில் மூன்றாவது அணிக்கு அதிகாரத்தைப் பிடிக்கிற பலம் இல்லை. மக்களையும் அதற்கு இந்த அணி தயார்படுத்தவில்லை. 'இன்ஸ்டன்ட் டீ, காபி' மாதிரி, 'அரசியலுக்கு வந்தால் உடனடியாக அதிகாரத்தைச் சுவைக்க வேண்டும்' என்கிற பார்வை அனைவருக்கும் வந்துவிட்டது. எம்.எல்.ஏ., எம்.பி., அமைச்சராக இருந்தால்தான் அரசியல் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மக்கள் மத்தியிலும் அதிகாரத்தில் இருப்பவர்களை மட்டுமே மதிக்கக்கூடிய போக்கு திணிக்கப்பட்டு விட்டது. மூன்றாவது அணி வெற்றிபெறத் தொலைநோக்குப் பார்வை தேவை. மக்களைத் தயார் செய்து, பொறுமையாகக் காத்திருந்து கொள்கைகளை வெற்றி பெற வைக்கும் சிந்தனை இன்றைய பெரும்பாலான தலைவர்களுக்கு இல்லை. தனது சந்தர்ப்பவாத ஓட்டுப் பொறுக்கும் அரசியலுக்கான பழியை மற்ற தலைவர்கள் மீதும், மக்கள் மீதும் போடும் கிருஷ்ணசாமி, பின்னர் தன் சாதிக்காரர்களையே காரணமாக முன்நிறுத்துகிறார்.

வாழ வழியில்லாமல் வாழ்க்கையின் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிற தம் மக்களிடம் கொள்கையைச் சொல்லி, நீண்ட நாட்களுக்கு அவர்களை வறுமையில் வைத்திருக்க முடியாது; கொஞ்சமாவது அவர்களுக்கு வேண்டிய அடிப்படை உரிமைகளையும் தேவைகளையும் பெற்றுத்தர வேண்டிய பொறுப்பும் கடமையும் தனக்கு இருக்கிறது என்கிறார். ஆக, பதவிக்குப் போக வேண்டும், அப்பொழுதுதான் மக்கள் மதிப்பார்கள்; பதவிக்குப் போனால் 'கொஞ்சமாவது' மக்களின் அடிப்படை உரிமைகளையும் தேவைகளையும் பெற்றுத்தர முடியும், வறுமையிலிருந்து மீள முடியும் என்கிறார்.

தற்போதைய அரசமைப்பின் கீழ் தாழ்த்தப்பட்ட மக்களை வறுமையிலிருந்து மீட்கவோ, இவர்களது அடிப்படை உரிமைகள், தேவைகளைப் பெற்றுத் தரவோ முடியாது; அதற்கு மாறாக, தனது கட்சிப் பிரமுகர்கள் வசதியும் பதவியும் தேடிக் கொள்வதற்கு மட்டுமே வழியுண்டு என்பது கிருஷ்ணசாமி அறியாததல்ல. அரசியலுக்கு அறிமுகமானதிலிருந்து பல தடவை அவரே இதைச் சொல்லி வந்திருக்கிறார். எவ்வளவுதான் "புரட்சி" பேசினாலும், ஓட்டுக் கட்சி அரசியலுக்குள் புகுந்தால் சமரசமும் சந்தர்ப்பவாதமுமே தத்துவமாகிவிடும் என்பதற்கு கிருஷ்ணசாமியே இப்போது சான்றாக விளங்குகிறார்.

மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்காக அவர் நடத்திய மாபெரும் பேரணி, 17 பேரை போலீசார் நெல்லை தாமிரபரணி ஆற்றில் தள்ளிக் கொன்றதில் முடிந்தது. கிருஷ்ணசாமி இப்போது சொல்கிறார்: "மாஞ்சோலை விவகாரத்தில் போராடினேன். அது கலைஞருக்கு எதிராகவோ, அல்லது தி.மு.க. அமைச்சருக்கு எதிராகவோ அல்ல. தொழிலாளர் நலன் காக்கப் போராடினேன். அதில் எங்கள் பக்கம் அரசு நிற்கவில்லை என்ற வருத்தம் உண்டு. கொடியங்குளம் விவகாரத்தில் கோமதிநாயகம் கமிசன் அறிக்கையை ஏற்றுக் கொண்டது, அங்கு பாதிக்கப் பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்காதது என இப்படி இரண்டு பக்கத்திலும் காயம்பட்டிருக்கிறோம். இரண்டு காயத்திற்கும் ஆதிக்க சாதிகள்தான் காரணம். ஆனால், மிக அதிகமாகப் பாதித்தது அ.தி.மு.க. ஆட்சியில் நடந்த கொடியங்குளம் நிகழ்ச்சிதான். பதினேழு பேர் உயிரிழந்ததைக் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால், கொடியங் குளத்தையும், இதையும் ஒப்பிட முடியாது. தாமிரபரணியில் 17 பேரை குறிவைத்துத் தாக்குவதற்கு முன்னோடியாக, ஆணி வேறாக அமைந்தது கொடியங்குளம் நிகழ்ச்சிதான்" என்கிறார் கிருஷ்ணசாமி.

1999 நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்களின்போது மதவெறி பாசிச பாரதீய ஜனதாதான் பொது எதிரி எனக் கணித்து, அதற்கெதிராக மதச்சார்பற்ற அணியொன்று சோனியா தலைமையில் அமைக்க வேண்டுமென அரும்பாடுபட்டார், இந்த கிருஷ்ணசாமி. அதற்குள் என்ன நடந்து விட்டது? இப்போது பா.ஜ.க. தலைமையிலான அணிக்குத் தாவும் நோக்கத்துடன் கூறுகிறார், "ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு ஐடியாலஜி இருக்கிறது. மத உணர்வுகளைப் பிரதானமாக நினைக்கிறது பா.ஜ.க. என்பது நாடறிந்த

தொடர்ச்சி 7-ஆம் பக்கம்

www.padippakam.com

# இராமதாசு - வாழப்பாடி மோதல்: பணப்பெட்டி - பங்காளிச் சண்டை

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் இராமதாசுக்கும், தமிழக ராஜீவ் காங்கிரசுக் கட்சித் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்திக்கும் இடையிலான பங்காளிச் சண்டை ஆரம்பத்தில் கிசுகிசு பத்திரிகைகளின் வதந்தியாகத்தான் இருந்தது. கிசுகிசு சண்டையே வளர்ந்து வாய்ச் சவடால்கள், அறிக்கைப் போர், பிரசுரங்கள் மூலம் ஊழல் குற்றச் சாட்டுக்கள், கொலை மிரட்டல்கள், கண்டனக் கூட்டங்கள், கொடிக் கம்பங்களை வெட்டுவது என்ற நிலையில் இருந்து நேரடிக் கைகலப்பு, வன்முறைத் தாக்குதல்கள் என்ற கட்டத்தை எட்டியிருக்கிறது.

காஞ்சிபுரம் அருகே வாழப்பாடி ஆதரவு வன்னிய சாதி சங்கப் பிரமுகரின் கார் தாக்கிக் கொளுத்தப்பட்டது. சென்னை இராயப்பேட்டையில் இராமதாசுக்கு எதிராக அச்சிட்ட சிறு நூலின் "பைண்டிங்கு" நடப்பதாகத் தகவல் கிடைத்து, அத்தொழிலகங்களை 50 பேர் கொண்ட கும்பல் தாக்கிச் சூறையாடியதோடு, வழிப் போக்கர்களையும் பதம் பார்த்தது. இந்தப் போக்கு அடங்குவதாகத் தெரியவில்லை.

இராமதாசினால் பல்வேறு கால கட்டங்களில் பழிவாங்கப்பட்டு, வெளியேற்றப் பட்டு, ஓரங்கட்டப்பட்ட வன்னிய சாதிப் பிரமுகர்கள் எல்லாம் வாழப்பாடி தூண்டுதலால் ஓரணியில் திரண்டு போட்டிச் சங்கம் அமைக்க முயலுகின்றனர். இதன் பின்னணியில் வாழப்பாடியோடு, பேரா. தீரன், பண்ருட்டி இராமச்சந்திரன், முன்னாள் வன்னிய சங்கத் தலைவர் சுப்பிரமணியன் ஐ.ஏ.எஸ்., ஜெயலலிதா ஆதரவு கே. நடராஜன் போன்றவர்கள் திரண்டுள்ளார்கள்.

இராமதாசு - வாழப்பாடிக்கு இடையிலான பங்காளிச் சண்டை இந்த அளவு உக்கிரமடைவதற்கு அப்படி என்ன காரணம்? ஏதாவது கொள்கை கோட்பாடுகளில் உள்ள வேறுபாடுகள்தாம் இப்படிப் பகை முரண்பாடாகி விட்டதா? இல்லை, வெறும் பங்காளிச் சண்டை என்று ஒதுக்கிவிட முடியுமா?

அரசியல் ரீதியிலாக, கொள்கை ரீதியாக மோதிக் கொள்வதற்கு இராமதாசுக்கும் வாழப்பாடிக்கும் இடையில் எவ்வளவோ காரணங்கள் இருக்கின்றன.

இராஜீவ் காந்தியையே இலட்சியத் தலைவனாகக் கருதி, தனது கட்சிக்கும் அவரது பெயரைச் சூட்டியுள்ளார், வாழப்பாடி. இராஜீவ் கொலையாளிகளை ஈவிரக்கம் காட்டாமல் தூக்கிலிட வேண்டும் என்று துடிப்பவர் வாழப்பாடி. அவர்களுக்குக் கருணை காட்டுவதை சோனியா ஒப்புக் கொண்ட போது, அது இராஜீவுக்குச் செய்யும் துரோகம் என்று சாடியவர் வாழப்பாடி.

ஆனால், இராஜீவ் கொலையைப் பகிரங்கமாகக் கண்டித்தாலும், கொலைக்குக் காரணமானதெனக் கூறப்படும் அமைப்பைக் கண்டிப்பவரோ எதிர்ப்பவரோ அல்ல, இராமதாசு. குற்றஞ் சாட்டப்பட்டுள்ள கொலையாளிகளின் விடுதலைக்காக மன்றாடுபவர், இராமதாசு. அவர்களிடம் கருணை காட்டுவதற்கு ஒப்புக் கொண்ட சோனியாவுக்கு நன்றி பாராட்டுபவர், இராமதாசு.

தமிழீழ விடுதலையையும், விடுதலைப் புலிகளையும் "உறுதி"யாக ஆதரிப்பவர், இராமதாசு. குறிப்பாக, தம்பி பிரபாகரனைத் தன்னிகரற்றத் தலைவராக ஏற்பவர் இராமதாசு. இந்தியாவில் புலிகள் அமைப்பைத் தடை செய்திருப்பதைக் கடுமையாக எதிர்ப்பவர் இராமதாசு.

ஆனால், தமிழீழ விடுதலையின் முக்கியமான இந்திய எதிரிகளுள் ஒருவர் வாழப்பாடி. விடுதலைப் புலிகளையும் பிரபாகரனையும் இராஜீவ் கொலைக்காக பழி தீர்க்கத் துடிப்பவர், வாழப்பாடி. புலிகளை மட்டுமல்ல, அவர்களது ஆதரவு தமிழக அமைப்புகளையும் தடை செய்யக் கோருபவர் வாழப்பாடி.

தமிழினத் தன்னுரிமை, தமிழுரிமை ஆகியவை தமது இலட்சியம் என அறிவித்துள்ளவர் இராமதாசு. இந்தித் திணிப்பிற்கு எதிராக நிற்பதாகச் சொல்பவர் இராமதாசு. பெரியார் - அம்பேத்கர் கொள்கையின் ஆதரவாளர் இராமதாசு.

ஆனால், தமிழின, தமிழுரிமை பேசுவதெல்லாம் பிரிவினைவாதம் எனச் சாடுபவர் வாழப்பாடி. காந்தி, அவரைவிட நேரு - இந்திரா - இராஜீவ் பரம்பரை விசுவாசி வாழப்பாடி.

சமூக நீதி - இட ஒதுக்கீடு, தலித் விடுதலை, சமதர்ம சமுதாயம் காண்பது போன்றவை இராமதாசின் கொள்கை அறிவிப்புகள்.

ஆனால், இந்திரா - இராஜீவ் கொள்கையைத் தாண்டி அறியாதவர் வாழப்பாடி. தொழிற்சங்கத் தலைவராக இருந்திருந்தாலும் காங்கிரசின் ஐ.என்.டி.யு.சி. பாணியிலான கருங்காலித் தொழிற்சங்க வேலைகளில்தான் நாட்டமுடையவர், வாழப்பாடி. முதலாளித்துவ எதிர்ப்பு வாடை இராமதாசிடம் அடிக்கிறது என்றால் முதலாளித்துவ நேசம் வாழப்பாடியின் அடிப்படைக் கொள்கை.

சமரசம் கான முடியாத அளவுக்கு இந்தக் கொள்கை வேறுபாடுகள் முற்றிப் போய் இப்போது வாழப்பாடியும் இராமதாசும் மோதிக் கொள்கிறார்களா?

வேறுபாடு கொண்ட இந்தக் கொள்கைகளுக்காக அவரவர் உக்கிரமாக நின்றபோதுகூட இருவரும் நகமும் சதையுமாக இணைந்தே இருந்தனர். கொள்கைகளையெல்லாம் கடந்த பிறவிப் (அதுதான் ஒரே சாதியில் பிறந்தோம் என்ற புனிதமான) பாசம் கொண்டிருந்தனர்.

கல்கி ஏட்டுக்களித்த பேட்டியில் இராமதாசு சொல்கிறார், "1996 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.வுடன் கூட்டணி முடிவாகிவிட்ட சமயம், இராஜீவ் கொலையில் தி.மு.க.வுக்கு அக்னிப் பரீட்சை செய்ய வேண்டுமென்றார் வாழப்பாடி. அவ்வளவுதான் கூட்டணியில் இருந்து இவரை விடுவித்து விட்டார், கலைஞர். இவருக்காக நானும் வெளியில் வந்தேன். இணைந்து தேர்தலைச் சந்தித்தோம்" அரசியல் ரீதியில் தனக்கு எதிரான நிலை எடுத்தபோதும் வாழப்பாடியுடன் இணைந்து தியாகம் புரிந்ததாகக் கூறுகிறார், இராமதாசு.

ஆனால், இப்போதோ அரசியல், கொள்கை காரணமே இல்லாமல் அடித்துக் கொள்கிறார்கள். அதற்கு ஒருவர் மற்றவர் மீது கூறும் குற்றச்சாட்டு என்ன? நன்றி மறந்து விட்டார், நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டார், வன்னியர் செல்வாக்கைப் பறிக்கப் பார்க்கிறார்.

"தமிழ்நாட்டை விட்டால் வேறு வெளி உலகமே தெரியாத - வன்னிய சமுதாயத்தின் தலைவராக மட்டுமே முடங்கி இருந்த இராமதாசை டெல்லிவரை அழைத்துப் போய் புதிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்தவர் வாழப்பாடிதான். இன்று வாஜ்பாய் - அத்வானியோடு இராமதாசு சரிக்குச் சமமாக அமர்ந்து பேச முடிகிறது. அவர் டெல்லி போனால் வட இந்தியத் தொழிலதிபர்கள் ஓடிவந்து பார்க்கிறார்கள். அதற்குக் காரணம் பா.ம.க. சார்பில் இரண்டு மைய அமைச்சர்கள்



படிப்பகம்

www.padippakam.com

இருப்பதுதான். இந்த நிலைக்கு இராமதாசும் பா.ம.க.வும் உயரக் காரணமே வாழப்பாடி தான்."

"ஆனால், ஒரு கட்டத்தில் வாழப்பாடி யின் உதவி தனக்குத் தேவை இல்லை என்று இராமதாசே உதறித் தள்ளினார். 1999 தேர்தலில் இரண்டு எம்.பி. தொகுதியைக் கருணாநிதி ஒதுக்க விரும்பியும், அடாவடி செய்து இராசிபுரம் தொகுதியைப் பிடித்துக் கொண்டார் இராமதாசு. சேலம் தொகுதியிலும் மறைமுக மாகக் காலை வாரிவிட்டு வாழப்பாடி தோற்கக் காரணமாக இருந்தார். இப்போது வன்னிய சமுதாயத்தில் வாழப்பாடி செல்வாக்கு பெற்று விடுவார் என்று அஞ்சி அவரைப் பாதாளத்தில் தள்ளவே முயலுகிறார்" என்பது "நாகரீகமாக" வாழப்பாடி கட்சி சொல்லும் குற்றச்சாட்டு.



வாழப்பாடியின் கொடும்பாவியை எரிக்கும் பா.ம.க. இராமதாசின் விசுவாசிகள்

"இராமதாசை ஒன்றும் சும்மா வாழப்பாடி ஆதரித்துவிடவில்லை. வன்னியரான தனக்குப் பலமான வன்னிய சமுதாய ஆதரவு இருந்தால்தான் பலமில்லாத தனது கட்சியைத் தொடர்ந்து நடத்த முடியும் என்று நினைத்தார். 1998-ஆம் ஆண்டு தேர்தலில் ஜெயலலிதா விடம் போராடி சேலம் தொகுதியையும், வாஜ்பாய் - அத்வானியிடம் வாதாடி மைய பெட்ரோலிய அமைச்சர் பதவியையும் வாழப்பாடிக்கு வாங்கிக் கொடுத்ததே இராமதாசுதான். வாழப்பாடி பெட்ரோலிய மந்திரி பதவியை வைத்து பெட்ரோல் பங்கு, காஸ் ஏஜென்சி, காஸ் கூப்பன் ஆகியவற்றிலும் வேறு சில வியாபாரம் மூலமும் தன்னை வளப்படுத்திக் கொண்டார். கட்சிக்காரர்களுக்குப் பல சலுகைகளை வழங்கி ஆதரவு திரட்டிக் கொண்டார். அதே அளவு பா.ம.க.-வினருக் கும் சலுகைகள் செய்வார் என்று இராமதாசு எதிர்பார்ப்பதில் என்ன தவறு? வாழப்பாடி தன்சுயநலனே குறியாக இருக்கிறார். மக்கள் செல்வாக்கு இல்லாமல் தேர்தலில் தோற்ற வாழப்பாடி, பா.ம.க. மீது பழி போடுகிறார். செல்வச் செழிப்பான மத்திய மந்திரிப் பதவியை இழந்து விட்ட வெறுப்பில் இராமதாசின் செல்வாக்கைக் குலைக்க முயலுகிறார். இராமதாசின் மகன் மீதும் பா.ம.க. அமைச்சர்கள் மீதும் வீண் களங்கம் கற்பித்துப் பதவியைப் பறிக்க முயலுகிறார். மந்திரி பதவி கிடைக்காத பா.ம.க. எம்.பி.க்களை இழுக்க முயலுகிறார்" என்பது இராமதாசு தரப்பின் "நாகரீகமான" குற்றச்சாட்டு.

இந்த "நாகரீக"க் குற்றச்சாட்டெல்லாம் பழைய கதை. இரண்டு பேருக்கும் சமரசம் செய்து வைக்க தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பாக கருணாநிதி தலைமையில் நடந்த கூட்டம் தோல்வி அடைந்தது. வாழப்பாடி அக்கூட்டத்தைப் புறக்கணித்தார். இதையே சாதகமாகக் கொண்டு இராமதாசு அதிரடித் தாக்குதல் கொடுத்தார்.

"இராமதாசின் சுயநலம்தான் தமக்கிடையேயான பிளவுக்குக் காரணம். அவர் தனது ஒரிஜினல் முகத்தை வெளிக் காட்டாமல் நடித்திருக்கிறார். இப்போது ஒரிஜினல் முகத்தை வெளிக்காட்டி விட்டார். அவர் தேன் ஒழுகப் பேசுவார். பிறகு முதுகில் குத்துவார். இராமதாசின் (கேரக்டர்) குணம் பற்றி டெல்லியில் ஒரு முக்கியத் தலைவரே தன்னிடம் கேட்டார். இராமதாசு தன் மகன் அன்புமணியை அரசியல் வாரிசாக வளர்க்கிறார். பா.ம.க.வின் மத்திய மந்திரிகளை அன்புமணி தான் ஆட்டிப் படைக்கிறார்" — இவையெல்லாம் இராமதாசு மீது வாழப்பாடி நேரடியாக - பச்சையாக வீசும் குற்றச்சாட்டுக்கள்.



**வாழப்பாடியிடம் "அரசியல்" பாடம் கற்றுக் கொண்ட இராம தாசு, தினப்புரட்சி நாளேடு தொடங்க இராஜீவிடம் ஒரு கோடி ரூபாய் பெற்றது, தனது மகனுக்கு காங்கிரசு எம்.பி. வீட்டில் பெண் எடுத்து முடித்தது, அத்திருமணத் தில் ஜெயாவிடமிருந்து வைர நெக்லசு அன்பளிப்புப் பெற்றது என 15 ஆண்டுகளாக அவர் நடத்தி வரும் பிழைப்புவாத - சந்தர்ப்பவாத அரசியல் வாழப்பாடி யிடமிருந்து வேறுபட்டதல்ல.**

"என்னையும் என் குடும்பத்தையும் பற்றி அவதூறாகப் புத்தகம் போட வாழப்பாடியே ஐந்து இலட்சம் ரூபாய் கொடுத்தார். அரசியலில் யாரும் உத்தமன் கிடையாது. ஆழ்வார் திருநகரில் ஒரு தலைவருக்கு இருக்கக் கூடிய தொடர்புக்கு 100 ஏக்கர் நிலம், பெட்ரோல் பங்கு, பள்ளிக்கூடம் என்று முறைகேடாக சம்பாதித்த பணத்தில் வசதி வாய்ப்புகளை செய்து கொடுத்திருக்கிறார். இப்படிப் பலரைப் பற்றியும் ஆதாரம் இருக்கிறது. ஆனால் என்னைப் பற்றி புத்தகம் போடுகிறார்கள்".

"வாழப்பாடி எல்லாத்தையும் தலை கீழாப் பேசற ஒரு ஆள். ஒரு நொடி நேரத்தில் கூசாமல் ஆயிரம் பொய் சொல்லக்கூடியவர். இவர் அளவுக்கு கற்பனை வளத்தோடு பொய் சொல்ற ஆள் தமிழ்நாட்டுலேயே இல்லை. இப்போ வாழப்பாடியை அருவருப்பான எண்ணங்கள் கொண்ட ஒரு வழிப்போக்கன் மாதிரிதான் நெனச்சுக் கறேன். போறவழியில தனக்கு எதிரில் யார் வந்தாலும் மூஞ்சியில சாணி வாரி வீசற வழிப் போக்கனா நெனச்சுக்கறேன். அந்த ஆளோட எந்த ஒட்டும் உறவும் எந்தக் காலத் துலயும் நான் வெச்சுக்கமாட்டேன். அந்த ஆள் செத்தாக்கூட முகத்துல முழிக்க மாட் டேன். இப்படி ஒரு பிறவியை நான் வாழ்க் கையில சந்தித்தது கிடையாது." இது இராமதாசின் குமுறல் குற்றச்சாட்டு.

இராமதாசு மீதான ஊழல் குற்றச் சாட்டுக்களை, "இராமதாசுக்கு ஒரு மனந்திறந்த மடல்" என்கிற சிறுநூலாக அச்சடித்து இலட்சக்கணக்கில் பரப்பி இருக்கும் வாழப்பாடி தரப்பு, மீண்டும் புது ஆதாரங்களுடன் அச்சிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. வாழப்பாடி தன் வாய்க் கொழுப்பால் கெடுகிறார் என்பதை நிரூபிக்கும் வீடியோ கேசட் தயாரிக்கிறது இராமதாசு தரப்பு.

இரு தரப்பின் குற்றச்சாட்டுகள் - எதிர்க்


படிப்பகம்

www.padippakam.com



வாழப்பாடி, இராமதாசால் ஓரங்கட்டப்பட்ட வன்னிய அடிகளார், (நடுவே அமர்ந்திருப்பவர்), பேரா. தீரன் (வலது ஓரம்) இணைந்து நடத்திய வன்னியர் சங்க மாநில விழிப்புணர்வுக் கூட்டம்.

குற்றச்சாட்டுக்களை மீண்டும் மீண்டும் புரட்டிப் பார்த்து விட்டோம். நாம் ஆரம்பத்தில் தொகுத்துத் தந்ததைப் போன்று வாழப்பாடி - இராமதாசு இருவருக்குமிடையில் அரசியல் - கொள்கை வேறுபாடு ஒரு வெங்காயமும் இல்லை. பணத்துக்கும் பதவிக்கும் நடக்கும் பங்காளிச் சண்டை தான் இது என்பது சொல்லாமலேயே விளங்கும்.

வாழப்பாடிக்கு எம்.பி., மந்திரி பதவி கிடைக்கவும், கோடி கோடியாக அவர் சுருட்டிக் கொள்ளவும் தாமே காரணம் என்பதால் அதற்குரிய "கப்பம்" கேட்டிருக்கிறார், இராமதாசு. இப்படி நேரடியாகவே ஒரு பொதுக்கூட்டத்தில் வைத்து வாழப்பாடியிடம் காடுவெட்டி குரு கேட்டதாக ஒரு பத்திரிக்கை செய்தி வந்துள்ளது. வாழப்பாடி அப்படி எதுவும் தர மறுக்கவே வாழப்பாடியின் தலையை வெட்டுவேன் என்று மிரட்டினார்; விடயம் பெரியதாகி விடவே அதை மறுத்து விட்டார் என்பது மற்றொரு செய்தி.

"வாழப்பாடி சேலம் தொகுதி எம்.பி.யாகவும், மந்திரியாகவும் வருவதை இராமதாசின் துரோகம் தடுத்துவிட்டது; நாடாளுமன்ற மேலவை எம்.பி. பதவி தர கருணாநிதி முன்வந்தும் இராமதாசு தடுத்து விட்டது இன்னொரு துரோகம்" என்கிறது வாழப்பாடி தரப்பு.

"வசதி தேடிக் கொண்ட வாழப்பாடி, நன்றிக் கடனைச் செலுத்தாததோடு, தன் பின்னே வன்னியர் செல்வாக்கைத் திரட்டச் சதி செய்கிறார்" என்கிற இராமதாசு தரப்பு, அதற்கு மேலே, தன் மகனை இராமதாசு அரசியல் வாரிசாக்குவதையும், அமைச்சர்கள் மூலம் வளமாகி வருவதையும் வாழப்பாடி தடுக்கிறார் என்பது சொல்லப்படாத குற்றச்சாட்டு.

அரசியல் வரலாறு அறிந்தவர்களுக்கு வாழப்பாடியைத் தெரிந்திருக்கும். திராவிட இயக்கத்தின் மூலம் அரசியலுக்கு வந்த வாழப்பாடி முன்னாள் மந்திரியும் முன்னாள் அரசுத் தலைவருமான வெங்கடராமன் போன்றவர் மூலம் பசையுள்ள பெரிய மனிதர்களிடம் ஒட்டிக் கொண்டு தேர்ந்த அரசியல் தரகனாக வளர்ந்தவர். இந்திரா, இராஜீவ், ஜெயா, வாஜ்பாயி, அம்பானி போன்றவர்களின் அடிவருடியாகச் செயல்பட்டே வசதி தேடிக் கொண்டவர். பணத்துக்கும் பதவிக்கும் யார் காலையும் நக்கும் குணங் கொண்டவர். இதையெல்லாம் மூடிமறைக்கும் வெற்றுச் சவடால் அடிப்பதில் வல்லவர்.

இதையெல்லாம் வாழப்பாடியிடம் கற்றுக் கொண்டு குருவை மிஞ்சிய சீடனாகிவிட்டார் இராமதாசு. "தினப்புரட்சி" நாளேடு தொடங்க இராஜீவிடம் ஒரு கோடி ரூபாய் பெற்றது, தனது மகனுக்கு காங்கிரக எம்.பி. வீட்டில் பெண் பார்த்து முடித்தது, அத்திருமணத்தில் ஜெயாவிடமிருந்து 5 இலட்சம் ரூபாய் வைர நெக்லசு அன்பளிப்புப் பெற்றது முதற்கொண்டு இராமதாசின் பச்சோந்தித்தனத்தை அவ்வப்போது அம்பலப்படுத்தி வந்திருக்கிறோம். கடந்த 15 ஆண்டுகளில் இராமதாசு ஆடிய சந்தர்ப்பவாத அரசியல் கூத்து, வாழப்பாடியை விட எந்த வகையிலும் வேறுபாடானதில்லை.



திராவிட இயக்கத்தின் மூலம் அரசியலுக்கு வந்த வாழப்பாடி, வெங்கடராமன் போன்ற பெரிய மனிதர்களிடம் ஒட்டிக் கொண்டு தேர்ந்த அரசியல் தரகனாக வளர்ந்தவர்; இந்திரா, இராஜீவ், ஜெயா, வாஜ்பாயி, அம்பானி போன்றவர்களின் அடிவருடியாகச் செயல்பட்டு, வசதி தேடிக் கொண்டவர். பணத்துக்கும் பதவிக்கும் யார் காலையும் நக்கும் குணங் கொண்டவர்.

பொதுவுடைமை, திராவிட, தலித் இயக்கங்களின் ''முற்போக்கான'' புரட்சிகர கொள்கைகளைக் கலந்து, ஓட்டுக் கட்சிகளிலேயே மிகவும் புரட்சிகரமான திட்டத்தை முன்வைத்து, அத்தலைவர்களின் படத்தைப் போட்டுச், சவடாலடித்து, சமூக நீதி, தலித் சாதிகளின் கூட்டணி கட்டி எதையோ சாதித்து விடலாம் என்று பேராசிரியர் கல்யாணி போன்ற அறிஞர் பெருமக்கள் உசுப்பிவிட்ட சொக்கத் தங்கந்தான் டாக்டர் அய்யா இராமதாசு; இன்று பித்தளையாகி இளிக்கிறது. அவர்களால் போர்க்குணமிக்க சிங்கங்கள் என்று வர்ணிக்கப்பட்ட வன்னிய குலச் சத்தரியர்கள் இன்று திராவிடக் கட்சிப் பிழைப்புவாதிகளைப் போலாகி விட்டார்கள். அதனால்தான் இராமதாசின் சந்தர்ப்பவாத ஆட்டத்திற்கே அச்சாரமாக விளங்குகிறார்கள்.

பேராசிரியர்கள் கல்யாணி, தீரன் போன்றவர்கள் தமிழகத்தின் வடமாவட்ட சமூகநீதிக் கட்சிகளிடையே இரத்தக் களறி நடப்பதைத் தடுக்க ஒரு முயற்சி செய்ய வேண்டும். வெறும் சமுதாய ஆள்பலம் இருந்தால் மட்டும் போதாது, வாழப்பாடியைப் போல மேலிடத் தொடர்பு அரசியல் முன்னேற்றத்துக்கு அவசியம் என்று இராமதாசிடம் எடுத்துச் சொல்ல வேண்டும். காங்கிரசு ஏஜெண்டுகளும் பண வசதியும், மேலிடத் தொடர்பு மட்டும் போதாது, இராமதாசைப் போல சமுதாய ஆள் பலம் இருந்தால்தான் தேர்தல்களில் வெற்றி பெற முடியும் என்று வாழப்பாடிக்கு உணர்த்த வேண்டும். இதுதான் தேர்தல் அரசியலின் [illegible]சமம் என்று பேராசிரியர் கள் இருவருக்கு[illegible] கூட்டு வகுப்பு நடத்த வேண்டும்.

கூடவே, ஒரு தீர்வும் முன் வைக்கலாம். வன்னிய சமுதாயத் தலைமைப் பதவிக்கு இட ஒதுக்கீடு செய்யலாம். இந்த அணி வெற்றி பெற்றால் இராமதாசும், வாழப்பாடியும் ஆண்டுக்கு ஒருவராகச் சுழற்சி முறையில் தமிழக முதல்வராக மாறி மாறிப் பொறுப்பு வகிக்கலாம்!

● ஆர்.கே.


படிப்பகம்

www.padippakam.com

**தலையங்கம் தொடர்ச்சி**

உண்மை. அந்தச் சித்தாந்தத்தை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழ்நாட்டில் இருப்பது பா.ஜ.க. பிரச்சினை அல்ல; அது அகில இந்தியாவில் உள்ள பிரச்சினை. இங்கு அதன் ரோல் ரொம்ப மினிமம். அதனால் அதைப் பற்றி அதிகம் கவலைப்பட வேண்டியதில்லை. 'தாழ்த்தப்பட்டவர் களுக்கு எதிராக இருக்கும்' என முதலில் பா.ஜ.க. அரசு சித்தரிக்கப்பட்டது. ஆனால், இப்பொழுது தாழ்த்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீட்டை உறுதி செய்ததுடன், பேக்லாக் வேகன்சிகளையும் இட ஒதுக் கீட்டின்படி தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக் கப்பட்டு, காலியாக உள்ள அரசு பதவிகள்) ஃபில்அப் செய்வோம் என்று அறிவித்திருக் கிறது." பிற ஓட்டுப் பொறுக்கிகளையும் விட கேடு கெட்டவர் தான் என்பதை இதன்மூலம் கிருஷ்ணசாமி வெளிப்படுத்திக் கொள்கிறார். தனது ஓட்டுக்கட்சி அரசியலுக்குப் பொருத்தமாக விளக்கம், வியாக்கியானம் எல்லாம் தருகிறார்.

ஓராண்டுக்கு முன்பாகவே இந்த நிலைக்கு திருமாவளவன் போய்விட்டார். கடந்த தேர்தலின் போது, ஒரு சீட்டுக் கூடக் கொடுக்காமல் ஜெயா - சசி கும்பல் விரட்டியபோது மூப்பனாரைத் தஞ்சம் அடைந்த திருமாவளவன், அதற்கு முன்பாகவே ஓட்டுக்கட்சி அரசியலில் புகுந்ததற்கான பரப்புரை எல்லாம் ஆற்றிவிட்டார். கடந்த சில ஆண்டுகளாக நடத்திய போராட்டங்களால் கொலை வழக்குகள் உட்பட பல கிரிமினல் வழக்குகளை அமைப்பின் பிரமுகர்கள் சந்திக்க வேண்டியிருக்கிறது; பாதிக்கப் பட்டவர்களின் வாழ்க்கைப் பிரச்சினை களும் அதிகமாகி விட்டன. பதவி, அதிகாரத் தொடர்பு இருந்தால்தான் அமைப்புப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பதுதான் விடுதலைச் சிறுத்தைகளின் வாதம். சிறுத்தைகள் அம்மாக்களின் கூடாரத்தில் தஞ்சமடைந்து விட்டதால் நல்ல தீனியும் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அடங்க மறுப்போம்! அத்து மீறுவோம்! என்று கிளம்பியவர்கள், தெற்கே ஒரு புரட்சி நட்சத்திரம் என்று போற்றப்பட்டவர்கள் ஆரம்பத்தில் ஆதிக்க சாதிகளை எதிர்த்து ஆவேசக்குரல் எழுப்பினார்கள். கம்யூனிசப் புரட்சியாளர்களுக்கு எதிராக அவதூறுப் பிரச்சாரம் செய்தார்கள். ஓரளவு ஆதரவு திரட்டிய பிறகு பதவி, அதிகாரத்தில் பங்கு இருந்தால்தான் அமைப்புகளைத் தக்க வைத்துக் கொள்ள முடியும் என்ற நிலை எடுத்துள்ளார்கள். விடுதலை அரசியல் - சித்தாந்தம் எதுவுமின்றி, அம்பேத்கர் என்ற அடையாளச் சின்னத்தை மட்டுமே கொண்டு திரட்டப்பட்ட அணிகளோ, பிற ஓட்டுக் கட்சி அணிகளைப் போலவே பிழைப்புவாதக் கண்ணோட்டத்தில் மூழ்கிப் போனார்கள். இப்படிப்பட்ட இயக்கங்களை நிறுவனமயமாக்கிக் கொள்வதில்தான் ஆளும் வர்க்கங்களின் - ஆதிக்க சாதிகளின் அரசியல் வெற்றியே அடங்கியிருக்கிறது.

# இன்று கோலார் தங்கச் சுரங்கம் - நாளை?

கர்நாடக மாநிலம் கோலாரிலுள்ள பாரத தங்கச் சுரங்க நிறுவனம் நட்டத்தில் இயங்குவதாகக் கூறி, தேவைக்கு அதிகமாக உள்ள தொழிலாளர்களை வெளியேற்றப் போவதாக கடந்த ஆண்டில் மைய அரசு அறிவித்தது. சுயவிருப்ப ஓய்வுத் திட்டத்தின் கீழ் வேலையிலிருந்து விலகிக் கொள்ளும் தொழிலாளிக்குச் சட்டப்படி நிவாரணம் அளிப்பதாக அறிவித்து, இந்நிறுவனத்தைத் தனியார் மயமாக்கும் ஏற்பாடுகளைச் செய்து வந்தது. இதை எதிர்த்து கோலார் தங்கச் சுரங்கத் தொழிலாளர்கள் குடும்பத்தோடு போராட்டங்களில் ஈடுபடத் தொடங்கியதும், தனியார்மய நோக்கமில்லை; நட்டத்தை ஈடு செய்ய முடியாததாலேயே வேறு வழியின்றி ஆலையை மூடுவதாக நாடகமாடிய அரசு, இறுதிக் கெடுவிதித்து இப்போது ஆலையை மூடிவிட்டது. ஏறத்தாழ 4,000 தொழிலாளர்கள் வேலையில் இருந்து துரத்தப்பட்டுவிட்டனர்.

இச்சுரங்கத்தில் பணியாற்றிய தொழிலாளர்களில் பெரும் பாலோர் தாழ்த்தப்பட்டவர்கள் ஆவர். தலைமுறை தலைமுறையாக இங்கு வேலை செய்த தொழிலாளர் குடும்பங்களுக்கு ரூ. 2 இலட்சம் வீதம் நிவாரணமாக, சுய விருப்ப ஓய்வுத் திட்டத்தின்படி வழங்கப் படும் என அரசு அறிவித்துள்ளது. இதில் தொழிலாளிகள் பெற்ற கடன் மற்றும் இதர பிடித்தங்கள் போக ரூ. 65,000 தான் ஒரு தொழிலாளி க்குக்கிடைக்கும். இத்தொகையைக் கொண்டு எதிர்காலத்தை எப்படி ஓட்டுவது என்று புரியாமல் தொழிலாளர்கள் குமுறுகிறார்கள். ஒரு காலத்தில் "குட்டி இங்கிலாந்து" என்று பெருமையாக அழைக்கப்பட்ட கோலார் நகரம் இன்று வறுமை, வேலையின்மை, நுரையீரல் நோய் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள், பள்ளிப் படிப்பைத் தொடர முடியாத குழந்தைகள், செய்வதறியாது புலம்பும் பெண்கள், வேதனையை மறைக்க சாராயப் போதைக்கு அடிமையாகும் வேலையிழந்த தொழிலாளர்கள் - எனத் துயர வெள்ளத்தில் தத்தளிக்கிறது.

கோலார் தங்கச் சுரங்கத் தொழிலாளர் குடும்பங்களின் ஆர்ப்பாட்டப் பேரணி.




தங்கச்சுரங்க நிறுவன நட்டத்தை ஈடு செய்ய, தொழிலாளர்களை வெளியேற்றி ஆலையை மூடுவதற்குப் பதிலாக, கனிமச்சுரங்கமாக மாற்றலாம் என்றும் கொள்கலன்களில் சமையல் எரிவாயு அடைக்கும் நிறுவனமாக மாற்றலாம் என்றும் தொழிலாளர்கள் ஆலோசனை கூறிய போதிலும், அரசு அவற்றைப் பரிசீலிக்கவே தயாராக இல்லை. ஆலையை மூடி, தொழிலாளர்களை விரட்டியடித்து விட்டு, பிரச்சினை ஏதுமின்றி தனியார்மயமாக்கி விடும் நோக்கத்தோடு, தொழிலாளர் வாழ்வை ஆட்சியாளர்கள் சூறையாடி விட்டனர்.

கோலார் தங்கச் சுரங்கத்தில் இதுவரை 600 டன் தங்கம் வெட்டி எடுக்கப்பட்டுள்ளது. அதன் இன்றைய மதிப்பு ஏறத்தாழ ரூ. 45,000 கோடி. ஆனால் தந்தை - மகன் எனத் தலைமுறை தலைமுறையாக இச்சுரங்கத்தில் உழைத்து உருக்குலைந்து இன்று வேலையிலிருந்து விரட்டப்பட்டுள்ள தொழிலாளிக்கு நிவாரணமாக கிடைப்பதோ ரூ. 2 இலட்சம். 4000 தொழிலாளிக்கு எனில் ரூ. 80 கோடி. ரூ. 45,000 கோடிக்கு சொத்தை உருவாக்கிய தொழிலாளர்களுக்கு இன்று கிடைத்திருப்பது ரூ. 80 கோடி நிவாரணத் தொகையும் வேலை நீக்கமும் நோயும்தான்.

இந்த அநீதியையும், ஆட்சியாளர் களின் தனியார்மய - தாராளமயக் கொள்கையையும் எதிர்த்து ம.க.இ.க., பு.மா.இ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் கோலாரில் கண்டனப் பொதுக்கூட்டம் நடத்தி, ஆலை மூடலுக்கு எதிராகப் போராடும் தொழிலாளர் குடும்பங்களுக்கு ஆதரவாக நிற்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

## கிளிண்டன் வருகை

# அமெரிக்காவின் ஆதிக்கமும் அடிமைகளின் ஆரவாரமும்

இந்தியாவிற்கு எத்தனையோ வெளிநாட்டு அதிபர்கள்/பிரதமர்கள் வந்து போயிருக்கிறார்கள். அப்படி அவர்கள் வந்து போனது பத்திரிகைகளில் செய்திகளாக வெளியானதைத் தவிர, வேறு எந்தவிதமான பரபரப்பையும் ஏற்படுத்தி இருக்காது. ஆனால், அமெரிக்க அதிபர் கிளிண்டனின் இந்திய வருகை பத்தோடு பதினொன்றாக, பரபரப்பில்லாத வெறும் பத்திரிகைச் செய்தியாக அமைந்து விடவில்லை.

கிளிண்டனுக்கும், அவரது மகளுக்கும், மாமியாருக்கும், பாதுகாப்பு அதிகாரிகளுக்கும், பா.ஜ.க. கூட்டணி அரசு காட்டிய ராஜ மரியாதையும், உபச்சாரமும், பணிவும், பத்திரிகைகள் ஊட்டிய பரபரப்பும் ஒரு வேளை கிளிண்டன் பரிவாரத்தைக் கூட கூசச் செய்திருக்கலாம்.

"அமெரிக்கா, உலகிலேயே மிகப் பெரிய பணக்கார நாடு; சோவியத் யூனியன் சிதைவுக்குப் பின் எஞ்சியிருக்கும் உலகின் ஒரே மேலாதிக்க வல்லரசு; "சூப்பர் பவர்;" உலகின் பெரும்பாலான நாடுகளின் தலையெழுத்தைத் தீர்மானிக்கக் கூடிய சக்தி படைத்த நாடு. எனவே, முன்புபோல "அணி சேராமை" என்று வறட்டுத் தத்துவம் பேசிக் கொண்டிராமல், "அமெரிக்காவுடன் ஒட்டிக் கொள்வதுதான் புத்திசாலித் தனமானது; நாட்டின் முன்னேற்றத்துக்கு நல்லது" - இது, பா.ஜ.க.வும், இந்தியாவிலுள்ள அமெரிக்க ஆதரவாளர்கள் / நண்பர்கள் கூறும் வாதம்.

சோவியத் யூனியனுக்கும், அமெரிக்காவுக்கும் பனிப்போர் நடைபெற்று வந்த காலத்தில், இந்தியா சோவியத் யூனியன் ஆதரவு நாடாக இருந்தது. இந்தச் சமயத்தில், இந்திய ஆட்சியாளர்கள் தங்களது ஏகாதிபத்திய அடிவருடித்தனத்தை "அணி சேராமை" என்ற பெயரில் மூடிமறைத்து வந்தனர். இந்து மதவெறிக் கும்பல் இந்தப் பெயரளவிலான அணி சேராமையைக் கூட ஏற்றுக் கொள்ளாதவர்கள். சோவியத் யூனியனுக்குப் பதிலாக, இந்தியா அமெரிக்காவின் அணியில் சேர வேண்டும் என்று கூறி வந்தவர்கள்.

1980-களில் சோவியத் யூனியனில் நெருக்கடிகள் வெடித்துக் கொண்டிருந்த பொழுதே, இந்தியா, இந்திரா - ராஜீவ் ஆட்சிக் காலத்திலேயே, அமெரிக்கா பக்கம் சாயத் தொடங்கிவிட்டது. சோவியத் யூனியன் சிதைந்த பிறகு, இந்திய ஆட்சியாளர்களுக்கு அமெரிக்காவின் அரசியல் - பொருளாதார மேலாதிக்கத்தை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு போக்கிடம் இல்லாமல் போய்விட்டது. எனவே, இந்தியா இப்பொழுது அமெரிக்கா சாய்ந்திருப்பது, பா.ஜ.க.வின் புத்திசாலித்தனமும் இல்லை; ராஜதந்திரமும் இல்லை.

★★★

கிளிண்டனை வரவேற்பதில் நாட்டின் சுயமரியாதையைக் காற்றில் பறக்கவிட்டு விட்டார்களே என ஆத்திரப்படும் சராசரி இந்திய நாட்டினரைக் கூட, "நாட்டின் முன்னேற்றம்" குறுக்கே புகுந்து சமாதானப்படுத்திவிடக் கூடும்.

கிளிண்டன் இந்தியாவிற்கு வருவதற்கு ஒரு மாதம் முன்னதாக பா.ஜ.க கூட்டணி அரசு, அரிசி, கோதுமை, பால் போன்ற பொருட்களைத் தாராளமாக வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து கொள்வதற்கு அனுமதித்தது. இது, கிராமப்புற மக்களின் / விவசாயிகளின் வாழ்க்கையைச் சீரழித்துவிடும் அபாயம் நிறைந்தது என்பதால், இந்த இறக்குமதி கட்டுப்பாடு தளர்வுக்கு எதிராக நாடெங்கும் எதிர்ப்புகள் கிளம்பின. இப்படி, ஒருபுறம் கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையைக் கேள்விக் குறியாக்கிவிட்டு, மறுபுறம், அமெரிக்க - இந்தியா இடையே நட்பு பலப்பட்டால், நாட்டின் பொருளாதாரம் முன்னேறும் எனக் கூறுவது கேழ்வரகில் நெய் வடியும் கதைதான்! ஏனென்றால், அமெரிக்காவை தாஜா செய்வதற்காகதான், அரிசி, கோதுமை, பால் பொருட்கள் மீதிருந்த இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன.

'தெற்காசியாவைப் பொருத்தவரை, அமெரிக்க மாமாவிற்கு, இனி இந்தியாதான் எல்லாம்' என பா.ஜ.க. தலைவர்கள் தங்களின் ராஜதந்திர வெற்றியை மெச்சிக் கொள்ளுகிறார்கள். பா.ஜ.க. தம்பட்டம் அடித்துக் கொள்ளுவதைப் போல, அமெரிக்க பாகிஸ்தானை ஓரங்கட்டி விட்டதா என்பது ஒருபுறமிருக்கட்டும். பனிப்போர்க் காலம் வரை, தெற்காசியப் பகுதியில் அமெரிக்காவின் அடியாளாகச் செயல்பட்ட பாகிஸ்தானின் இன்றைய நிலை என்ன? அதனின் பொருளாதாரம் திவாலாகிக் கிடக்கிறது. அந்நாட்டில், பெயரளவில் நிலவி வந்த சனநாயகத்தையும் ஒழித்துக் கட்டி, இராணுவ சர்வாதிகாரிகளை வளர்த்து விட்டதே அமெரிக்க ஏகாதிபத்தியம்தான்.

பாகிஸ்தானின் அனுபவத்தையும், இந்தியாவின் உள்நாட்டுப் பொருளாதார நிலைமைகளையும் வைத்துப் பார்க்கும்பொழுது இந்தியா - அமெரிக்கா நட்புறவு பலப்படுவதால், அடித்தட்டு இந்திய மக்களின் வாழ்க்கைக்குப் பயனில்லை எனும்பொழுது, பா.ஜ.க. தலைவர்களும், பிறரும் எந்த இந்தியர்களின் முன்னேற்றம் குறித்துப் பேசுகிறார்கள்?

இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு வேலைக்குச் செல்லுவதற்கு வழங்கப்படும் விசாக்களின் எண்ணிக்கையைக் கூட்டுவது குறித்தும், அமெரிக்காவில் வேலையில் இருக்கும் இந்தியத் தொழில்நுட்ப வல்லுநர்களின் மீது விதிக்கப்படும் இரட்டை வரி விதிப்பு முறையை நீக்குவது குறித்தும் கிளிண்டனுடன் பேச்சு வார்த்தை நடந்தது. இது, அமெரிக்கா செல்லுவதற்காக இந்தியாவிலுள்ள அமெரிக்கத் தூதரக வாசல்களில் காத்துக் கிடக்கும் அம்பிகளுக்கு வேண்டுமானால், தித்திப்பான தகவலாக இருக்கலாம்; ஆனால், கிளிண்டன் வருகைக்கு முன்னதாக ரேஷனில் வழங்கப்படும் அரிசி, மண்ணெண்ணெய் விலையை உயர்த்தியதால் இடிந்து போய்க் கிடப்பவனின் வாழ்க்கைக்கும், இந்தப் பேச்சு வார்த்தைக்கும் என்ன நேரடி சம்பந்தம் இருக்க முடியும்?

கிளிண்டன் வருகையின்பொழுது, 400 கோடி அமெரிக்க டாலர் பெறுமான (18,000 கோடி ரூபாய்) தொழில் - வர்த்தக ஒப்பந்தங்கள் போடப்பட்டன. இது, கடந்த பத்தாண்டுகளில் ஆண்டொன்றுக்குச் சராசரியாக இந்தியாவினுள் நுழைந்த மொத்த நேரடி அந்நிய முதலீட்டைவிட அதிகமானது. கிளிண்டனின் வருகை இந்தியாவில் முதலீடு செய்ய அந்நிய முதலாளிகளுக்கு இருந்த தயக்கத்தை உடைத்துவிட்டதை, இந்த அதிகரிப்பு காட்டுவதாக பா.ஜ.க. அரசு கூறிக் கொள்கிறது. ஆனால், இந்தியாவின் மீது 'நம்பிக்கை' வைத்து, கிளிண்டனுடன் கூட வந்த அமெரிக்க முதலாளிகளோ, இந்தியப் பொருளாதாரத்தை இன்னும் தாராளமயமாக்குவதில் இந்தியா தயக்கம் காட்டக் கூடாது என்கிறார்கள்.

கடந்த பத்தாண்டுகளாக, தாராளமயம் -



படிப்பகம்

www.padippakam.com

தனியார்மயம் தான் இந்திய அரசின் பொருளாதாரக் கொள்கையாக இருந்து வருகிறது. சிறுதொழில் நசிவு, பொதுத்துறை விற்பனை, ஆட்குறைப்பு, ஆலைமூடல், வறுமை அதிகரிப்பு - இவைதான் தாராளமயம் - தனியார்மயத்தால் இந்திய உழைக்கும் மக்கள் கண்ட பலன். இந்தியப் பொருளாதாரத்தை இன்னும் தாராளமயமாக்க வேண்டும் என்றால், இந்தக் கோர விளைவுகள் இன்னும் தீவிரமாக இந்திய மக்களைத் தாக்கும் என்பது மட்டுமல்ல; காலனி ஆட்சியின் பொழுது பிரிட்டிஷ் முதலாளிகள் எவ்விதத் தடையுமின்றி இந்தியாவின் வளத்தைச் சுரண்டிச் சென்றதைப் போல, அமெரிக்க முதலாளிகளின் தடையற்றக் கொள்ளைக்கு வழி ஏற்படுத்தித் தருவதும் ஆகும்.

கிளிண்டனுடம் நடந்த பேச்சு வார்த்தையின் பொழுது, இதற்கான அதிகாரபூர்வ அமைப்புகள் உருவாக்கப் பட்டுள்ளன.

அமெரிக்காவின் நிதிமூலதனம் இன்னும் அதிக அளவில் இந்தியாவினுள் நுழைவதற்கு வசதி ஏற்படுத்தித் தருவதற்காக இந்திய நிதியமைச்சர், ரிசர்வ் வங்கி மற்றும் பங்கு பத்திர பரிமாற்ற வாரிய அதிகாரிகளையும், அமெரிக்காவின் நிதித்துறைச் செயலாளர்/அதிகாரிகளையும் கொண்ட குழு; இந்தியாவிற்கும், அமெரிக்காவிற்கும் இடையே நடக்கும் வர்த்தகத்தை அதிகப் படுத்த இந்திய வர்த்தக அமைச்சரையும், அமெரிக்க வர்த்தகச் செயலரையும் கொண்ட குழு; வர்த்தகக் கொள்கைகள், எரிசக்தி, சுற்றுப்புறச்சூழல், விஞ்ஞானம் - தொழில்நுட்பம் பற்றி ஆராயும், தகவல் பரிமாற்றம் செய்து கொள்ளும் குழுக்கள்; உயர் தொழில்நுட்பம் சார்ந்த இந்தியத் தொழிற்சாலைகளின் வளர்ச்சி, தேவைகள் குறித்து ஆராய்ந்து, நேரடியாக அமெரிக்க அதிபருக்குத் தெரிவிப்பதற்காக இந்தியத் தரகு முதலாளிகளைக் கொண்ட குழு என நான்கு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே உலக வர்த்தகக் கழகத்தின் வாயிலாக பல்வேறு ஏகாதிபத்திய நாடுகளும் இந்தியாவைத் தடையின்றிச் சுரண்டிக் கொண்டிருக்கும்பொழுது, அமெரிக்க முதலாளிகளின் நலனுக்காகவே, இந்தியாவைக் கொள்ளையிடுவதில் பிற ஏகாதிபத்தியங்களை அமெரிக்கா முந்திவிட வேண்டும் என்பதற்காகவே, இந்தக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

உலகச் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பிற்காக ஜப்பான் நாட்டில் நடந்த அனைத்துலகக் கருத்தரங்கில், அமெரிக்கா தனது நாட்டிலுள்ள தொழிற்சாலைகள் வெளியேற்றும் கரியமில வாயுவை 7 சதவீதமாகக் குறைக்க வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தை அங்கீகரிக்க மறுத்து வந்த அமெரிக்காவை இதுநாள் வரை எதிர்த்து வந்த இந்தியா, கிளிண்டனுடன் கையெழுத்திட்ட சுற்றுப்புறச் சூழல் ஒப்பந்தத்தில், தனது எதிர்ப்பு பற்றி ஒரு வார்த்தைகூட சேர்க்கவில்லை. மாறாக, அமெரிக்காவின் விருப்பப்படி இந்தியாவிலுள்ள தொழிற்சாலைகள்



வெளியேற்றும் கரியமில வாயுவின் சதவீதத்தைக் குறைத்துக் கொள்ள ஒப்புக் கொண்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தை எரிசக்தி தொழில்நுட்ப வல்லுநரான பிசௌரி, "அமெரிக்கா நம்மை ஆட்டி வைக்கத் தொடங்கவிட்டது" என்று குறை கூறியுள்ளார். இது போலவே, அறிவு சார் சொத்துரிமைகளுக்குக் காப்புரிமை வழங்குவது, தொழிலாளர் நலன் மற்றும் சுற்றுப்புறச் சூழல் தொடர்பான விதிகளை உலகவர்த்தகக் கழகத்தில் சேர்ப்பது போன்ற பிரச்சினைகளில் இந்தியா எழுப்பி வரும் ஆட்சேபனைகளை மழுங்கடிக்க, அமெரிக்கா இந்தக் குழுக்களைப் பயன்படுத்திக் கொள்ளும் எனக் கருதப்படுகிறது.

இது ஒருபுறமிருக்க, அமெரிக்க அரசால் நேரடியாக நடத்தப்படும் அனைத்துலக அமைப்பான "ஜனநாயக நாடுகளின் குழு"வில் (COMMUNITIES OF DEMOCRACIES) இந்தியாவை இணைத்துக் கொள்ளவும், அமெரிக்காவை ஆதரிக்கும் இந்தியத் தரகு முதலாளிகளின் சங்கமான சி.ஐ.ஐ.-இன் தலைமையில் "ஜனநாயக அரசாட்சிக்கான ஆசிய மைய"த்தை தில்லியில் அமைக்கவும் அமெரிக்கா ஒப்புக் கொண்டுள்ளது. இந்த இரண்டு அமைப்புகளும் அமெரிக்காவின் "பொருளாதார மூளை"யாகச் செயல்படுபவை; அமெரிக்காவின் வலதுசாரி பொருளாதாரக் கொள்கையைப் பிற நாடுகளில் திணிப்பதை நோக்கமாகக் கொண்டு இயங்கி வருபவை. இதில் சேர்ந்ததன் மூலம், இந்தியாவிற்கான பொருளாதாரக் கொள்கைகளை இந்திய அரசுதான் தீர்மானிப்பது போல ஓட்டுக் கட்சிகளாலும், அதிகாரிகளாலும் நடிக்கப்பட்டு வந்த நாடகத்தை, 'சுதேசி' பா.ஜ.க. முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டது.

இப்படி வெளிப்படையாகவே நாட்டின் பொருளாதாரத்தைத் தீர்மானிக்கும் உரிமையை அமெரிக்காவிடம் அடகு வைத்துவிட்ட பா.ஜ.க. கூட்டணி அரசு, இந்தத் துரோகத்தை, "காசுமீர் பிரச்சினையில் அமெரிக்கா இந்தியாவின் நிலையை ஆதரிக்கத் தொடங்கி விட்டதாக"க் கதை கட்டியும், "அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் இந்தியா இன்னும் கையெழுத்துப் போடாமல் இருப்பதை"க் காட்டியும் மூடி மறைக்கின்றன; தங்களைத் "தேசிய" வாதிகளாக, நாட்டுப் பற்று கொண்டவர்களாகக் காட்டிக் கொள்ளுகின்றன.

காசுமீர் பிரச்சினையில் மூன்றாம் நாடு தலையிட அனுமதிக்க மாட்டோம் எனக் கூறிவந்த இந்தியா, கார்கிலில் நடந்த சண்டைக்குப் பிறகு, வெளிப்படையாகவே அமெரிக்காவின் தலையீட்டை ஏற்றுக் கொண்டது. பாக். வசமுள்ள காசுமீரும் இந்தியாவின் இணைந்த பகுதி எனக் கூறி வந்த இந்தியா, இப்பொழுது, காசுமீரை இரண்டாகப் பிரிக்கும் எல்லைக் கட்டுப்பாடு கோட்டின்புனிதத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்துள்ளது. எல்லைக் கட்டுப்பாடு கோட்டினைத் தண்டாமல் இருக்கும்படி, அமெரிக்கா, பாகிஸ்தானை வலியுறுத்த வேண்டும் எனக் கெஞ்சுகிறது. காசுமீர் பிரச்சினையில் இந்தியாதான் தனது



படிப்பகம்

www.padippakam.com

பழைய நிலைகளைக் கைகழுவி விட்டு, இறங்கி வந்துள்ளதே தவிர, அமெரிக்கா அல்ல.

காசுமீர் முசுலீம் மதத் தீவிரவாதக் குழுக்களுக்கும், ஆஃப்கான் கூலிப் படையினருக்கும் உதவும் பாகிஸ்தானைப் பயங்கரவாத நாடாக அறிவிக்க வேண்டும்; அதன் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும் என்ற இந்தியாவின் கோரிக்கையை அமெரிக்கா ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. "பாகிஸ்தான் அரசு அல்ல, பாகிஸ்தான் அரசில் உள்ள சிலர்தான் காசுமீர் தீவிரவாதிகளுக்கு உதவுகின்றனர்" என்பதுதான் அமெரிக்காவின் நிலை.

அணு ஆயுதச் சோதனை தடை ஒப்பந்தத்தில் எப்பொழுது கையெழுத்திடுவது என்பதுதான் இந்தியாவின் பிரச்சினையே தவிர, அமெரிக்காவின் நிர்பந்தத்துக்குப் பணியாமல் எதிர்த்து நிற்பதல்ல. இதற்காக, உள்நாட்டில் ஒத்தக் கருத்தை ஏற்படுத்துவதற்காக வாஜ்பாயி அனைத்துத் "தேசிய"க் கட்சிகளுடனும் பேச்சு வார்த்தை நடத்தினார். இந்தியாவிற்கு வந்த கிளிண்டனும், தன் பங்குக்கு சோனியாவை அழைத்துப் பேசிச் சென்றுள்ளார். இந்தியா, குறைந்த பட்சமாக அணு ஆயுதங்களை வைத்துக் கொள்ள அமெரிக்கா வெளிப்படையாக சம்மதம் தெரிவித்து விட்டால், இந்தியாவும் ஒப்பந்தத்தில் கையெழுத்திடத் தயாராகிவிடும். இதற்கு வசதியாகத்தான், "உலக நாடுகள் முழுவதிலும் அணு ஆயுதங்களை ஒழிப்போம்" எனக் கொள்கை பேசிவந்த இந்தியா, அதை ஓரமாக ஒதுக்கி வைத்துவிட்டு, அமெரிக்காவுடன் சேர்ந்து வெளியிட்டுள்ள அறிக்கையில், "உலகில் அணு ஆயுதங்கள் பரவுவதை அமெரிக்காவுடன் சேர்ந்து தடுப்போம்" எனக் கூறியுள்ளது.

கிளிண்டனின் வருகையின் பின்னர், "எஃப்.பி.ஐ." எனப்படும் அமெரிக்க உளவு நிறுவனத்தின் கிளையை தில்லியில் திறந்து கொள்ள பா.ஜ.க. அனுமதித்திருப்பது, அதனின் அமெரிக்க அடிவருடித்தனத்தைப் பச்சையாக எடுத்துக் காட்டியுள்ளது. இதை விமர்சிப்பவர்களுக்கு, இந்தியாவின் உளவு நிறுவனமான சி.பி.ஐ.இன் கிளை கூட அமெரிக்காவில் இயங்குகிறது எனப் பதிலடி கொடுக்கிறது, பா.ஜ.க. இந்த நொண்டிச் சமாதானம், "கூரை ஏறி கோழி பிடிக்காதவன் வானம் ஏறி வைகுண்டம் போனானாம்" என்ற பழமொழியே நினைவுபடுத்தும்.

கிளிண்டன் வருகையின்பொழுது, இந்திய உளவுத்துறை/போலீசை அமெரிக்க அதிகாரிகள் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. அமெரிக்க அதிகாரிகளால் உள்நாட்டிலேயே செல்லாக் காசாக்கப்பட்ட சி.பி.ஐ.க்கு அமெரிக்காவின் அரசியல் வாழ்வில் என்ன முக்கியத்துவம் கிடைத்து விடும்? இந்தியாவின் இரகசியங்களை இனி யாரும் அமெரிக்காவிற்கு உளவு பார்த்துச் சொல்ல வேண்டியதில்லை. "எஃப்.பி.ஐ." அமைப்பை இந்தியாவில் இயங்க அனுமதித்தின் மூலம், அமெரிக்காவிற்கு உளவு பார்ப்பதைச் சட்டபூர்வமாக்கிவிட்டது, பா.ஜ.க.

★★★




**கிளிண்டனின் வருகையை எதிர்த்துப் பல்வேறு அமைப்புகள் நடத்திய போராட்டங்கள்**

அமெரிக்கா, அணு ஆயுத பலம் பெற்றிருக்கும் இந்தியாவையும், பாகிஸ்தானையும் தன்னை எதிர்க்கத் துணியும் சக்திகளாகப் பார்க்கவில்லை. அமெரிக்காவை எதிர்க்கத் துணிந்தால், ஈராக்குக்கு நேர்ந்த கதிதான் தங்களுக்கும் கிடைக்கும் என்பதை இந்தியா - பாகிஸ்தானின் ஆளுங் கும்பல்கள் அறிந்தே உள்ளன. சீனாவும், ஈரானும்தான் ஆசியாவில் தற்பொழுது தனக்குத் தலைவலி தரும் நாடுகள் என அமெரிக்கா கருதுகிறது. சீனாவில் இருப்பதாகக் கூறப்படும் கம்யூனிசத்தைக் கண்டு அமெரிக்கா பயப்படவில்லை. மாறாக, சீனாவின் அதிகாரத்திலுள்ள டெங்கின் வாரிசுகள், தங்களது குறுகிய அரசியல் - பொருளாதார ஆதாயத்துக்காக, ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசியத்தைப் பயன்படுத்தி வருவதைத்தான் அமெரிக்கா பிரச்சினையாகப் பார்க்கிறது. ஈரானின் ஷியா முசுலீம் மதவாதத்தை அடக்க சன்னி முசுலீம்கள் நிறைந்த பாகிஸ்தானையும், சீனாவுக்கு எதிராக இந்தியாவையும் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறது.

இது ஒருபுறமிருக்க, சோவியத் யூனியன் சிதறுண்ட பிறகு, மத்திய ஆசியாவில் தனி நாடுகளாக உருவான கஜகஸ்தான், துருக்மெனிஸ்தான், உஸ்பெகிஸ்தானில் கிடைக்கும் அபரிதமான எண்ணெய் - இயற்கை வாயு வளத்தைத் தோண்டியெடுத்து விற்க, அமெரிக்கா, ஜப்பான், மேற்கு ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களும் மற்றும் சீனா, இந்தியா, ஈரான், இஸ்ரேலும் வர்த்தக ஒப்பந்தங்களைப் போட்டுள்ளன. அந்நாடுகளை உலகின் பிற பகுதிகளோடு இணைக்கும் கடல் வழிகள் இல்லாததால், அங்கு கிடைக்கும் எண்ணெய் - வாயுவைத் தரைவழிக் குழாய்களின் வழியாகத்தான் எடுத்துவர வேண்டியுள்ளது.

உஸ்பெகிஸ்தானிலிருந்தும், கஜகஸ்தானிலிருந்தும் இந்தியாவிற்கு எண்ணெய் - இயற்கை வாயுவை எடுத்து வர மூன்று தரைவழிக் குழாய்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளன. இந்த மூன்று குழாய்களும் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் வழியாகத்தான் இந்தியாவிற்கு வர முடியும். எனவே, இந்த எண்ணெய் வர்த்தகம் ஒழுங்காக நடைபெற வேண்டுமானால், இப்பகுதிகளில் நிலவி வரும் பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வர வேண்டிய தேவை உருவாகிவிட்டது. அதனால்தான், கிளிண்டன் பாகிஸ்தான் மூலமாக தாலிபானைத் தட்டி வைக்க முயலுகிறார்; "எல்லைக் கட்டுப்பாடு கோட்டை" மதித்து நடந்து கொள்ளுங்கள்; லாகூர் பேச்சு வார்த்தையை மீண்டும் தொடருங்கள் என இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் அறிவுறுத்துகிறார்.

சர்வதேச எண்ணெய் வியாபாரிகளின் இலாபத்துக்காக, கிளிண்டன் நடத்திவரும் இந்தச் சமாதான பேரத்தில், இந்தியத் தரகு முதலாளி அம்பானிக்கும் கணிசமான பங்குண்டு. கார்கில் சண்டையின் பொழுது, நவாஸ் ஷெரீப்புடன் சமாதான பேச்சு வார்த்தை நடத்துவதற்கு அம்பானிக்கு நெருக்கமான ஆர்.கே. மிஸ்ரா என்பவரைதான் பா.ஜ.க. அரசு இரகசியத் தூதராக அனுப்பியது. இந்தியாவில் ஐந்து நாட்கள் தங்கியிருந்த கிளிண்டன் இந்தியப் பிரதமருடன் விருந்துக்குப் போனது, அரசியல் பேசியது என எல்லாமாகச் சேர்த்து ஆறு மணி நேரம்தான் செலவிட்டுள்ளார். அதேசமயம், கிட்டதட்ட



படிப்பகம்

www.padippakam.com

முக்கால் மணி நேரம் ஒதுக்கி, தனியறையில் அம்பானியோடு இரகசியப் பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறார், கிளிண்டன். இதற்குக் காரணமே அம்பானி குஜராத்தில் அமைத்துள்ள மிகப் பெரும் எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைக்கு, ஈரானில் இருந்து ஆப்கான், பாகிஸ்தான் வழியாக குழாய்கள் மூலம் கச்சா எண்ணெயை எடுத்துவரத் திட்டமிட்டிருப்பதுதான். அதற்கு அவருக்குச் சமாதானம் தேவைப்படுகிறது.

பாகிஸ்தான், காசுமீரில் பயங்கரவாதத்தைத் தூண்டி விடுவதை நிறுத்தாவிட்டால், பாகிஸ்தானுக்குச் செல்லும் லாகூர் பேருந்தையும், தொடர்வண்டிப் போக்குவரத்தையும் நிறுத்தப் போவதாக அத்வானி எச்சரிக்கிறார். அதேசமயம் பாகிஸ்தான் இராணுவ சர்வாதிகார அரசோ, அம்பானி பாகிஸ்தானில் எண்ணெய்க் குழாய்களை அமைத்துக் கொள்ள அனுமதி அளித்து விட்டதாகக் கூறப்படுகிறது.

ஏகாதிபத்தியங்கள் திணிக்கும் இந்த உலகமயப் பொருளாதாரம், இந்தியா - பாகிஸ்தானிடையே நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய நிர்பந்தத்தை ஒருபுறம் உருவாக்கினாலும், இந்தியா - பாக். ஆளும் கும்பலும், ஆளும் வர்க்கக் கட்சிகளும் தங்களின் அதிகாரத்தை / செல்வாக்கைத் தக்க வைத்துக் கொள்ளுவதற்கு குறுகிய தேசிய வாத அரசியலையும் நம்பியுள்ளன. இக்குறுகிய தேசிய வெறி அரசியலை இந்திய - பாக். மக்கள் நிராகரிக்காதவரை, காசுமீர் மக்களின் சுயநிர்ணய உரிமையை இந்தியாவும், பாகிஸ்தான் ஏற்றுக் கொள்ளாதவரை, இந்தியா - பாகிஸ்தான் இடையே ஏகாதிபத்தியங்கள் திணிக்கும் சமாதானம், நிரந்தரமான, உண்மையான சமாதானமாக இருக்க முடியாது. அது, காஷ்மீரை இந்தியாவும், பாகிஸ்தானும் பங்கு போட்டுக் கொண்டிருப்பதை நிரந்தரப்படுத்துவதாகவே இருக்கும்.

★★★

அமெரிக்காவின் நட்பைப் பெறுவதற்காகக் காப்பீடு துறையைப் பன்னாட்டு நிறுவனங்களுக்குத் திறந்துவிட்ட இந்தியாவை, இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்கிய இந்தியாவை, காசுமீர் பிரச்சினை, அணு ஆயுதச் சோதனைத் தடை போன்ற உள்நாட்டு அரசியல் பிரச்சினைகளில் அமெரிக்காவின் நாட்டாண்மைக்கு அடிபணிந்துவிட்ட இந்தியாவை, சுதந்திர நாடாகக் கூற முடியுமா?

சிக்கலான இந்த அரசியல் - பொருளாதார உறவுகளை விடுங்கள்; மிகவும் வெளிப்படையாக, பாமரனும் புரிந்து கொள்ளும் விதத்தில் இந்திய சுதந்திரத்தின் / சுயாதிபத்தியத்தின் போலித்தனத்தை அம்பலப்படுத்திக் காட்டி விட்டது, பா.ஜ.க. கூட்டணி அரசு!

“அசலூர்க்காரனுக்கு இங்க என்னய்ய நாட்டாமை?” - இது சாதாரண கிராமத்து வழக்கு. கிளிண்டன் வருகையின் பொழுது இங்கு என்ன நடந்தது? கிளிண்டன் இந்தியாவில் காலடி எடுத்து வைப்பதற்கு முன்பாகவே, தில்லி, மும்பய், ஐதராபாத் நகரங்களின் கட்டுப்பாட்டை அமெரிக்க அதிகாரிகள் எடுத்துக் கொண்டனர். தில்லியில் கிளிண்டனின் விமானம் தரையிறங்கிய பொழுது, பாலம் விமான நிலையம் அமெரிக்கர்களின் கட்டுப்பாட்டில் இயங்கியது. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள், அமெரிக்க அதிகாரிகளின் எடுபிடிகளாகச் செயல்பட்டனர்.

இந்தியாவில் இயங்கும் போராளிக் குழுக்கள், தங்கள் செல்வாக்குமிக்க பகுதிகளில் வரி - வசூல் நடத்தினால், இணையான அரசாங்கம் நடத்துகிறார்கள் என ‘தேச’ப் பற்றோடு அம்பலப்படுத்தி எழுதும் ‘தேசிய’ப் பத்திரிகைகள், கிளிண்டன் தங்கியிருந்த தில்லி மௌரியா விடுதி, வெள்ளை மாளிகையாக மாற்றப்பட்டதைப் பெருமையோடு குறிப்பிட்டு எழுதின. எத்துணை அமெரிக்க அதிகாரிகள் வந்திருக்கிறார்கள், அவர்கள் எப்படி தில்லியைக் கட்டுப்படுத்துகிறார்கள் என்பதையெல்லாம் விலாவாரியாகக் குறிப்பிட்டு, ‘அவாள் திறமை, நமக்குக் கிடையாது’ என்று அசடு வழிந்தன. இந்தியர்களுக்குத் தங்களை ஆண்டு கொள்ளும் திறமை கிடையாது என்று கூறித்தான், வெள்ளைக்காரன் நம்மை இருநூறு ஆண்டுகள் அடிமைப்படுத்தி வைத்திருந்தான். இப்பொழுது அமெரிக்காவா?

கிளிண்டனின் உயிருக்குத் தீவிரவாதிகளால் ஆபத்து ஏற்படலாம்; அதனால்தான் இந்த ஏற்பாடு என்கிறார்கள் அமெரிக்காவின் பாதந்தாங்கிகள். எத்தனையோ ஐரோப்பிய நாடுகளுக்குக் கூடத்தான் கிளிண்டன் சென்று வந்திருக்கிறார். அந்த நாடுகளில் எல்லாம் இந்த மாதிரியான ஏற்பாடுகள் நடைபெற்றதில்லையே!

பிரதமர் வாஜ்பாயி செப்டம்பரில் அமெரிக்கா செல்லவிருக்கிறார். அவரைக் கூடத்தான் தீவிரவாதிகள் குறி வைத்துள்ளதாகக் கூறப்படுகிறது. அதனால் அமெரிக்காவில் வாஜ்பாயி செல்லுமிடங்களின் பாதுகாப்பை இந்தியப் போலீசு அதிகாரிகளிடம் ஒப்படைத்து விடுங்கள் எனக் கேட்டால், இந்திய அரசைப் போல அமெரிக்க அரசு தூக்கிக் கொடுத்து விடுமா?

தெற்காசிய ‘பயங்கரவாத’ பிரச்சனையில் மூக்கை நுழைக்கும் அமெரிக்காவிடம், மத்திய அமெரிக்க நாடுகளில் தலைவிரித்தாடும் ‘தீவிரவாத - பயங்கரவாத பிரச்சினையை’ இந்தியாவிடம் ஒப்படைத்து விடுங்கள்; நாங்கள் தீர்த்து வைக்கிறோம் என்று வாஜ்பாயி கூறினால், அமெரிக்கா, பூம்பூம் மாடு போல தலையாட்டி விடுமா?

பல ஐரோப்பிய நாடுகளும் கிளிண்டனின் உயிரைவிட, தங்களின் சுயாதிபத்தியத்தை மேலாக மதிக்கும் பொழுது, இந்தியாவில் மட்டும் தலைகீழாக நடைபெற்றது ஏன்? அந்நாடுகளில் இருப்பது சுதந்திரம்; இங்கே இருப்பது போலித்தனம். இந்தியாவின் போலி சுதந்திரத்தை, போலி சுயாதிபத்தியத்தை கிளிண்டனின் வருகை பளிச்சென, பட்டவர்த்தனமாக அம்பலப்படுத்திக் காட்டிவிட்டது!

● ரஹீம்



**கிளிண்டனோடு பேச்சுவார்த்தை நடத்திய அம்பானியும், அவரது இரு மகன்களும்: எண்ணெய் வயல் அதிபர்கள் தெற்காசியாவின் சமாதானத் தூதுவர்களா?**


படிப்பகம்

# பறி போகிறது தொழிற்சங்க உரிமை

நாட்டை மீண்டும் காலனியாக்குவதற்கு ஏற்புடைய வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்தக் கிளம்பியுள்ள ஆளும் இந்துவெறிக் கூட்டணி அரசு, அதன் தொடர்ச்சியாக இப்போது இந்தியத் தொழிற்சங்கச் சட்டத்தையும் திருத்த முடிவு செய்துள்ளது.

1926-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்தியத் தொழிற்சங்கச் சட்டம்தான் இன்றுவரை நடைமுறையில் உள்ளது. இச்சட்டப்படி, ஒரு தொழில் நிறுவனத்தில் பணியாற்றும் 7 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளிகள் ஒரு தொழிற்சங்கமாகத் திரண்டு, தமது சங்கத்தைச் சட்டப்படி அங்கீகரிக்கப்பட்டதாகப் பதிவு செய்யக் கோரி விண்ணப்பிக்க முடியும். ஆனால், புதிய சட்டத் திருத்தத்தின்படி, இனி 7 தொழிலாளிகள் சங்கமாக அணிதிரண்டால், அதை அரசு அங்கீகரிக்காது. குறிப்பிட்ட தொழில் நிறுவனத்தின் மொத்தத் தொழிலாளர்களில் 10% பேரை உறுப்பினர்களாகக் கொண்டுள்ள சங்கத்தை மட்டுமே அரசும் நிர்வாகமும் அங்கீகரிக்கும். இதன் மூலம், அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்களின் எண்ணிக்கையைக் குறைத்து, சங்கம் சேரும் உரிமையையும் முடக்கிவிட ஆளும் கூட்டணி அரசு முயற்சிக்கிறது.

உதாரணமாக, ஆந்திராவிலுள்ள சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கத்தில் 1,20,000 தொழிலாளிகள் பணிபுரிகின்றனர். அங்கு 70-க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் உள்ளன. ஆனால், எந்த சங்கத்தின் கீழும் 10% தொழிலாளிகள் - அதாவது 12,000 பேர் இல்லை. இந்நிலையில், புதிய சட்டம் நடைமுறைக்கு வந்தால் அனைத்துச் சங்கங்களுமே செயல்பட முடியாமல் போய்விடும்.

இதேபோல, போக்குவரத்துத் துறையில் ஒரு இலட்சத்துக்கும் மேலான தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். இவர்கள் மாநிலத்தின் பல பகுதிகளில் பணியாற்றும் நிலையில், இவர்களில் 10% பேரை - அதாவது 10,000 பேரை ஒரு சங்கம் தனது தலைமையின் கீழ் அணி திரட்டுவது என்பது மிகவும் சிரமமானது. இந்நிலையில் எந்தச் சங்கமுமே அங்கீகாரம் பெறவோ, நிர்வாகத்துடன் பேச்சு வார்த்தை நடத்தவோ வழியில்லாமல் முடமாக்கப்படும்.

டி.வி.எஸ். போன்ற மருந்தளவுக்குக் கூட உரிமைகள் இல்லாத முதலாளித்துவ தொழில் நிறுவனங்களில், தற்போதைய சட்டப்படி குறைந்த பட்சம் 7 பேரைச் சங்கமாக அணிதிரட்டுவதே பெரும்பாடாக உள்ளது. நிர்வாகத்தின் எடுபிடி சங்கத்தைத் தவிர மற்ற சங்கங்களில் சேர முயற்சிக்கும் தொழிலாளிகளைப் பழிவாங்கி வேலையிலிருந்து விரட்டியடிப்பதும், குண்டர்களை வைத்துத் தாக்குவதும் இத்தகைய நிறுவனங்களில் சர்வசாதாரண நடைமுறையாக உள்ளது. இங்கெல்லாம் புதிய மாற்றுச் சங்கத்தை உருவாக்குவதும் அதைக் கட்டிக்காப்பதும் மிகப் பெரிய போராட்டமாகவே உள்ளது. இந்நிலையில், 10% தொழிலாளர்கள் இருந்தால்தான் சங்கத்தை அங்கீகரிக்க முடியும் என்று சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டால், இத்தகைய நிறுவனங்களில் நிர்வாகத்தின் எடுபிடி - கருங்காலி சங்கத்தைத் தவிர வேறு எந்தச் சங்கமும் இருக்கவே முடியாது.

தொழிற்சங்க நிர்வாகிகளில், குறிப்பிட்ட ஆலையின் தொழிலாளி அல்லாத வெளியாட்களைக் கட்டுப்படுத்தும் வகையில் இன்னுமொரு சட்டப்பிரிவு திருத்தப்பட உள்ளது. தற்போதைய தொழிற்சங்கச் சட்டப்படி, சங்க நிர்வாகிகளில் குறிப்பிட்ட ஆலையின் தொழிலாளிகள் பாதிப்பேரும், வெளியாட்கள் பாதிப் பேருமாக இருக்க முடியும். புதிய சட்டப்படி, மொத்த நிர்வாகிகளில் வெளியாட்கள் மூன்றில் ஒரு பங்கிற்குக் குறைவாகவே இருக்க வேண்டும்.




தற்போதைய தொழிற்சங்கங்களில் பணி ஓய்வு பெற்ற மூத்த அனுபவமிக்க தொழிலாளி அல்லது பணி நீக்கப்பட்ட பழிவாங்கப்பட்ட முன்னணித் தொழிலாளிகள் சங்க நிர்வாகிகளாக உள்ளனர். புதிய சட்டம் இவர்களைக் குறிப்பிட்ட ஆலையின் தொழிலாளிகளாக ஏற்காமல், வெளியாட்கள் என்கிறது. பழிவாங்கப்பட்ட/பணி நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளிகள் சங்கத் தலைமையில் இருந்து கொண்டு, அக்குறிப்பிட்ட ஆலையில் தொடரும் தொழிலாளர் போராட்டத்தை வழிநடத்தி முன்னெடுத்துச் செல்ல விடாமல், போராட்டத்தை முடமாக்குவதற்கான ஏற்பாடுதான் இது.

www.padippakam.com

இதேபோல, சட்ட உதவிக்காக வழக்கறிஞர்கள் பலர், தொழிற்சங்கங்களில் நிர்வாகிகளாக உள்ளனர். குறிப்பிட்ட ஆலையின் தொழிலாளி அல்லாத வெளிநபர் என்று காரணம் காட்டி இனி அவர்களும் தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவது பறிக்கப்படும்.

மற்றொரு சட்டத் திருத்தத்தின்படி, தொழிற் சங்கங்கள் ஆண்டுதோறும் தமது வரவு - செலவு கணக்குகளைத் தணிக்கை செய்ய வேண்டும். இல்லையேல், அவற்றின் அங்கீகாரம் ரத்து செய்யப்படும்.

கணக்குகளைத் தணிக்கை செய்ய வேண்டும் என்பது பொதுவில் சரியானதாகத் தோன்றினாலும், இதிலும் தொழிற்சங்க உரிமை பறிக்கும் சதி நடவடிக்கைகள் மறைந்துள்ளன. தொழிற்சங்கம் என்பது தொழிலாளி வர்க்கத்தின் உரிமைக்காக நிற்கும் ஒரு போராட்ட அமைப்பாகும். மாறாக, இலாப - நட்டக் கணக்கு பார்க்கும் முதலாளித்துவ நிறுவனம் அல்ல.

ஒரு குறிப்பிட்ட ஆலையில் வேலை நிறுத்தப் போராட்டமோ, ஆலை மூடலோ அல்லது முன்னணியாளர்கள் பழிவாங்கப் பட்டுக் கைதாகி உள்ள நிலையில், இப்போராட்டத்துக்குத் தலைமை தாங்கும் தொழிற் சங்கம் தனது செயற்குழு, பொதுக்குழு கூட்டத்தைக் கூட்டவோ, அல்லது மாநாடு நடத்தவோ சாத்தியமில்லை. பொதுக்குழு கூட்ட முடியாத நிலையில் ஓராண்டு கணக்குகளை இறுதியாக்கி, தணிக்கை செய்யவும் வாய்ப்பில்லாமல் போய்விடும். இதைக் காரணம் காட்டி சங்கத்தின் அங்கீகாரத்தையே ரத்து செய்து விடும் வகையில்தான் புதிய சட்டத் திருத்தம் கொண்டு வரப்படுகிறது.

மேலும் இச்சட்டத் திருத்தங்கள் பற்றி தொழிற்சங்கங்களிடம் கருத்து கேட்கவோ, சுற்றுக்கு விடவோ செய்யாமல் ஆட்சியாளர்கள் தன்னிச்சையாகவே இவற்றைத் திணிக்க முயற்சிக்கின்றனர். தொழிற்சங்க சட்டம் மட்டுமின்றி, தொழிற் தகராறு சட்டம், ஒப்பந்தத் தொழிலாளர் சட்டம், சம்பளப் பட்டுவாடா சட்டம் ஆகியனவும் இதே நோக்கத்தோடு திருத்தப்பட உள்ளன.

மொத்தத்தில் நாட்டை மீண்டும் காலனியாக்குவது, அதற்கேற்ப அரசியல் சட்டத்தைத் திருத்துவது, தொழிற்சங்க - ஜனநாயக உரிமைகளைப் பறிப்பது எனச் சட்டப்பூர்வமாகவே பாசிச சர்வாதிகாரத்தைத் திணிக்க ஆளும் கும்பல் மூர்க்கமாகக் கிளம்பி விட்டது. இத்துரோகக் கும்பலை முறியடிக்க தொழிலாளி வர்க்கமும் அனைத்து உழைக்கும் மக்களும் ஓர் அரசியல் புரட்சியில் இறங்குவதைத் தவிர, இனி வேறுவழியுமில்லை. அத்தகைய அரசியல் கிளர்ச்சிகள், அரசியல் போராட்டங்களை நடத்தத் திராணியின்றி, தொழிற்சங்கவாத - பொருளாதாரவாதச் சகதியில் தொழிலாளி வர்க்கத்தை மூழ்கடித்து விட்ட தொழிற்சங்கத் தரகர்கள், இப்பாசிசத் தாக்குதல்களை எதிர்கொள்ள முடியாமல் கையைப் பிசைந்து கொண்டு பரிதாபமாக நிற்கின்றனர்.

● மனோகரன்

---

# அதிகாரத்தில் மனு நீதி குப்பைக் கூடையில் சமூக நீதி

தாழ்த்தப்பட்டோருக்கும் பழங்குடியினருக்கும் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் இட ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும் என்ற கொள்கை ஏறத்தாழ 50 ஆண்டுகளாக நடைமுறையில் உள்ள போதிலும் அது இன்றுவரை வெறும் காகிதக் கொள்கையாகவே உள்ளது. அதிகார வர்க்கத்தின் மேல்சாதி வெறியின் காரணமாக, தகுதி இருந்தும்கூட உரிய பிரதிநிதித்துவம் தரப்படாமல் இப்பிரிவினர் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர்.

"சமூக நீதிக்கான கல்வியாளர்களின் குழு" என்ற அமைப்பு 239 பல்கலைக்கழகங்களையும் 7000 கல்லூரிகளையும் ஆய்வு செய்து, அவற்றில் 3 இலட்சம் ஆசிரியர் பணியிடங்களில் வெறும் 2% தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் மட்டுமே பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர் என்ற அதிர்ச்சியூட்டும் உண்மையை அண்மையில் வெளியிட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட, மற்றும் பழங்குடியினரிடமிருந்து போதிய அளவுக்கு உயர்கல்வி கற்ற கல்லூரி ஆசிரியர்கள் உருவாகவில்லை என்பது இதற்குக் காரணமல்ல. டாக்டர், ஆய்வாளர் எனப் பட்டம் பெற்ற 2000-க்கும் மேற்பட்டோர் பல்கலைக்கழக மானியக் குழுவிடம் தமது பெயரைப் பதிவு செய்து பல்லாண்டுகளாகக் காத்திருந்த போதிலும், இன்றுவரை அவர்கள் பணியில் அமர்த்தப்படவில்லை.

பிராந்திய அளவிலான சிறிய பல்கலைக்கழகங்கள் மட்டுமல்ல; நாடு தழுவிய மிகப்பெரிய பல்கலைக்கழகங்கள் கூடத் தாழ்த்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டுக் கொள்கையைச் செயல்படுத்துவதில்லை. மிகப்பெரிய மையப் பல்கலைக்கழகமான தில்லிப் பல்கலைக்கழகம் 2%-ஐ விடக் குறைவான அளவுக்கே தாழ்த்தப்பட்ட - பழங்குடியின ஆசிரியர்களை நியமித்துள்ளது. 310 பேராசிரியர்கள், 222 துணைப் பேராசிரியர்கள், 133 விரிவுரையாளர்கள் மற்றும் பல்கலைக்கழகத்தில் இணைந்துள்ள கல்லூரிகளில் 7000 ஆசிரியர்கள் எனப் பணியிடங்கள் உள்ள நிலையில் வெறும் 4 பேர் மட்டுமே விரிவுரையாளராக, ஒருவர் துணைப் பேராசிரியராக, 3 பேர் பேராசிரியர்களாக, 20 பேர் கல்லூரி ஆசிரியர்களாக உள்ளனர்.

இதே நிலைமைதான் தில்லியின் மற்றுமிரு பல்கலைக் கழகங்களிலும் நிலவுகிறது. ஜமியா மில்லியா இஸ்லாமியா பல்கலைக்கழகத்தில் 80 பேராசிரியர், 128 துணைப் பேராசிரியர், 216 விரிவுரையாளர், 30 ஆய்வாளர் - எனப் பணியிடங்கள் உள்ளன. இட ஒதுக்கீட்டின்படி 102 பணியிடங்கள் தாழ்த்தப்பட்ட - பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட வேண்டும். ஆனால் வெறும் 3 பணியிடங்களில் மட்டுமே இப்பிரிவினர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிரபலமான ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் பேராசிரியர், விரிவுரையாளர் என 377 பணியிடங்கள் உள்ளன. இட ஒதுக்கீட்டின்படி, 89 இடங்களில் தாழ்த்தப்பட்ட - பழங்குடியினர் அமர்த்தப்பட வேண்டும். ஆனால், 15 பணியிடங்களில் மட்டுமே இவர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர்.

மையப் பல்கலைக்கழகமான அலிகார் முஸ்லிம் பல்கலைக் கழகத்தில் நிலைமை படு மோசமாக உள்ளது. இங்குள்ள 263 ஆசிரியப் பணியிடங்களில் ஓர் இடம்கூடத் தாழ்த்தப்பட்ட - பழங்குடியினருக்கு ஒதுக்கப்படவில்லை. பெனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் உள்ள 1145 ஆசிரியப் பணியிடங்களில், 257 இடங்கள் தாழ்த்தப்பட்ட - பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட வேண்டும். ஆனால், 14 இடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன. ஐதராபாத், பாண்டிச்சேரி, விஸ்வபாரதி, உஸ்மானியா, குவாஹாத்தி, மகரிஷி தயானந்த், ஜோத்பூர், பஞ்சாப் முதலான இதர பல்கலைக்கழகங்களிலும் இதே நிலைமைதான் நீடிக்கிறது. தாழ்த்தப்பட்ட - பழங்குடியினருக்கான இட ஒதுக்கீட்டை உரிய முறையில் செயல்படுத்துமாறு பல்கலைக்கழக மானியக் குழு 1956-இல் தனது வழிகாட்டும் நெறிமுறையாக வலியுறுத்தியுள்ள போதிலும், கடந்த 45 ஆண்டுகளாகத் தொடரும் சமூக நீதியின் யோக்கியதை இதுதான்! உயர்கல்வி கற்ற பல்கலைக்கழக ஆசிரியப் பணியிலேயே இட ஒதுக்கீட்டின் இலட்சணம் இப்படி இருக்கும்போது, இதர அரசுப் பணி-சேவைத் துறைகளின் நிலைமையைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.


படிப்பகம்

www.padippakam.com

# நிதி நிறுவன மோசடிக் கும்பலுக்கு அரசே உடந்தை

தமிழகமெங்கும் பிரபலமாக அறியப்பட்ட சினேகம், மாக்ஸிமா, ஈஸ்வரி எனப் பல நிதி நிறுவனங்கள் 1996-ஆம் ஆண்டு இறுதியில் அடுத்தடுத்து மூடப்பட்ட பொழுது, நிதி நிறுவனங்கள் முதலீட்டாளர்களை மோசடி செய்யாமல் தடுப்பதற்கான சட்டமொன்றை தமிழக அரசு இயற்றியது. மோசடி செய்த நிதி நிறுவனங்களை விசாரிக்கவும், தண்டிக்கவும், ஏமாற்றப்பட்ட முதலீட்டாளர்களுக்கு நீதி வழங்கவும் சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன. இவையிரண்டோடு கூட, நிதி நிறுவன மோசடிகளை ஒழிக்க தற்பொழுது தனி போலீசு படையினையும் தமிழக அரசு அமைத்துள்ளது.

தனிச் சட்டம், தனி நீதிமன்றம், தனி போலீசுப் படை - இம்மூன்றும் நடுத்தர வர்க்க முதலீட்டாளர்களின் பாதுகாவலனா? இல்லை, வெறும் சோளக் காட்டுப் பொம்மைகளா? என்பதுதான் இப்பொழுதுள்ள கேள்வி. ஏனென்றால், தனிச் சட்டமும், தனி நீதிமன்றமும் வந்த பிறகும், கலைமகள் சபா, ரெடிமணி, இராயப்பேட்டை பெனி்ஃபிட் ஃபண்ட், ஆழ்வார்பேட்டை பெனிஃபிட் ஃபண்ட் எனப் பல நிதி நிறுவனங்கள் முதலீட்டாளர்களை மோசடி செய்ததைத் தடுக்க முடியவில்லை.

இராயப்பேட்டை பெனிபிட் ஃபண்ட், ஆழ்வார்பேட்டை பெனிஃபிட் ஃபண்ட் - இந்த இரண்டு நிதி நிறுவனங்களும் புற்றீசல் போல் கிளம்பிய பிற நிதி நிறுவனங்களைப் போலன்றி, மைய அரசின் கம்பெனி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, ரிசர்வ் வங்கியின் கண்காணிப்பின் கீழ் இயங்கி வந்தவை. ஆனாலும் கூட, இந்த இரண்டு நிதி நிறுவனங்களும் கிட்டதட்ட 600 கோடி ரூபாய் அளவிற்குப் பொதுப் பணத்தை விழுங்கி விட்டன. கம்பெனி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட இந்த இரண்டு நிதி நிறுவனங்களின் மீது தமிழக அரசின் சட்டம் பாய்வதற்கு அதிகாரம் கிடையாது என்றும் சொல்லப்படுகிறது.

தனி நீதிமன்றம் செயல்படத் தொடங்கி மூன்றாண்டுகள் முடிந்து விட்டாலும், இங்கு நடந்து வரும் 64 வழக்குகளும் ஆமை வேகத்தில்தான் நகர்கின்றன. குற்றஞ் சாட்டப்பட்ட 168 நிதி நிறுவன அதிபர்களுள் 20 பேர்தான் சிறையில் உள்ளனர்; மீதிப் பேரெல்லாம் பிணையில் வெளியே வந்துவிட்டனர்.

கடந்த மூன்றாண்டுகளில் மூன்று சிறிய நிதி நிறுவன அதிபர்கள் மட்டும்தான் தனி நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டுள்ளனர். அதே சமயம், இந்த மூன்று நிதி நிறுவனங்களிலும் பணம் போட்டவர்களுக்கு நயா பைசா கூடத் திரும்பக் கிடைக்கவில்லை. ஏனென்றால், இந்த மூன்று நிதி நிறுவனங்களின் சொத்துக்களைத் தேடிக் கண்டுபிடித்துப் பறிமுதல் செய்ய தமிழகப் போலீசும், அரசு அதிகாரிகளும் முயலவேயில்லை.

"நிதி நிறுவன அதிபர்கள் தங்களின் விசாரணைக்கு ஒத்துழைப்பதில்லை" எனச் சரடு விடுகிறது போலீசு. சந்தேகத்தின் பேரில் பிடிக்கப்பட்டவர்களைக் கூடப் பல விதங்களில் 'கவனித்து', சிலரின் உயிரையும் பறித்து, உண்மையை வரவழைத்துவிடும் போலீசின் 'திறமை', நிதி நிறுவன அதிபர்கள் முன்னே மழுங்கிப் போய்விட்டதா?

கிட்டதட்ட 15 கோடி ரூபாயை மோசடி செய்த "மேக்ஸிமா" நிதி நிறுவனத்தின் சொத்துக்களை விற்று, முதலீடு செய்தவர்களுக்குப் பணத்தைத் திரும்பக் கொடுக்க தனி நீதிமன்றத்தால் கமிசனர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த அதிகாரியின் சம்பளம், போக்குவரத்துச் செலவு இத்யாதி... இத்யாதிகளுக்காக, மேக்ஸிமாவில் பணம் போட்டவர்களிடமிருந்தே பணத்தைக் கறந்து விட்டது தமிழக அரசு. நாட்கள்தான் நகர்கின்றதே தவிர, மேக்ஸிமா நிறுவனத்தின் எந்தவொரு சொத்தையும் விற்க முடியவில்லை. ஏதாவதொரு "அலுவலகத் தடங்கல்" ஏற்பட்டு விடுகிறது. சொத்துக்களை விற்கும் வரை மேக்ஸிமா நிறுவனத்தின் வழக்கு நீதிமன்றத்தால் காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளதால், மேக்ஸிமா நிறுவன அதிபர் மதன், செல்ஃபோனும் கையுமாக காரில் சென்னையைச் சுற்றி வருகிறார்.

மோசடி செய்த பெரும்பாலான நிதி நிறுவனங்களின், அந்நிறுவனத்தை நடத்தி வந்த முதலாளிகளின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு விட்டதாகக் கூறப்பட்டாலும், அவர்களின் ஆடம்பரத்திற்குக் குறை வந்துவிடவில்லை. "பந்தா"வாகத் தான் நீதிமன்றத்திற்கு வருகின்றனர்; பிரபலமான வழக்கறிஞர்களை வைத்து வழக்குகளை நடத்துகின்றனர். இதற்கெல்லாம் பணம் எங்கிருந்து வருகிறது என்ற கேள்வி படித்த நீதிமான்களுக்கு வருவதில்லை. ஏமாந்த முதலீட்டாளர்களுக்கு, இதைப் பார்த்துப் புலம்புவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.

இம்மோசடி கிரிமினல் பேர்வழிகள் கம்பி எண்ணுவதில் இருந்தும், பணத்தைத் திருப்பித் தராமல் இழுத்தடிப்பதற்கும் சட்டத்தின் ஓட்டைகள் மட்டும்தானா பயன்படுகிறது? போலீசு, அரசியல்வாதிகள், நீதிமன்றமும்கூட மிகவும் வெளிப்படையாகவே இக்கிரிமினல்களுக்கு விலை போகின்றனர்;

**நிதி நிறுவனங்களால் ஏமாற்றப்பட்ட முதலீட்டாளர்களின் சங்கக் கூட்டமைப்பு சென்னையில் நடத்தும் மாதாந்திரக் கூட்டம்: நாட்கள் நகரும் வேகத்திற்கு இணையாக வழக்குகள் நகரவில்லை.**




படிப்பகம்

www.padippakam.com

துணை போகின்றனர். சட்டத்தின் ஓட்டையைப் பயன்படுத்திக் கொள்வதா, இல்லை அரசு இயந்திரத்தையே பயன்படுத்திக் கொண்டு ஜாலியாக வெளியே வந்துவிடுவதா என்பதை அடித்த கொள்ளைதான் தீர்மானிக்கிறது.

அனுபவ் நிறுவனம் பொது மக்களிடமிருந்து 'டெபாசிட்'டாக வசூலித்த தொகை நானூறு கோடி ரூபாய். அனுபவ், தாங்கள் போட்ட பணத்தைத் திருப்பித் தராமல் மோசடி செய்வதாக போலீசிடம் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட முதலீட்டாளர்கள் புகார் மனு கொடுத்த பின்னும், தமிழக போலீசு அனுபவ் நிறுவனத்தின் மீது கை வைக்கவேயில்லை. பணம் போட்டவர்கள் சாலை மறியலில் இறங்கிய பிறகு, அனுபவ் நிறுவனத்தின் தலைவர் நடேசனை சரணடையச் சொல்லி அறிவுரை கொடுத்துக் கைது செய்தது தமிழக போலீசு.

அனுபவ் நிறுவனத்தின் இயக்குநர்களான முல்லை சுப்பையா, பாபு ஆகியோர் முன் ஜாமீன் கேட்டதை போலீசார் எதிர்க்கவேயில்லை. சென்னைப் பெருநகர நீதிமன்றம் அனுபவ் நிறுனத்தின் 29 இயக்குநர்களையும் பிணையில் வெளியே வர முடியாதபடி கைது செய்யச் சொல்லி சனவரி 99-இல் உத்தரவு பிறப்பித்தது; ஆனால், போலீசார் 99 டிசம்பர் இறுதி வரை, கிட்டத்தட்ட பதினோரு மாதமாக எந்தவொரு இயக்குநரையும் கைது செய்யவில்லை. நீதிபதி போட்ட உத்திரவை நீதிமன்ற அலுவலகத்திலேயே அமுக்கிவிட்டு, அப்படியொரு உத்தரவே தங்களுக்கு வரவில்லை என்று போலீசு புளுகி வந்தது. அனுபவ் பொது மக்களிடமிருந்து வசூலித்த பணம் 8 கோடி தான் என்று போலீசாரால் அறிக்கை தயாரிக்கப்பட்டது. தமிழக அரசும், போலீசும் அனுபவ் நிறுவனத்தின் வங்கிக் கணக்குகளை முடக்கவேயில்லை. அனுபவ் வழக்கு விசாரணையில் போலீசார் செய்த அத்தனை தில்லு முல்லுகளையும் உயர் நீதிமன்றமே அம்பலப்படுத்தி, போலீசைக் கண்டித்து உத்தரவிட்டது.

அனுபவ் விவகாரத்தில் கறாராக நடந்து கொண்ட உயர்நீதி மன்றம், இராயப் பேட்டை பெனிஃபிட் பண்ட் (ஆர்.பி.எஃப்) வழக்கு விசாரணையில் மிகவும் மென்மையாக நடந்து கொண்டது. 400 கோடி ரூபாய் அளவிற்கு பொது மக்களின் பணத்தை ஏப்பம் விட்ட இந்நிறுவனத்தின் இயக்குனர்கள் கைது செய்யப்பட்ட இரண்டொரு நாட்களிலேயே வெளியே வந்து விட்டனர். இந்நிறுவனத்தின் தலைவராக இருந்த சுப்பிரமணியன் இந்தியாவில்தான் இருக்கிறாரா, இல்லை வெளிநாட்டுக்குத் தப்பிவிட்டாரா என்பது குறித்து போலீசோ, நீதிமன்றமோ அக்கறை காட்டவில்லை.

"பாலாஜி குரூப்" என்ற நிறுவனத்தை நடத்தி வரும் சீனிவாசலு ரெட்டி, ஆர்.பி.எஃப்., நிறுவனத்தின் இயக்குநராய் இருந்தபொழுது, ஆர்.பி.எஃப்-இல் பொது மக்கள் போட்ட பணத்தைச் சட்ட விரோதமான வழிகளில் தனது நிறுவனத்தின் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொண்டுள்ளார். ஆர்.பி.எஃப். நிறுவனம், சீனிவாசலு ரெட்டியிடம் வேலை பார்த்த 42 ஊழியர்களுக்கு 230 கோடி ரூபாய் கடனாகக் கொடுத்ததாகப் போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. சீனிவாசலு ரெட்டிக்கு முன் ஜாமீன் வழங்கியுள்ள சென்னை உயர்நீதி மன்றம், அவர் கட்ட வேண்டிய அசலையும், வட்டியையும் தவணை முறையில் திருப்பிச் செலுத்தவும் சலுகை வழங்கியுள்ளது.

பணத்தைத் திருப்பிக் கட்டிவிட்டால், சீனிவாசலு ரெட்டி செய்தது மோசடி இல்லை என்றாகி விடுமா? உயர்நீதி மன்றம் வழங்கிய இந்தச் சலுகை, மோசடி செய்த நிதி நிறுவன அதிபர்களுக்கும் வழங்கப் பட்டால், யாருக்குமே தண்டனை கொடுக்க முடியாது!

சீனிவாசலு ரெட்டியின் அண்ணன் (இறந்து போய்விட்ட) சுப்புராமி ரெட்டி காங்கிரசு கட்சியின் எம்.பி.யாக இருந்தவர். சென்னை - அண்ணா சாலையில் கட்டப் பட்டு வரும் ஐந்து நட்சத்திர விடுதியில் சீனிவாசலு ரெட்டிக்கு சொந்தமான பங்குகளை சரத் பவார் வாங்கியிருக்கிறார். இந்த அரசியல் நெருக்கத்தைப் பயன் படுத்திக் கொண்டுதான் ஆர்.பி.எஃப். நிறுவன இயக்குநர்களும், சீனிவாசலு ரெட்டியும் கம்பி எண்ணாமல் தப்பி விட்டதாகக் கூறப்படுகிறது.

மோசடி செய்த நிதி நிறுவன அதிபர்களைத் தண்டிப்பதிலும், இம்மோசடி களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்குவதிலும் அரசு 'தடுமாறுவது' ஒருபுறம் இருக்கட்டும். இம்மோசடிகளுக் கும், அரசின் பொருளாதாரக் கொள்கை களுக்கும் சம்மந்தமே இல்லையா?

இதற்கு முன்புகூட தமிழகத்தில் பல சீட்டுக் கம்பெனிகள் போண்டியாகி, பொது மக்களை ஏமாற்றியுள்ளன. ஆனால், இப்படி பல நூறு கோடிக் கணக்கான ரூபாய்களைத் திட்டமிட்டே மோசடி செய்திருப்பது இது தான் முதன்முறை. ஆட்சியாளர்கள் என் றைக்குத் தாராளமயமாக்கலைத் தொடங்கி னார்களோ, அன்றைக்குப் பிடித்தது இந்த நோய்!

ராவ் ஆட்சிக் காலத்தில் நடந்த பங்குச் சந்தை மோசடியால் போண்டியாகிப் போன நடுத்தர வர்க்க முதலீட்டாளர்களுக்கு நீதியா கிடைத்துவிட்டது? இல்லை, அர்சத் மேத்தா வுக்குப் பிறகு, பங்குச் சந்தை கவர்ச்சியில் ம யங்கி முதலீடு செய்யும் நடுத்தர வர்க்க முத லீட்டாளர்கள் போண்டியாகிப் போவது நின் றுவிட்டதா?

பங்குச் சந்தையில் நுழைந்துள்ள பன் னாட்டு நிறுவனங்கள் நடத்தும் சூதாட்டத் தால் பங்குச் சந்தை சரியும் பொழுதெல்லாம், ஆயிரக் கணக்கான சிறு முதலீட்டாளர்கள் தலையில் துண்டைப் போட்டுக் கொள்வது தொடர்ந்து நடந்து வருகிறது. இந்தச் சூதாட் டத்தைத்தான் அரசு இந்தியப் பொருளாதார வளர்ச்சியின் குறியீடாகக் காட்டுகிறது.

நிதி நிறுவனங்கள் புற்றீசல்களாக முளைத்ததை, பணப் புழக்கம் அதிகரிக்கிறது என்று மெச்சினார்கள்; தேக்குப் பண்ணைக ளை நவீன விவசாய வளர்ச்சியாகக் காட்டி னார்கள். ஆனால், நடந்ததென்ன? பணம் போட்டவர்கள் ஏமாந்ததும், மோசடியைத் தடுக்கப் புதுச் சட்டங்கள் வந்ததும்தான் கை மேல் கண்ட பலன்! இதன் பிறகும், அரசு, பொது மக்களின் பணம் தாராளமாகப் புழங் கும் வங்கி மற்றும் காப்பீடு நிறுவனங்களைத் தனியாரிடம் ஒப்படைக்கத் தயக்கம் காட்ட வில்லை.

சாக்கடையை ஒழிக்காமலேயே கொசு வை ஒழித்து விடுவோம் என்று பம்மாத்து காட்டுகிறது அரசு. நடுத்தர வர்க்க முதலீட்டா ளர்களோ கடப்பாரையை முழுங்கிவிட்டு அது செரிக்க சுக்கு கசாயத்தைக் குடிக்கலாம் என்கின்றனர். ஏனென்றால், அரசின் தாராள மயம் - தனியார்மயத்தை ஆதரித்துக் கை கொடுப்பவர்களே இவர்கள்தான்!

● இராசன்

## வாசகர் கடிதம்

* மார்ச் இதழ் அனைத்தும் சிறப்பாக இருந்தது. குறிப்பாக, அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் இந்துத்துவக் கொள்கைத் திணிப்புகளை ஏற்பாடு என்பதைவிட, மறுகாலனி ஆதிக்கத்திற்கான மறுவார்ப்பு தான் என்பதை "புதிய ஜனநாயகம்" மட்டுமே எடுப்பாக எழுதியது. போலி கம் யூனிஸ்டுகள் மற்றும் இந்துத்துவ எதிர்ப் பாளர்கள் அரசியல் சட்டத் திருத்தம் பற்றிக் கூறிய கருத்துக்களை விட, "புதிய ஜன நாயகம்" கூறும் காரணங்கள்தான் மிகச் சரியானதாகவும் தொலைநோக்குப் பார்வையுடனும் இருந்தது என்று எல்லோ ராலும் பாராட்டப் பெற்றது.

—ஆ.சு. முத்து, விக்கிரமசிங்கபுரம்.

* நான் கடந்த மூன்று மாதங்களாக "புதிய ஜனநாயகம்" இதழைப் படித்து வரு கிறேன். ஒவ்வொரு இதழும் நாட்டு நடப்பை எடுப்பாக எடுத்துக் கூறி, மக் களைப் போராட அறைகூவும் வகையில் அமைந்துள்ளது. தனியார்மயம் - தாராள மயம் என்று நாட்டின் மிக முக்கிய தொழில் களை - "பெல்" போன்ற அரசுத்துறை நிறு வனங்களை வல்லரசுகளிடம் ஒப்படைத்து விட்ட துரோகிகளை இனங்காட்டி, மக் களை விழிப்புணர்வு பெற பாடுபடும் புதிய ஜனநாயகத்துக்கு எனது பாராட்டுக் கள்!

- பொ. இராதா கிருட்டிணன், செல்லூர், மதுரை.



படிப்பகம்

# அம்பலமாகும் அதிரடிப்படையின் அட்டூழியங்கள்

"அந்த நள்ளிரவு வேளையில் எங்கள் கிராமத்துக்கு வந்த அதிரடிப் படையினர், உறங்கிக் கொண்டிருந்த எங்களை இழுத்து வந்து மிருகத்தனமாகத் தாக்கினர். பின்னர் எங்களை அதிரடிப் படை முகாமுக்குக் கொண்டு வந்து கும்பலாகச் சூழ்ந்து கொண்டு தாக்கினர். எனது கைவிரல்களை இரும்பு பூட்சுகளால் நசுக்கி வதைத்ததில் அவை இன்று செயலற்றுப் போய்விட்டன. உண்மையைக் கூறுமாறு எங்களுக்கு மின்சார அதிர்ச்சி கொடுத்தனர். போலீசாரின் சித்திரவதையினால் எனது இடுப்பு எலும்பு முறிந்த நிலையில் நான் விடுவிக்கப்பட்டேன். இன்னமும் என்னால் நிமிர்ந்து நிற்கவோ நடக்கவோ முடியவில்லை" என்று வேதனையில் குமுறுகிறார் அந்த முதியவர். அதிரடிப் படையின் அட்டூழியங்களைப் பற்றிச் சொல்லும்போதே அவரது உடல் நடுங்குகிறது.

- இது ஏதோ காசுமீரில் இந்திய இராணுவத்தினரால் அன்றாடம் நடத்தப் படும் சித்திரவதையின் கதை அல்ல; அல்லது சிங்கள இனவெறி போலீசாரால் வதைக்கப்பட்ட ஈழத் தமிழரின் துயரக் கதையும் அல்ல. தமிழகத்தில் சந்தனக் காட்டு வீரப்பனைத் தேடுவது என்ற பெயரில் 'சூரப்புலி' தேவாரம் தலைமையிலான அதிரடிப் படை போலீசு குண்டர்கள் ஏழாண்டுகளுக்கு முன்பு நடத்திய அக்கிரமத்தின் சாட்சிதான் இது. மேட்டூரை ஒட்டியுள்ள கொளத்தூர் கிராமத்தைச் சேர்ந்த மாரப்பன் என்ற இம்முதியவர் இன்று இருவரது தோள்களைப் பிடித்துக் கொண்டுதான் நடக்க முடிகிறது. அவரது கண் புருவத்தில் போலீசுக் காரன்களின் இரும்பு பூட்சுக் காலால் ஏற்பட்ட காயத்தின் தழும்பு சித்திரவதைக் கொடுமைக்குச் சாட்சியமாக உள்ளது.

தங்கம்மா - கொளத் தூரை அடுத்துள்ள பெரிய தண்டா கிராமத்தைச் சேர்ந்தவர். வெற்றிலை வியாபாரம் செய்து வந்தவர். இவரை, வீரப்பனின் தம்பி அர்ஜுனின் கள்ளக் காதலி என்று பொய்க் குற்றம் சாட்டி 1993-இல் அதிரடிப் படையினர் இழுத்துச் சென்று, மேட்டூர் முகாமில் வதைத்தனர். உடைகளைக் களைந்து நிர்வாணமாக்கி உதைத்தும், நகக் கண்களில் ஊசியைக் குத்தியும், பாலியல் வக்கிரத்துடன் பீதியூட்டியும் அவரைத் தொடர்ந்து சித்திரவதை செய்தனர். பின்னர் "மீசைக்கார பெரிய அய்யா" அவரை மேட்டூர் விருந்தினர் மாளிகையில் அடைத்து வைத்து மூன்று நாட்களுக்கு தனது காமவெறிக்கு இரையாக்கிக் கொண்டார். அதன் பிறகு தங்கம்மா, பயங்கரவாத "தடா" சட்டத்தின் கீழ் சிறையிடப்பட்டார். சென்னை, திருநெல்வேலி, மேட்டூர், ஈரோடு, இராமநாதபுரம் என பல இடங்களுக்கு விசாரணை என்ற பெயரில் கொண்டு செல்லப்பட்டு போலீசாரால் வதைக்கப்பட்டார். இராமநாதபுரத்துக்குக் கொண்டு சென்ற போது, வாகனத்தை ஓட்டிய போலீசுக் காரனே மிருகமாக மாறி அவர் மீது பாலியல் வன்முறையை ஏவியுள்ளான்.

தற்போது பிணையில் விடுதலையாகியுள்ள, 40 வயதாகும் தங்கம்மா தனது குடும்பத்தினருடன் கூட சேர்ந்து வாழ முடியவில்லை. போலீசாரின் சித்திரவதைக்கும் அச்சுறுத்தலுக்கும் ஆளான அவரது பெற்றோரும் உற்றாரும் "வழக்கு விசாரணை முடிந்த பிறகு ஊருக்கு வா!" என்று கூறுமளவுக்கு, அவர்களது மனம் கல்லாகிப் போய்விட்டது. அதிரடிப் படையின் வதைக் கொடுமை, இரத்த பாசத்தைக் கூட வேரறுத்துவிட்டது. சித்திரவதை, பாலியல் வன்முறைகளால் ஏற்பட்ட வேதனையோடு, குடும்பத்தைப் பிரிந்து வாழ வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்ட மன வேதனையோடு புலம்புகிறார், தங்கம்மா. துயரத்தில் துவண்டாலும் அழுது சிவந்த அவரது கண்கள், அதிரடிப் படை போலீசுக்காரன்கள் மீது வெறுப்பையும் ஆத்திரத்தையும் உமிழ்ந்து கொண்டிருக்கின்றன.

**கொளத்தூரில் விசாரணை நடத்தும் நீதிபதிக் குழு (மேல்படம்); விசாரணைக் குழுவின் முன் வாக்குமூலம் அளிக்கத் திரண்டுள்ள கிராம மக்கள் (கீழே).**





தங்கம்மா மட்டுமல்ல; லக்கம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த இலட்சுமி, இராமக்கா, சின்னப் பொண்ணு என்று அதிரடிப் படையின் காம வெறி பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட பெண்கள் ஏராளம். அவர்களில் ஒரு சிலர் மட்டுமே வெளி யுலகுக்கு இந்தக் கொடுமை களைத் தெரியப்படுத்தி யுள்ளனர். பெரும்பாலோர் போலீசாரின் அச்சுறுத்தலுக்கு அஞ்சியும் அவமானம் காரணமாகவும் இக்கொடு மைகளைப் பற்றி வெளியே சொல்லவில்லை.

வீரப்பனைத் தேடிப் பிடிப்பது என்ற பெயரில் 1993 முதல் '95 வரை சிறப்பு அதிரடிப் படைத் தலைவராக தேவாரம் பொறுப்பேற்ற காலத்தில் நடந்த அட்டூழி யங்களுக்கு எல்லையே இல்லை. வீரப்பன் நடமாட்டம் உள்ளதாகச் சந்தேகிக்கப்படும் காட்டுப் பகுதி கிராம மக்களும், பழங்குடியினரும் அதிரடிப் படையினரால் கேள்வி முறையின்றி வதைக்கப் பட்டனர். வீரப்பனின்

கூட்டாளிகள் என்று பொய்க் குற்றம் சாட்டப்பட்டு அப்பாவிகள் பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதிரடிப்படை இழுத்துச் சென்ற பலர் இன்றுவரை என்ன ஆனார்கள் என்றே தெரியவில்லை. கொடூரமான சித்திரவதைக்குப் பின் பலர் மனநோயாளிகளாகி விட்டார்கள்.

பார்ப்பன - பாசிச ஜெயா ஆட்சிக் காலத்தில் நடந்த இக்கொடுமைகள் பற்றிய செய்திகள் மெதுவாகக் கசியத் தொடங்கிய பிறகு, சில தன்னார்வக் குழுக்களும், மனித உரிமை அமைப்புகளும், பழங்குடியினர் அமைப்புகளும் இணைந்து தேசிய மனித உரிமைக் கமிசனிடம் முறையிட்டதன் பேரில், அது ஒரு விசாரணைக் கமிட்டியை நியமித்தது. கர்நாடக உயர்நீதி மன்ற முன்னாள் நீதிபதி சதாசிவா மற்றும் மையப் புலனாய்வுத் துறையின் முன்னாள் இயக்குனர் நரசிம்மன் ஆகியோரைக் கொண்ட இக்கமிட்டி கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் நிறுவப்பட்டது. இக்கமிட்டியினர் இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் கோபிசெட்டிப் பாளையத்தில் பாதிக்கப் பட்டோரிடம் வாக்குமூலம் பெற்றனர். கடந்த பிப்ரவரி இறுதியில் மேட்டூர் அருகிலுள்ள கொளத்தூரில் இதேபோல் வாக்குமூலங்களைப் பெற்றனர். அதிரடிப் படையின் அட்டூழியங் களால் பாதிக்கப்பட்டோரில் சிலர் அளித்த வாக்குமூலங்கள், முதுகெலும்பைச் சில்லிடவைக்கும் அளவுக்குக் கொடூரமானவை.

தமிழ்நாடு - கர்நாடக எல்லையோர கிராமங்களைச் சேர்ந்த 50-க்கும் மேற்பட்டோர் அதிரடிப் படையினரால் இழுத்துச் செல்லப்பட்டு, ஏழாண்டு களாகியும் இன்னமும் வீடு திரும்பவில்லை. "அவர்களது உடல்களைக் கூட எங்களுக்குக் காட்டாமல் போலீசாரே பிணத்தை எரித்து விட்டனர்" என்று குமுறுகிறார்கள் பல கிராம மக்கள்.

"வீரப்பன் கும்பலுக்குச் சாராயம் கடத்தியதாகப் பொய்க் குற்றம் சாட்டி எனது கணவரை 1993-இல் அதிரடிப் படையினர் இழுத்துச் சென்றனர். அதன்பிறகு, 1994-இல் குண்டுகளால் துளைக்கப்பட்ட எனது கணவரின் உடலைப் புகைப்படம் எடுத்து எனக்கு அனுப்பி வைத்தனர்" என்று துக்கம் தாளாமல் புலம்புகிறார், பாப்பா என்ற லம்பாடி இனப் பெண்.

மேட்டுப் பனையூர் - வன்னியர்கள் நிறைந்த கிராமம். வீரப்பன் வன்னிய சாதிக்காரன் என்பதால் இக்கிராமம் அதிரடிப் படையினரால் சுற்றி வளைத்து தாக்கப்பட்டது. தொடர்ச்சியான கொடூர சித்திரவதையாலும் அச்சுறுத்தலாலும் இக்கிராமத்தில் பலர் மனநோயாளிகளாகி விட்டனர். "நன்றாக இருந்த எங்கள் கிராமம் இன்று பைத்தியக்காரர்களின் கிராமமாகி விட்டதே!" என்று வேதனையில் கண்ணீர் வடிக்கிறார், மாதையன் என்ற முதியவர்.

"எனது இரு மகன்களும் நான்கு பேரக் குழந்தைகளும் அதிரடிப் படையினரால் கொல்லப்பட்டு விட்டனர். எனது மகள் தடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு மைசூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளாள். அவளது கைக்குழந்தையான எனது பேத்தியை நான்தான் வளர்த்து வருகிறேன்" என்று தனது துயரக் கதையைக் கூறுகிறார், எல்லம்மா என்ற மூதாட்டி. அதிரடிப் படையின் சித்திரவதையால் அவரது வலது கால் எலும்பு முறிந்து போயுள்ளது.

- இவையனைத்தும் கொளத்தூருக்கு விசாரணைக் கமிட்டி வந்தபோது பாதிக்கப்பட்ட மக்கள் அளித்த வாக்குமூலத்தின் ஒரு பகுதிதான். வாக்குமூலம் அளிக்க வந்த கிராம மக்களில் 130 பேர் மட்டுமே, தனியாகவும் குழுவாகவும் கூறியவற்றை விசாரணைக் கமிட்டி பதிவு செய்தது. நேரமின்மையால் சாட்சியமளிக்க வந்த 400-க்கும் மேற்பட்ட கிராம மக்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.



வேதனையில் துவண்டாலும் போலீசுக்காரன்கள் மீது வெறுப்பையும் ஆத்திரத்தையும் உமிழும் தங்கம்மா.

இத்தனைக்கும் பிறகும், குற்றம் சாட்டப்பட்ட போலீசு பயங்கரவாதிகளை விசாரணை செய்து தண்டிக்க இந்த விசாரணைக் கமிட்டிக்கு எந்த அதிகாரமும் கிடையாது. மனித உரிமைக் கமிஷனின் 36(1)-வது விதியின்படி, மாநில உரிமைக் கமிஷனின் விசாரணையிலுள்ள - இன்னும் முடிவுக்கு வராத எந்த விவகாரத்திலும் தேசிய மனித உரிமைக் கமிஷன் தலையிடவோ விசாரணை செய்யவோ முடியாது. மேலும், 36(2)-வது விதியின்படி, மனித உரிமை மீறப்பட்டதாகக் குற்றம் சாட்டப்படும் எந்தவொரு வழக்கிலும், சம்பவம் நடந்த ஓராண்டுப் பிறகு எந்த விவகாரத்தையும் விசாரணை செய்ய மனித உரிமைக் கமிஷனுக்கு அதிகாரம் கிடையாது.

இந்த விதிகளின் காரணமாக தற்போது விசாரணைக் கமிட்டி, பாதிக்கப்பட்டோரின் வாக்குமூலங்களைப் பதிவு செய்ய முடியுமே தவிர, எந்தவொரு போலீசுக்காரனையும் விசாரிக்கவோ, தண்டிக்கவோ முடியாது. மேலும் அதிரடிப் படையின் அட்டூழியங்கள் பற்றி மாநில மனித உரிமைக் கமிஷனின் முன் விசாரணைக்கு உள்ள நிலையில், இந்தச் சிறப்பு விசாரணைக் கமிட்டி அதிரடிப்படை மீதான குற்றச் சாட்டுகளைப் பற்றி விசாரணை நடத்தவும் முடியாது. அடுத்து, இக்கொடூரங்கள் ஏறத்தாழ 5 முதல் 7 ஆண்டுகளுக்கு முன்பு நடந்தவை என்பதால் விதிகளின்படி ஓராண்டுக்கு மேலாகிவிட்ட நிலையில் இந்த விவகாரத்தில் விசாரணை நடத்தவும் முடியாது. எனவேதான், "பாதிக்கப்பட்டோர் தரும் வாக்குமூலங்களைப் பதிவு செய்வது எங்கள் கடமை. குற்றம் சாட்டப்பட்டவர்களை விசாரிக்க எங்களுக்கு அதிகாரமில்லை. இருப்பினும் எதிர்காலத்தில் இத்தகைய போலீசு அத்துமீறல்கள் நடவாதிருக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளு மாறு மனித உரிமை கமிஷனிடம் நாங்கள் பரிந்துரை செய்வோம்" என்கின்றனர், இந்த விசாரணைக் கமிட்டியினர்.

அதிரடிப்படை போலீசு பயங்கரவாதிகளை விசாரிக்கவோ, தண்டிக்கவோ முடியாமல், அதிகாரம் ஏதுமற்ற, கண் துடைப்பு முயற்சியாகவே இந்த விசாரணைக் கமிட்டியின் வாக்குமூலப் பதிவு நடந்துள்ளது. அடுத்த கட்டமாக மாதேஸ்வர மலை, மைசூர், பெங்களூர் ஆகிய இடங்களிலும் இந்த விசாரணைக் கமிட்டி வாக்குமூலம் பதிவு செய்ய உள்ளது. இந்த விசாரணை நாடகத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வித பலனோ, நிவாரண உதவியோ கிடைக்காத போதிலும், அந்த இருண்ட நாட்களிலே நடந்த போலீசு பயங்கரவாதக் கொடுமைகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவதற்காவது குறைந்த பட்சம் இது உதவியுள்ளது.

அதனால்தான் 1993-லிருந்து '95 வரை கூட்டு அதிரடிப்படைத் தலைவராக இருந்து, அட்டூழியங்களைப் புரிந்த 'சூரப்புலி' தேவாரம், அம்பலப்பட்டுப் போன ஆத்திரத்தில், இந்த வாக்குமூலங்கள்

www.padippakam.com

அனைத்தும் பொய்யானவை; இட்டுக்கட்டி கூறப்படுபவை என்று எகிறிக் குதிக்கிறார். அரசாங்கத்திடமிருந்து நிவாரண உதவி - பண உதவி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில், அதிரடிப் படையினர் மீது இப்படி வீண் பழி சுமத்துகிறார்கள் என்று பாசிச ஜெயா பாணியிலேயே வக்கிரமா கொக்கரிக்கிறார். "ஏழாண்டுகளுக்கு முன்பு கொடுமைகள் நடந்ததாக எங்கள் மீது குற்றம் சாட்டும் மனித உரிமை அமைப்புகள் அப்போது எங்கே போயிருந்தன? இப்போது திடீரெனக் குற்றம் சாட்டுவதே அயோக்கியத்தனமானது" என்று சீறுகிறார் இந்தக் கிழட்டுப் புலி. "பாலியல் வன்முறை என்பது போலீசார் மீது மிக சர்வ சாதாரணமாக கூறப்படும் குற்றச்சாட்டு. அதை நிரூபிப்பது கடினம் என்பதாலேயே இப்படி கதைகட்டி போலீசு அமைப்பையே அவதூறு செய்கின்றனர்" என்று போலீசு வெறியர்களின் காமவெறி பயங்கரவாதத்துக்கு வக்காலத்து வாங்குகிறார்.

இத்தனைக்கும் பிறகும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கும் எந்தவொரு ஓட்டுக் கட்சியும் போலீசு பயங்கரவாதிகளைக் கண்டிக்கக் கூட முன்வரவில்லை. தமிழகத்தில் இந்த நிலை என்றால், கர்நாடக அதிரடிப் படையோ, இந்த விசாரணைக் கமிட்டி பாதிக்கப்பட்ட மக்களிடம் சட்ட விதிகளின்படி வாக்குமூலம் பெறவே கூடாது என்று நீதிமன்றத்தில் தடையுத்திரவு வாங்கிக் கொக்கரிக்கிறது. இதனால் மாதேஸ்வர மலையில் நடைபெறுவதாக இருந்த வாக்குமூலப் பதிவு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இவையனைத்தும் காட்டுவதென்ன? வீரப்பனைத் தேடிப்பிடிப்பது என்ற பெயரில் தமிழக - கர்நாடக அதிரடிப் பனையினர் எல்லாவித பயங்கரவாத அட்டூழியங்களிலும் காம வெறியாட்டத்திலும் ஈடுபடலாம்; அதை யாரும் கேள்வி கேட்கக் கூடாது; மனித உரிமை மீறல் நடந்துள்ளதாக விசாரணையோ, வாக்குமூலப் பதிவோ நடத்தக் கூடாது - என்பதையே போலீசு வெறியர்கள் சொல்லாமல் சொல்கிறார்கள். வீரப்பன் வேட்டை என்ற பெயரில் நடந்த இந்த அட்டூழியங்கள், நாளை ஒரு பயங்கரவாதியை - தீவிரவாதியைப் பிடிப்பது என்ற பெயரில் தமிழகத்தின் எந்தப் பகுதியிலும் நடக்கலாம்; அதை யாரும் கேள்வி கேட்கக் கூடாது என்று மறைமுகமாக எச்சரிக்கிறார்கள். மனித உரிமைக்கும் உயிர் வாழும் உரிமைக்கும் போலீசு பயங்கரவாதிகளால் விடப்பட்டுள்ள மிகப்பெரிய அச்சுறுத்தலே இது!

● குணசேகரன்

# மெக்சிகோ மாணவர்களின் முன்னுதாரணமிக்க போராட்டம்

மாணவர்கள் - இளைமையும் துடிப்பும் கொண்டவர்கள்; எந்தவொரு விசயத்தையும் எளிதில் புரிந்து கொள்ளும் வாய்ப்புடைய படித்த வர்க்கத்தினர்; நாளைய புதிய உலகைத் தாங்கி நிற்கும் தூண்கள்.

மாணவர்களில் ஒரு பிரிவினரைத் தமது சங்கங்களில் திரட்டியுள்ள போலி கம்யூனிஸ்டுகள் நாட்டையும் மக்களையும் பாதிக்கும் மையமான அரசியல் பிரச்சினையை முன் வைத்து அணி திரட்டுவதோ, போராடுவதோ இல்லை. மாணவர்களுக்கு அரசியலே வேண்டாம்; அரசியலாக்கினால், வேறுபட்ட அரசியல் சார்புடைய மாணவர்களை ஒரே சங்கமாகத் திரட்ட முடியாது; தமது துறைசார்ந்த கோரிக்கைகளுக்கான போராட்டம் நடத்துவதுதான் மாணவர் சங்கத்தின் கடமை என்று வரம்பிட்டுக் கொள்கிறார்கள். தருமபுரியில் வேளாண் பல்கலைக் கழக மாணவியர் அ.தி.மு.க. குண்டர்களால் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்ட விவகாரத்தைக் கூட அரசியலாக்கக் கூடாது என்று இப்போலி கம்யூனிஸ்டுகள் உபதேசித்தனர். தொழிலாளிகளுக்கு அரசியல் வேண்டாம்; சம்பள உயர்வு, போனஸ், வேலை நிலைமை முதலான துறை சார்ந்த கோரிக்கைகளுக்காகப் போராடுவதோடு வரம்பிட்டுக் கொள்ள வேண்டும் என்று தொழிலாளி வர்க்கத்தை தொழிற்சங்கவாத புதைசேற்றில் மூழ்கடித்ததைப் போலவே, மாணவர்களையும் அரசியல் போராட்டங்களிலிருந்து திசை திருப்பி வருகின்றனர்.

ஒருங்கிணைந்த பார்வையும், அரசியல் போராட்டமும் இல்லாமல் துறை சார்ந்த கோரிக்கைகளை மட்டும் முன் வைத்துப் போராடுவதால் ஒருபோதும் வெற்றி பெற முடியாது என்பதை தமிழக மருத்துவக் கல்வி மாணவர்கள் நடத்திய போராட்டம் ஏற்கனவே நிரூபித்துக் காட்டிவிட்டது. இத்தகைய பொருளாதாரவாத செக்குமாட்டுப் பாதைக்கு மாறாக, நாட்டையும் மக்களையும் பாதிக்கும் மையமான பிரச்சினையை முன் வைத்து அரசியல் போராட்டம், அரசியல் கிளர்ச்சிகளை நடத்துவதுதான் புரட்சிகரமான மாற்றுப் பாதை. இத்தகைய அரசியல் போராட்டங்களின் மூலம் மட்டும்தான், மாணவர்களும் போராடும் பிற பிரிவினரும் உழைக்கும் மக்களுடன் உறுதியான கூட்டணியைக் கட்ட முடியும்; ஆட்சியாளர்களைப் பணிய வைத்துத் தமது துறை சார்ந்த கோரிக்கைகளுக்குத் தீர்வு காணவும் முடியும்.

இந்த உண்மைகளை, தென்னமெரிக்க நாடான மெக்சிகோவில் பல்கலைக் கழக மாணவர்கள் நடத்திய வரலாற்றுச் சிறப்புமிக்க 9 மாத கால வேலை நிறுத்தப் போராட்டம் மீண்டும் நிரூபித்துக் காட்டியுள்ளது.

ஏழை நாடான மெக்சிகோ, வல்லரசுகளின் பகற்கொள்ளையால் ஏற்கனவே திவாலாகிவிட்ட நாடாகும். உலக வங்கி - ஐ.எம்.எப்.பின் கடனுதவியால் அந்நாட்டின் பொருளாதாரம் முட்டுக் கொடுத்து தூக்கி நிறுத்தப்பட்டுள்ளது. உலக வங்கியின் கட்டளைப்படியே அந்நாட்டின் சட்டங்களும் திட்டங்களும் செயற்படுத்தப் படுகின்றன. மொத்த தேசிய உற்பத்தியில் 50%-க்கும் மேலான தொகையை இராணுவத்திற்காகச் செலவிடும் மெக்சிகோ, கல்விக்கென 4% தொகையையே செலவிடுகிறது. அமெரிக்க கண்டத்திலேயே மிக அற்பமான அளவுக்கு கல்விக்கான மானியத்தை ஒதுக்கி வரும் மெக்சிகோ, கடந்த ஆண்டில் உலக வங்கியின் கட்டளைப்படி கல்விக் கட்டணத்தை 350%-க்கு மேலாக உயர்த்தியது. ஒரு பருவத்திற்கு 20 சென்டாக இருந்த கல்விக் கட்டணம் 65 டாலராக உயர்த்தப்பட்டது. இந்த அநியாய கட்டண உயர்வை எதிர்த்து கடந்த ஆண்டு ஏப்ரல் முதலாக மெக்சிகோ மாணவர்கள் போராட்டத்தில் குதித்தனர்.

மெக்சிகோவின் தேசிய சுயாட்சி பல்கலைக்கழகமானது (UNAM), தென்னமெரிக்கக் கண்டத்திலேயே மிகப் பெரிய பல்கலைக்கழகமாகும். அதன் 3 இலட்சத்துக்கும் மேலான மாணவர்கள் வகுப்புகளைப் புறக்கணித்து விட்டு கல்விக் கட்டண உயர்வை எதிர்த்து 9 மாத காலமாக நடத்திய போராட்டம் தென்னமெரிக்க கண்டத்தையே உலுக்கியது.

கட்டண உயர்வுக்கு எதிராகத் தொடங்கிய மாணவர்களின் இப்போராட்டம், அனைவரும் கல்வி



படிப்பகம்

www.padippakam.com

பெறும் அடிப்படை உரிமைக்கான போராட்டமாக, நாட்டை மறுகாலனியாக்கி வரும் மெக்சிகோ ஆட்சியாளர்களின் தனியார்மய - தாராளமயக் கொள்கைக்கு எதிரான போராட்டமாக, உழைக்கும் மக்களின் ஆதரவு பெற்ற போராட்டமாக விரிவடைந்தது. போராடும் மாணவர்களை அராஜகவாதிகளாக, வன்முறையாளர்களாகச் சித்தரித்து, போலீசை ஏவி ஒடுக்கியும் ஆயிரக்கணக்கானோரைக் கைது செய்து சிறையிலடைத்த போதிலும் மாணவர்களின் போராட்டம் ஓயவில்லை.




கல்விக் கட்டண உயர்வை எதிர்த்தும் நாட்டை மீண்டும் காலனியாக்குவதை எதிர்த்தும் மெக்சிகோ மாணவர்களின் போர்க்கோலம்.

உழைக்கும் மக்களுடன் மாணவர்கள் ஐக்கியப்பட்டு நின்று போராடியதால், இப்போராட்டத்தை ஆட்சியாளர்களால் அவ்வளவு எளிதாக ஒடுக்கிவிட முடியவில்லை. தலைமறைவாக இருந்து போராட்டத்தை வழிநடத்திய முன்னணியாளர்கள் பலரை மெக்சிகோ நகர உழைக்கும் மக்கள் தமது வீடுகளில் அரசுக்குத் தெரியாமல் பாதுகாத்தனர். போலீசு தாக்குதலில் காயமடைந்த மாணவர்களுக்கு தமது வீடுகளிலேயே தங்கி சிகிச்சை பெற ஏற்பாடு செய்தனர்.

தொழிலாளர்கள், உழைக்கும் மக்களுடன் நெருங்கிய பிணைப்பு கொண்ட மாணவர்கள், அவர்களது உதவியுடன் தற்காப்புக் குழுக்களைக் கட்டியமைத்து அரசின் அடக்குமுறையை எதிர்த்து வீதிகளில் வீரப்போர் புரிந்தனர். கல்லூரிகளையும் விடுதிகளையும் அரசு மூடிவிட்ட போதிலும், மாணவர்கள் தமது வீடுகளுக்குத் திரும்பிச் செல்லவில்லை. தமது பெற்றோரும், மெக்சிகோ நகர உழைக்கும் மக்களும் அளித்த நன்கொடை மற்றும் தானியத்தைக் கொண்டு பல்கலைக் கழக வளாகத்திலேயே தங்கி கூட்டாக சமையல் செய்து, போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

அன்றாடம் பிரசுரங்கள், சுவரொட்டி, பத்திரிகைகளுக்கு செய்தி அளித்தல், ஆர்ப்பாட்டப் பேரணிகள், பொதுக் கூட்டங்கள் என அவர்களது போராட்டம் தொடர்ந்தது. பள்ளிகள் - கல்லூரிகள் அனைத்திலும் மாணவர் சங்கங்களின் போராட்டக் கொடி உயர்ந்தது. தென்னமெரிக்க கண்டத்து இளைஞர்களின் எழுச்சி நாயகனாகிய சே குவேராவின் உருவப் படங்களை ஏந்தி, போராட்டத்தைத் தொடர்ந்த மாணவர்கள், தென்னமெரிக்க கண்டம் முழுவதும் இப்போராட்டத்துக்கு ஆதரவு திரட்டினர்.

மெக்சிகோ அரசு மின்துறையை தனியார்மயமாக்கியதை எதிர்த்து தொழிலாளர்கள் போராடிய போது, மாணவர்கள் இதற்கு ஆதரவாக முன்னணியில் நின்றனர். இந்திய ஆட்சியாளர்களைப் போலவே, ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து பால் மற்றும் பால் பொருட்களை கட்டுப்பாடின்றி இறக்குமதி செய்யும் மெக்சிகோ துரோக ஆட்சியாளர்களை எதிர்த்து விவசாயிகளும் பால் உற்பத்தியாளர்களும் கறந்த பாலை வீதிகளில் கொட்டி போராடியபோது, மாணவர்கள் இப்போராட்டத்திற்கு ஆதரவாக நகரங்களில் ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்தனர். சியாபாஸ் பகுதியில் பெருமழை - வெள்ளம் ஏற்பட்டபோது, மாணவர்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவிகளைச் செய்ய ஓடோடிச் சென்றனர்.

நாட்டை மீண்டும் காலனியாக்கிவரும் தனியார்மய - தாராளமயக் கொள்கைகளுக்கு எதிராக உழைக்கும் மக்களின் பேராதரவுடன் மாணவர்கள் நடத்திய இப்போராட்டத்தின் விளைவாக, பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவி விலகி ஓடினார். கடந்த பிப்ரவரியில் அதிபர் எர்னஸ்டோ ஜெடில்லோ, போராட்ட நிர்பந்தம் காரணமாக கல்விக் கட்டண உயர்வை சற்றே குறைப்பதாக பேச்சு வார்த்தைக்கு முன் வந்தார். இதை ஏற்க மறுத்து மாணவர்கள் போராட்டத்தைத் தொடர்ந்த போது, இராணுவம் பல்கலைக் கழகத்தைக் கைப்பற்றி ஆயிரக்கணக்கானோரைச் சிறையிலடைத்தது. இதன் காரணமாக, போராட்டத்தைத் தற்காலிகமாக முடிவுக்குக் கொண்டு வந்த மாணவர்கள், அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றனர்.

தங்களது துறைசார்ந்த கோரிக்கைகளுடன் வரம்பிட்டுக்கொள்ளாமல், நாட்டை மீண்டும் காலனியாக்கும் தனியார்மய - தாராளமயத்துக்கு எதிராக மெக்சிகோ மாணவர்கள் நடத்திய இப்போராட்டம், உலகெங்கும் உள்ள ஏழைநாட்டு மாணவர் - இளைஞர்களுக்கு புதிய பாதையைக் காட்டியுள்ளதோடு, நாளை வெடித்தெழப் போகும் புரட்சியைக் கட்டியங்கூறுவதாக உள்ளது.

''அரசியல்வாதிகளே, எங்களை விட்டு விடுங்கள்'' எனக் கோரி, சமூகப் பிரச்சினைகளில் இருந்து ஒதுங்கிச் செல்லும் தமிழக மாணவர்கள்.




● குமார்



படிப்பகம்

www.padippakam.com

# இந்திய இராணுவத்தின் 'தேச பக்த' படுகொலைகள்

மார்ச் 20, 2000, "ஜம்மு - காசுமீர் மாநிலத்தில் அனந்த்நாக் மாவட்டம் சித்திசிங் போரா கிராமத்தில் புகுந்த பாக். ஆதரவு அந்நியக் கூலிப்படையினரும் காசுமீர்த் தீவிரவாதிகளும் நடத்திய தாக்குதலில் 36 அப்பாவி சீக்கியர் படுகொலை செய்யப்பட்டார்கள்."

மார்ச் 25, 2000, "ஜம்மு - காசுமீர் மாநிலத்தில் அனந்த்நாக் மாவட்டம் சித்திசிங் போரா கிராம சீக்கிய அப்பாவி மக்கள் 36 பேரைப் படுகொலை செய்த அந்நியக் கூலிப் படையினர் ஐந்து பேரை நமது பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றனர்."

ஏப்ரல் 3, 2000, "ஜம்மு - காசுமீர் மாநிலம் அனந்தநாக் நகரில் கலவரம் செய்ய முயன்ற பாக். ஆதரவுக் கும்பல் மீது நமது பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 7 கலகக்காரர்கள் சாவு."

தினமும் வானொளி - வானொலியிலும், பத்திரிகைகளிலும் தவறாது இடம்பெறும் தலைப்புச் செய்திதானே இவையும் என்று எண்ணிக் கொண்டு, நமது வழக்கமான வேலைகளைக் கவனிக்க அந்நாட்களிலும் போய் விட்டோம்.

இதற்கு முன்னும் பின்னும் எவ்வளவோ செய்திகள் இப்படி வந்து கொண்டு தானே இருக்கின்றன. காதுகள் மரத்துப் போய், இதயம் இறுகிப் போனார்கள் சராசரி இந்தியர்கள்.

இருந்தாலும் இவை மூன்றும் வழக்கமாக தலைப்புச் செய்திகளில் அடிபட்டு மறைந்து போய் விடவில்லை. இந்திய அரசின் கபடத் தனத்தையும், இந்திய இராணுவத்தின் காட்டு மிராண்டித்தனத்தையும் நிரூபிக்கும் இரத்தச் சாட்சியங்களாகப் பதியப்பட்டு விட்டன.

* * *

ஜம்மு - காசுமீர் மாநிலத்தின் 116 குக்கிராமங்களில் 50,000 சீக்கியர்கள் வாழுகின்றனர். இவர்கள் தவிர நகர வியாபாரிகளாகவும் போக்குவரத்துப் பணியாளர்களாகவும் சில ஆயிரம் பேர் வாழுகின்றனர். இவ்வளவு ஆண்டுகளாக நடக்கும் இந்திய-காசுமீர்ப் போரில் இராணுவ அதிகாரிகளாகவும், சிப்பாய் களாகவும் போகும் சீக்கியர்கள் தவிர வேறு எவரும் காசுமீர்ப் பிரச்சினையில் தலை யிட்டது கிடையாது. ஒருபுறம் பாக். ஆதரவு காசுமீர் தீவிரவாதிகள், மறுபுறம் இந்திய இராணுவம் ஆகிய இரண்டு தரப்புக்குமே "நடுநிலை" வகித்தோ, இரண்டு தரப்பையும் "ஆதரித்தோ", இரண்டு தரப்பின் மிரட்டலுக்குப் "பயந்தோ" சமரசம் செய்து கொண்டு, காசுமீர் சீக்கியர்கள் தமது உயிரைக் காத்துக் கொண்டு வந்தனர்.

மார்ச் 20-ந் தேதி. சித்திசிங் போரா கிராமத்தை இருள் சூழத் தொடங்கி இருந்தது. அது மலைமீது அமைந்துள்ள சிறு கிராமம். பெண்கள் உணவு தயாரித்துக் கொண்டிருந்தார்கள். பகல் முழுவதும் உழைத்துக் களைத்து போயிருந்த ஆண்கள் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

இந்திய இராணுவச் சீருடை அணிந்திருந்த 20 பேர் அடங்கிய ஒரு கும்பல் அக்கிராமத்துக்குள் புகுந்தது. தேடுதல் பணிக்கு வந்திருப்பதாகக் கூறிக் கிராம மக்களின் அடையாள அட்டைகளை வாங்கிப் பார்த்தனர். சிறுவர்-சிறுமிகளோடு வீட்டுக்குள் போய் விளக்கணைத்துக் கொண்டு இருக்கும்படி பெண்களுக்கு ஆணையிட்டனர்.

ஆண்களை மட்டும் திரட்டிக் கொண்டு இரண்டு கும்பலாகப் பிரித்து குருத்துவாராவுக்குச் சற்றுத் தொலைவில் வரிசையாக நிற்க வைத்தனர். சற்று நேரத்தில் சரஞ்சரமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தி 36 பேரைக் கொன்றனர். இருளைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டும், தரையிலே படுத்துக் கொண்டும் ஒரு சிலர் தப்பித்தனர். இறந்தவர்களில் முதியவர்களும், இந்திய உளவுத்துறை ஆய்வாளர் ஒருவரும் அடங்குவர். எல்லாம் 15 நிமிடத்தில் நடந்து முடிந்தன.

கதறலும் ஒப்பாரியும் அந்த மலை முகடுகளில் பட்டு எதிரொலித்தன. வெளியே வராமல் வீட்டுக்குள் பதுங்கியிருந்து, உடைந்த சன்னல் வழியே அந்தக் கோரத்தைக் கண்டு அதிர்ச்சியடைந்த மங்கள்சிங் சொன்னார். "இது ஜாலியன் வாலாபாக் சம்பவத்தை நினைவூட்டுவதாக இருந்தது. ஜெய் மாதா! ஜெய்ஹிந்த்! என்று கூச்சலிட்ட அந்தக் கொலைகாரர்கள், எங்கள் பாணியில் ஹோலிப் பண்டிகையைக் கொண்டாடுகிறோம் என்று கூவினார்கள்". அக்கிராமத்தில் இருந்து 14 கி.மீ. தள்ளியுள்ள சாங்குஸ் கிராமப்பெண் ஒருத்தி ஒரு இராணுவக் கும்பல் பிர்பஞ்சால் மலைத்தொடரை நோக்கிப் போனதாகச் சொன்னாள்.

ஐந்து மணி நேரம் கழித்து, இந்திய துணை இராணுவப் படையினர் சித்திசிங் போரா கிராமத்துக்கு வந்து சேர்ந்தனர். "அங்கு நடந்த படுகொலை பாக் - ஆதரவு அந்நியக் கூலிப் படையினர் புரிந்த சதிச் செயல். 'ஜெய் மாதா, ஜெய் ஹிந்த்' என்று கூச்சலிட்டது திசை திருப்பும் நோக்கமுடையது. அமெரிக்க அதிபர் கிளிண்டடனின் வரலாற்றுச் சிறப்புமிக்க பயணத்தின்போது, திட்டமிட்டுச் செய்த கோழைத்தனமான வெறிச் செயல்" என்று இந்திய அரசும் இராணுவமும் அறிவித்தது.

அவ்வளவுதான்.

**சீக்கியர்களைச் சுட்டுக் கொன்ற தீவிரவாதிகள் எனப் புளுகி இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்ட அப்பாவி முசுலீம்களின் சடலங்கள் தோண்டியெடுக்கப்படுகின்றன.**





படிப்பகம்

www.padippakam.com

நல்லக்கண்ணு, சங்கரய்யா, மூப்பனார், ஜெயலலிதா, கருணாநிதி முதற்கொண்டு அனைத்துக் கட்சி, அனைத்து அரசுத் தலைவர்கள், இந்தியப் பிரதமர் மட்டுமல்ல, பிரித்தானியப் பிரதமர் டோனி பிளெயர் உட்பட எல்லோரும் அமெரிக்க அதிபர் கிளிண்டன் தலைமையில் பயங்கரவாத எதிர்ப்பு - கண்டன அறிக்கைகள் வெளியிட்டனர்.

குறிப்பாக, சீக்கிய சமூக-மதத் தலைவர்கள் கொதிதெழுந்தனர். சீக்கியர் குருத்துவாரா உள்ள இடங்களில் எல்லாம் பாகிஸ்தானைக் கண்டித்தும், படுகொலையைக் கண்டித்தும் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. ஜம்மு நகரில் திரண்ட சீக்கியர்கள் தமக்குப் பாதுகாப்புக் கோரியும் கொலையாளிகளைத் தண்டிக்கக் கோரியும் மாநிலக் குளிர்காலத் தலைமைச் செயலகத்தை முற்றுகையிட்டனர். சீக்கியர் - இசுலாமியர் கலவரம் கடும் முயற்சிக்குப் பின் தடுக்கப்பட்டது. பாகிஸ்தான் மீது போர்தொடுக்க வேண்டும் என்று கோரினர், இராணுவத்தின் முன்னாள் தளபதிகள். கிளிண்டன் இந்தியாவில் இருக்கும் போதே நடத்தப்பட்ட இந்தப் படுகொலையை வைத்தே பாகிஸ்தானைப் பயங்கரவாத நாடாக அறிவிக்கலாம்; இராணுவ ஆட்சி நடக்கும் அந்தப் பயங்கரவாத நாட்டுக்கு கிளிண்டன் போகக் கூடாது என்று இந்திய அரசு வேண்டுகோள் விடுத்தது.

கிளிண்டன் இந்திய மண்ணை விட்டுப் புறப்படும் முன்பே, அதாவது மார்ச் 25-ந் தேதியே, சித்திசிங்போரா படுகொலை களுக்குக் காரணமான அந்நியக் கைக் கூலித் தீவிரவாதிகள் 5 பேரை அசாம் துப்பாக்கிப் படையினரும், மாநிலச் சிறப்பு நடவடிக்கைப் படையினரும் சுட்டுக் கொன்று விட்டதாகக் குதூகலமாக அறிவித்தனர்.

"சித்திசிங் போரா படுகொலையின் போது கொல்லப்பட்ட ஒரு சீக்கியர், 'சாட்டியா, நீயா இங்கு!' என்று கேட்டாராம். உடனேதான் துப்பாக்கிச் சூடு துவங்கியது; "சாட்டி" என்பது மக்வாரா என்ற உள்ளூர் முசுலீம் போலீஸ்காரர். கொலையாளிகளின் கூட்டத்தில் மக்வாரா இருந்தார் என்பதற்கான ஆதாரம் சிக்கியது. அதை வைத்து விசாரித்ததில் சித்திசிங் போரா கிராமப் படுகொலையில் சம்பந்தப்பட்ட அந்நியக் கூலிப்படையினர் சிலர் அருகிலுள்ள பத்ரிபால் கிராமத்தில் ஒளிந்து கொண்டிருப்பது தெரிந்தது. அவர்களது மறைவிடத்தை இந்தியப் படையினர் சூழ்ந்து கொண்டபோது நடந்த மோதலில் ஐந்து தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். அவர்களது மறைவிடத்திலேயே தீ வைத்துக் கொளுத்திப் புதைத்து விட்டோம்" என்று அறிவிக்கப்பட்டது.

அதுவரையிலான சம்பவங்களின் விளைவுகள் இந்திய அரசுக்குச் சாதகமாகவே இருந்தன. கிளிண்டன் உட்பட உள்ளேயும் வெளியேயும் பல தலைவர்கள் கண்டனம் தெரிவிக்கும்படி நேர்ந்தது. காசுமீரில் தீவிரவாதிகளின் பயங்கரவாதச் செயல்கள்தான் முடிவு கட்டப்பட வேண்டிய முக்கிய பிரச்சினை என்கிற வாதம் வலுவாகியது; இதன் மூலம் காசுமீரிப் பண்டிதர்கள் மட்டுமல்ல, காசுமீரி சீக்கியர்களும் தீவிரவாதத்தினால் கொல்லப்படுகிறார்கள் என்று காட்ட முடிந்தது; "நடுநிலை" வகித்து வந்த காசுமீரி சீக்கியர்களை காசுமீரி முசுலீம்களுக்கு எதிராகத் திருப்பி விட முடிந்தது; பின்னர் சித்திசிங்போரா கிராமப் படுகொலைக்குக் காரணமானவர்கள் என்று 5 பேரைச் சுட்டுக் கொன்றதன் மூலம் கொந்தளிப்பு நிலையில் இருந்த சீக்கிய சமுதாயத்தையும் மனநிறைவடையச் செய்ய முடிந்தது.



அனந்த்நாக் நகரில் நடந்த ஊர்வலத்தின் மீது இந்திய இராணுவம் கண்மூடித்தனமாகச் சுட்டதால், இறந்து போன காசுமீர் முசுலீம்கள்.

ஆனால், அடுத்த சில நாட்களிலேயே விவகாரம் முழுவதும் இந்திய அரசுக்கும் இந்தியப் படைக்கும் எதிராகத் திரும்பியது. இவர்களைத் திருடனுக்குத் தேள்கொட்டிய நிலையில் வைத்தது.

சித்திசிங் போரா கிராமப் படுகொலைக்குக் காரணமான அந்நிய தீவிரவாதக் கைக்கூலிகள் என்று சொல்லி பத்ரிபால் கிராமத்தில் கொல்லப்பட்டவர்கள், உண்மையில் அப்படிப் பட்டவர்கள் அல்ல; அங்கு இந்தியப் படைக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் மோதல் நடந்ததாகக் கூறப்படுவதே பொய்யானது. சீக்கியர் படுகொலை நடந்ததற்கு அடுத்த நாளே இந்தியப் படையினர் "குறுங்கத்தி (கிர்பான்) நடவடிக்கை" எனப்படும் தேடுதல் வேட்டையைத் துவங்கினர். பத்ரிபால் என்னும் கிராமத்துக்குள் புகுந்து சில இசுலாமியக் கூலித் தொழிலாளர்களையும் சிறு வியாபாரிகளையும் இழுத்துக் கொண்டு போனார்கள். அவர்களில் 5 பேரைச் சுட்டுக் கொன்று அரைகுறையாக எரித்து, உருக்குலைத்து அவசர அவசரமாகப் புதைத்து விட்டனர். பிரேதப் பரிசோதனை, அடையாளங் காணும் முயற்சி எதுவுமின்றி அந்நியத் தீவிரவாதக் கைக்கூலிகள் தாம் என்று பச்சையாகத் திரித்துக் கூறினர். அதையே காசுமீர் சட்டமன்றத்தில் முதல்வர் பரூக் குதூகலமாக அறிவித்தார். அடுத்தநாள் சித்திசிங் போரா வந்த மத்திய உள்துறை மந்திரி அத்வானியைக் குஷிப்படுத்தும் விளக்கமும் அளிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட பத்ரிபால் கிராம மக்கள் இந்தியப் படையின் கட்டுக்கதையை நம்பி விடுவார்களா என்ன? கொன்று புதைக்கப்பட்டவர்களின் மோதிரம், துணி முதலானவற்றை "வெட்டியான்" மூலம் பெற்ற உறவினர்கள் அலறித் துடித்தனர். ஜம்மு - காசுமீர் முழுவதும் உண்மைச் செய்தி பரவிடவே பல இடங்களிலும் பொய்யான மோதல் - படுகொலைக்கு எதிராக மக்கள் கொந்தளிப்பு எழுந்தது. குறிப்பாக ஹுரியத் மாநாட்டுக் கூட்டமைப்பு, ஜம்மு - காசுமீர் விடுதலை இயக்கத்தினர் தலைமையில் திரண்டு போர்க்குணத்துடன் போராடினர். கொன்று புதைக்கப்பட்ட உள்ளூர்க்காரர் களின் பிணத்தைத் தோண்டி எடுத்து பரிசோதிக்க வேண்டும் என்று கோரினர்.

ஏப்ரல் 2-ந் தேதி அனந்த்நாக் நகரில் திரண்ட 2000 பேர்கள் கொண்ட பேரணி மீது, கண்மண் தெரியாமல் இந்தியப் படையினர் சுட்டதில் மேலும் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர்; பலர் படுகாயமுற்றனர். காசுமீர்ப் பள்ளத்தாக்கு முழுவதும் கொதித்தெழுந்து தன்னெழுச்சியான போராட்டங்கள் வெடித்தன. வேறு வழியின்றி பத்ரிபாலில் கொன்று புதைக்கப்பட்ட பிணங்களைத் தோண்டி எடுத்துப் பரிசீலிக்க அரசு ஒப்புக் கொண்டது.

ஏப்ரல் 6-ந் தேதி, பத்ரிபால் கிராமத்தில் புதைக்கப்பட்டிருந்த 5 பேரின் சடலங்களையும் சிறீநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை தடய அறிவியல் நிபுணர்கள் தோண்டி எடுத்தனர். "உயிரணுப் பரிசோதனைக்குப் பிறகுதான் உண்மை தெரியும்" என்று அந்த நிபுணர்கள் கூறினாலும், சடலங்களைத் தோண்டி எடுத்ததும் குட்டு வெளிப்பட்டு விட்டது.



படிப்பகம்

www.padippakam.com

அவை அனைத்தும் இந்தியப் படையின ரால் மார்ச் 11-ந் தேதி இழுத்துச் செல்லப் பட்டு, தங்களுடனான ஆயுத மோதலில் கொல்லப்பட்ட அந்நிய தீவிரவாதக் கைக் கூலிகள் என்கிற பெயரில் எரித்துச் சிதைத்துப் புதைக்கப்பட்ட உள்ளூர்க் கிராமவாசிகளின் சடலங்கள். கடும் ஆயுதச் சண்டையில் கொல்லப் பட்டதாகக் கூறப் படும் ஜுமாகான் என்ற 65 வயது முதிய வரின் சடலத்தை அவரது மனைவியும் மகனும் அடையாளம் காட்டினர். ஜகூர் அகமது தலால் என்ற சிறு வியாபாரியின் சடலத்தை அவரது தாய்மாமன் அடையாளங் காட்டினார். மற்றவர்கள், இன்னொரு ஜுமாகான், முகமது யூசுப் மாலிக், பஷீர் பட் என்று அவரவர் உறவினர்களின் சடலங் களை அடையாளங் காட்டினர்.

அனந்த்நாக் மாவட்டத்தில் இருந்து அவர்களோடு பிடித்துச் செல்லப்பட்ட இன்னும் 17 பேரின் கதி என்னவென்று இதுவரைத் தெரியவில்லை. அனைவரை யும் கொன்று விட்டார்களா? அவர்கள் எங்கே? என்பதைச் சொல்ல மறுக்கிறது போலீசு.

"பத்ரிபாலில் தீவிரவாதிகளுடன் ஆயுத மோதலில் நடந்ததாகக் கூறப்படுவது பொய் தான். அங்கே கொல்லப்பட்டவர்கள் உள்ளூர் மக்கள்தான்; தீவிரவாதிகள் அல்ல'' என்பதை இராணுவ அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் ஒப்புக் கொள்ளுகின்றனர். ''விரைவான பலனை தேடித் தரும்படி அரசு தரும் நிர்பந்தம் தான் போலியான ஆயுத மோதல்கள், அப்பாவி மக்கள் கொலைகளுக்குக் காரணம்'' என்று அவர்கள் விளக்கமளிக்கின்றனர்.

முதல்வராக பரூக் அப்துல்லா பதவியேற்ற மூன்றாண்டுகளில் முதன் முறையாக போலீசு - இராணுவ நடவடிக்கை ஒன்றைக் கண்டித்துள்ளார். சித்திசிங் போரா சீக்கியர் படுகொலை முதல் அனந்த்நாக் பேரணி மீதான துப்பாக்கிச் சூடு வரை அனைத்தையும் விசாரிக்க உச்சநீதி மன்ற முன்னாள் நீதிபதி இரத்தினவேல்

தொடர்ச்சி 26-ஆம் பக்கம்

# வக்கிரமும் மனிதநேயமும்

இந்தியாவின் எதிரிகள் என்று யாரையெல்லாம் அடையாளப்படுத்தி, அவர்களுக்கு எதிராக என்னவெல்லாம் நடவடிக்கையெடுத்தாலும் அவற்றை ஆதரிப்பதுதான் தேசபக்தி என்றாகி விட்டது. இன்னும் கடுமையான நடவடிக்கை எடுக்கக் கோருவதுதான் தேசபக்தியை மேலும் உறுதியாக வெளிப்படுத்துவதாகும்; இதற்கு எதிராகக் கருத்துக் கூறுவதெல்லாம் தேசத் துரோகம், அந்நியக் கைக்கூலி என்று முத்திரை குத்தப்படும் சூழ்நிலை உருவாக்கப் பட்டுள்ளது. இந்த வக்கிரத்தின் மறு பெயர்தான் தேசபக்தி என்பதாகிப் போனது.

சான்றாக, இதோ, ''அவுட்லுக்'' ஆங்கில ஏட்டில் வந்த வாசகர் கடிதத் துளிகள்: (கடந்த ஆண்டு இறுதியில் நடந்த இந்திய விமானக் கடத்தலை ஒட்டி எழுதப்பட்டவை)

''தீவிரவாதிகளிடம் இந்தியா இரக்கம் காட்டவே கூடாது. அவர்களைப் பல ஆண்டுகள் சிறையில் வைத்திருப்பதற்கு மாறாக, அவர்களைப் பிடித்ததும் சுட்டுக் கொன்று விடவேண்டும். அப்போதுதான் அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று யாரும் பேரம் பேச முடியாது.''

— பிரதீப் கே. சிறீவத்சவா, லக்னோ

''செய்ய வேண்டிய சில விசயங்கள்:

- 165 பணயக்கைதிகளுக்கும் ஒரு தேசிய நினைவுச்சின்னம் எழுப்பிவிடவேண்டும்.
- இந்தியச் சிறையில் உள்ள பயங்கர வாதிகள் அனைவரையும் பொது இடங்களில் வைத்துச் சுட்டுக் கொன்று விடவேண்டும்.
- தாலிபான் கைப்பற்றி வைத்துள்ள ஆ∴ப்கான் பகுதிகள் மீது குண்டுமாரிப் பொழிந்து மண்ணோடு மண்ணாக்கி விடவேண்டும்.
- பணயக் கைதிகளுக்கு ஈடாக பயங்கரவாதிகளை விடுவிக்க முயலும் அனைவரையும் தண்டிக்க வேண்டும்.''

— வாலிந்தர் சிங் மங்கத், ஐதராபாத்.

''விமானக் கடத்திகள் கேட்டவாறு மூன்று பயங்கரவாதிகளை விடுதலை செய்ததற்கு முன்பு, எயிட்ஸ் அல்லது ஹெபடைடிஸ் - பி கிருமிகளை வைத்து ஊசி போட்டிருக்க வேண்டும். இன்னும் கூட காலதாமதமாகி விடவில்லை. சிறையில் மிஞ்சியிருக்கும் பயங்கர வாதிகளுக்கெல்லாம் அதையே செய்து விட வேண்டும். அப்போதுதான் அவர்களை விடுவிக்க வேண்டுமென்று யாரும் பேரம் பேச மாட்டார்கள்.''

— ஜி. சுனில், நியூ ஜெர்சி, அமெரிக்கா

அமெரிக்காவுக்கு ஓடிப்போய் சொகுசாக வாழும் இந்தத் தேசபக்தனின் கருத்துக்கு மாறாக, கடத்தப்பட்ட விமானத்தில் பணயக் கைதிகளாக இருந்து விடுபட்ட புதுமணத் தம்பதிகள் சுக்வீந்தரும் ராஜீந்தர்சிங்கும் சொன்னார் கள், ''கடத்தல்காரர்கள் 5 பேரும் எங்களை அன்பாக நடத்தினார்கள். பணயக் கைதி களைப் போலவே எங்களைப் பிடித்து வைத்திருந்தவர்களும் கண்ணியமாகவே நடந்தார்கள். அவர்களுடைய அன்புக் குரியவர்கள் இந்தியச் சிறையில் எப்படி ஈவிரக்கமின்றிச் சித்திரவதை செய்யப் படுகிறார்கள் என்றுகூட விவரித்தார்கள். நகங்கள் பிடுங்கப்பட்டது, மயிர்கள் கருக்கப்பட்டது, ஒருவர் அடுத்தவர் வாயில் சிறுநீர் கழிக்கும்படி செய்யப் பட்டது பற்றிக் கூறினார்கள். பொதுவாக நமது இராணுவத்தினர் அவர்களது பெண்களைக் கற்பழிக்கிறார் கள், கொல்கிறார்கள். ஆனால், அவர்களோ நமது பெண்களை எவ்வளவு மரியாதை யாக நடத்தினார்கள்! சகோதரிகளே என்றே விளித்தார்கள்!''

விமானத்தின் பொறியியலாளர் அனில் ஜாக்கியா, காந்தாரம் விமான நிலையத்தின் நடுங்கும் குளிரில் பழுது பார்த்துக் கொண்டிருந்தார். ஜாக்கியா வுக்குக் காவலாக நின்ற கடத்தல்காரன் தனது தோல் கோட்டை கழட்டிக் கொடுத்தான். ''என்னைக் கொல்வதற்கு ஒரு கையில் துப்பாக்கியை நீட்டிக் கொண்டே மறுகையில் தோலாடை தரு கிறாயே, இது எப்படி?'' என்று கேட்டேன். ''அது என் கடமை. இதுவும்கூட என் கடமை. நீங்கள் என் தந்தையைப் போன்ற வர் இல்லையா?'' என்றான். நான் அந்தக் கோட்டை வாங்கிக் கொள்ளவில்லை. ''உன்னைப் பாதுகாக்கும் கடமை உன் தந்தைக்கும் உண்டல்லவா? அதுபோலவே நானும்'' என்று சொல்லி விட்டேன். அவன் உள்ளே மெல்லிய சட்டையே அணிந்திருந் தான். கடுங்குளிரில் நடுங்கிப் போவான் என்று அஞ்சினேன். இறுதியாக பயணக் கைதிகள் விடுவிக்கப்பட்டு வரும்போது அந்தப் பையனுக்கு ஒரு டார்ச் விளக்கைக் கொடுத்து, ''நீ நல்ல பையன், ஆனால் தவறான பாதையில் போகிறாய். உனக்குரிய வழியைக் காண இந்த விளக்கு உதவும்; என்று சொன்னேன். புன்னகை யுடன் என் அன்பளிப்பை வாங்கிக் கொண்டு போன அவன், பணயக் கைதி களிடமிருந்து எந்த அடையாளச் சின்னங்களும் பெற வேண்டாம்'' என்று அவர்களது தலைவன் கட்டளையிட்ட தாகச் சொல்லித் திருப்பிக் கொடுத்தான். அந்தப் பையன் எங்கே இருந்தாலும் அவனைப் பற்றிய செய்தியைப் படிக்கவும் அறியவும் விரும்புகிறேன். காந்தாரத்தின் நடுங்கும் குளிர் நாளில் அவன் காட்டிய அன்பை நான் உண்மையில் மதிக்கிறேன்.

அது, தேசபக்தி அல்ல, வக்கிரம்; இது, தேசத் துரோகமல்ல, மனிதநேயம்!



படிப்பகம்

www.padippakam.com

# கருப்புப் பணம்: தீராத நோய்

"நடக்கவிருக்கும் நாடாளுமன்ற மேலவைத் தேர்தல்களில் பெருமளவு பணம் புகுந்து விளையாடப் போவதாகத் தகவல் வந்திருக்கிறது. மைய அரசு தகுந்த எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்'' என்று மையத் தேர்தல் ஆணையம் கடந்த மார்ச்சு மாதம் முதல் வாரத்தில் அறிக்கை அனுப்பியது.

கொட்டும் மழையானாலும் குதூகலிக்கும் எருமை மாடு சிறு தூறலுக்கு மிரண்டா போய்விடும்! தேர்தல் ஆணையத்தின் எச்சரிக்கை என்ன தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது!

எட்டு மாநிலங்களில் சமீபத்தில் நடந்து முடிந்த நாடாளுமன்ற மேலவைத் தேர்தல்கள் நாட்டின் இரண்டு பெரிய ஆளும் வர்க்கக் கட்சிகளை அதிர்ச்சியடையச் செய்து விட்டன. முக்கியமாக கர்நாடகா, மேற்கு வங்கத் தேர்தல் முடிவுகள் காங்கிரசையும், உத்திரப் பிரதேசத் தேர்தல் முடிவுகள் பாரதீய ஜனதாவையும் கலங்கடித்து விட்டன. பிற கட்சிகளைவிட மிக அதிக அளவில் இவ்விரண்டு கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சிமாறி வாக்களித்திருக்கிறார்கள். வேறு விதமாகச் சொல்வதானால், விலை போய்விட்டார்கள்.

கர்நாடகாவைச் சேர்ந்த கொழுத்த 'சாராய அதிபர்' விஜய் மல்லையா தேர்தலுக்கு முன்பு 18 எம்.எல்.ஏ.க்கள் ஆதரவை மட்டும் வாங்கியிருந்தார். தேர்தல் முடிவைப் பார்த்தால் மேலும் 17 பேர் இவருக்கு ஆதரவாக வாக்குப் போட்டுள்ளார்கள். அவ்வளவு பேரும் காங்கிரசுக்காரர்கள். உத்திரப் பிரதேசத்தின் கான்பூர் நகரத் தொழிலதிபர் எம்.எம். அகர்வால். இவர் போட்டிக் காங்கிரசு வேட்பாளராக நின்று பா.ஜ.க., காங்கிரசு, முலயம், கன்ஷிராம் கட்சி எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்கி வெற்றியும் பெற்று மேலவை எம்.பி. ஆகிவிட்டார். மேற்கு வங்கம், ஒரிசாவில் காங்கிரசு எம்.எல்.ஏக்கள் கூண்டோடு கட்சி மாறி வாக்களித்தார்கள். இவை எதுவும் அரசியல் விசுவாசத்தால் நடந்ததல்ல. குறைந்தது 10 இலட்சம் ரூபாய் வரை ஒவ்வொரு எம்.எல்.ஏ.வுக்கும் விலை கொடுக்கப் பட்டுள்ளது.

திருடனுக்குத் தேள் கொட்டியதைப் போல தேர்தல் அரசியல் கட்சிகள் முழிக்கின்றன. அவ்வளவும் கருப்புப் பணம். சாராய ஆலையில் இருந்து வெளிவரும் ஒவ்வொரு பாட்டிலுக்கும் தகுந்த ஆயத் தீர்வை லேபிள் ஒட்டி வெளியே விற்பனைக்கு அனுப்ப வேண்டும். ஆனால் விஜய் மல்லையா போன்ற சாராய அதிபர்கள், அரசியல்வாதிகள் - அதிகாரிகளைத் தகுந்த முறையில் கவனித்துவிட்டு, ஆயத்தீர்வைக் கட்டாமல் கள்ளச் சந்தையில் விற்றுக் கருப்புப் பணத்தைக் குவிக்கிறார்கள். அதை வைத்து கர்நாடகா அரசியலையே விஜய் மல்லையா ஆட்டிப் படைத்து வந்தார். இப்போது தானே அரசியலில் குதிக்க எண்ணி, தேர்தலில் குதித்து, கருப்புப் பணத்தை வாரி இறைத்துள்ளார். இந்த விஜய் மல்லையா, ஆந்திராவில் நக்சல்பாரிகளால் கொல்லப் பட்ட காங்கிரசு எம்.பி. சுப்பராமி ரெட்டி, அவர் தம்பியும் சென்னை இராயப்பேட்டை நிதி நிறுவனத்தில் கோடிகோடியாக சுருட்டிய முன்னாள் எம்.பி.யுமான சீனிவாசலு ரெட்டி, நம்ம ஊர் ஜெயலலிதா - சசிகலா அடங்கிய கருப்புப் பணக் கும்பலின் வலைப்பின்னல் பற்றி முதலாளியப் பத்திரிக்கைகளே எழுதியுள்ளன.

இத்தகைய கருப்புப் பணம்தான் நாட்டின் அரசியலை மட்டுமல்ல, பொருளாதாரத்தையே ஆட்டிப் படைக்கும் சக்தியாக வளர்ந்துள்ளது. நாட்டில் எவ்வளவு கருப்புப் பணம் புழக்கத்தில் உள்ளது என்பது துல்லியமாக யாருக்குமே தெரியாது.

1969-இல் அரசாங்கம் அமைத்த வாஞ்சு கமிட்டி அறிக்கைப்படி 1400 கோடி ரூபாய்தான் கருப்புப் பணம். அதாவது அன்று நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பில் 12 சதவீதம். பொதுநிதி மற்றும் கொள்கைக்கான தேசிய நிறுவனத்தின் 1984-ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி அதுவே 36,000 கோடி ரூபாயானது. அதாவது நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பில் 19 சதவீதம்.

இன்றைய நாட்டு மொத்த உற்பத்தி மதிப்பு ஆண்டுக்கு 14 இலட்சம் கோடி. ஆனால், கருப்புப் பண உற்பத்தியோ ஆண்டுக்கு 3 இலட்சம் கோடியாகி விட்டது. அதாவது 21.4 சதவீதம். இதெல்லாம் மிகமிகக் குறைந்த மதிப்பீடுதான் என்பதைச் சொல்லத் தேவையில்லை.



கருப்புப் பணத்தின் மூலம் கர்நாடக மாநில அரசியலையே ஆட்டிப் படைத்து வரும் சாராய ஆலை அதிபர் விஜய் மல்லையா (வலது).

1987-88 இல் சூரஜ் குப்தா என்பவர் எழுதிய ''இந்தியாவில் கருப்பு வருமானம்'' என்கிற நூலின்படி நாட்டு வருமானத்தில் 50 சதவீதம் கருப்புப் பணத்திலேதான் வருகிறது. அது எந்தத் தொழில் நிறுவனத்தின் வரவு - செலவு அட்டவணையிலும் காட்டப் படுவதில்லை. நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை விட கருப்புப் பணத்தின் வளர்ச்சி விகிதம் அதிகமாகவே உள்ளதென்று அநேகமாக எல்லாப் பொருளாதார நிபுணர்களுமே கூறுகின்றனர்.

வேறொரு புள்ளி விவரப்படி நாட்டின் மொத்த ஆண்டு உற்பத்தியில் 1950-60களில் 3 சதவீதமாக இருந்த கருப்புப் பணம்



படிப்பகம்

www.padippakam.com

1961-70களில் 7 சதவீதமாகவும்
1971-80களில் 20 சதவீதமாகவும்
1981-90களில் 35 சதவீதமாகவும்
1995-96இல் 40 சதவீதமாகவும் வளர்ந்து விட்டது என்கிறார்கள். இன்றைய மதிப்பீட்டின்படி 7 இலட்சம் கோடியாக கருப்புப் பணம் உயர்ந்துள்ளது என்கிறார்கள்.

நாட்டில் அரசுக் கட்டுப்பாடும் வரி விதிப்பும் மிகமிக அதிகமாக இருப்பதாலேயே கருப்புப் பணம் அதிகரிக்கிறது என்பது முதலாளிகள் வாதம். ஆனால், ஒரு உண்மையைப் பாருங்கள்: 1971-இல் வருமான வரி அதிகபட்சமாக 97.5 சதவீதமாக இருந்தது. தற்போது 30 சதவீதமாகக் குறைந்து விட்டது. இருந்தாலும் கருப்புப் பணம் நான்கு கால் பாய்ச்சலில் அதிகரிப்பது ஏன்?

கருப்புப் பண ஆசாமிகள் என்று சொன்னாலே பொதுவில் முறைகேடாக பணமும் சொத்தும் சேர்த்து வைத்துக் கொண்டிருப்பவர்கள் என்று எல்லோருக்கும் தெரியும். கடல் போன்ற ஆடம்பர - நவீன அரண்மனைகளிலும், பண்ணை மாளிகைகளிலும் உல்லாச - ஊதாரி வாழ்க்கை வாழ்பவர்கள். கரன்சி பணக் கட்டுகள் கோட்டுச் சூட்டுப் பைகளில் பிதுங்க, தங்கமும் வைரமும் இழைத்த நகைப் பெட்டிகளாக நடமாடும் மனைவிமார்களுடன் விமானங்களிலோ, படகுக் கார்களிலோ பறப்பவர்கள் என்பதைப் பாமர மக்களும் அறிவர். ஆனால், கருப்புப் பணம் என்றால் என்ன, எப்படி அது உருவாகி, வளர்கிறது அதன் பாதிப்புகள் என்ன என்பதைப் பற்றிப் பலருக்கும் தெரியாது. அதனால்தான் ஜெயலலிதா கட்சிக்காரர்கள் போல பலரும், "இப்போதெல்லாம் பணப் புழக்கம் குறைந்து விட்டது. அதனால்தான் தொழில்கள் பெருகவில்லை, வேலை கிடைக்கவில்லை" என்று துணிவுடன் பிரச்சாரம் செய்ய முடிகிறது.

கருப்புப் பணம் என்பது கள்ளநோட்டு அல்ல; அதாவது போலி நோட்டுக்கள் - நாணயங்கள் அல்ல. கருப்புப் பணம் என்பது அரசு அச்சிட்ட நிறத்தில் தான் இருக்கிறதே தவிர, வெள்ளை நிறத்தில் இருந்து கருப்பு நிறத்துக்கு மாறி விடுவதும் அல்ல. மேலும், கருப்புப் பணம் என்பது பணம் மட்டுமல்ல. பணத்தோடு அசையும் அசையா சொத்துக்கள் அடங்கிய செல்வமும் ஆகும்.


தன்னிடம் இவ்வளவு பணமும் அசையும் அல்லது அசையாச் சொத்துக்களும் இருக்கின்றன, இவ்வளவையும் இந்த இந்த வழிகளில் பெற்றேன் என்று பகிரங்கமாக அறிவிக்காது, திருட்டுத்தனமாக மறைக்கப்படும் செல்வங்கள் எல்லாம் கருப்புப் பணம்தான். அதாவது, பகிரங்கமாக அறிவிக்கப்படாத செல்வமெல்லாம் கருப்புப் பணம்தான். இந்த வகையில் பார்த்தால் இந்தியா உலகிலேயே அதிகமாக ஏழைகள் வாழும் நாடுதானேயொழிய, உலகிலேயே ஏழையான நாடல்ல. கருப்புப் பண செல்வந்தர்கள் ஏராளமாக வாழும் நாடு.

ஒரு இலட்சம் ரூபாய் மதிப்புடைய ஒரு சொத்தை ஒருவன் வாங்குகிறான் என்றால், அதை எழுதுவதற்கு 15 ஆயிரம் ரூபாய்க்கு முத்திரைத் தாள் வாங்க வேண்டும். ஒரு சொத்து வாங்குவதற்கு அரசுக்கு அவன் செலுத்த வேண்டிய கட்டணம் அல்லது வரிதான் இது. தனியார் சொத்துடைமையைக் காப்பதற்காக அரசுக்குச் செலுத்த வேண்டிய கட்டணம் தான் இது. ஆனால், சொத்தை வாங்குபவன் அதன் மதிப்பு 50 ஆயிரம் ரூபாய்தான் என்று காட்டி, 7,500 ரூபாய்க்கு மட்டுமே முத்திரைத் தாள் வாங்கி, எழுதி, பதிவு செய்து கொள்கிறான். இதனால் அரசுக்கு ரூ. 7,500 இழப்பு ஏற்பட்டு, அதுவும், சொத்தை விற்பவனுக்குத் தரப்படும் மீதி ரூபாய் 50 ஆயிரமும், இதைப் பதிவு செய்யும் அதிகாரிக்கு இலஞ்சமாகத் தரப்படும் குறைந்தது 2,000 ரூபாயும் கருப்புப் பணமாகி விடுகிறது.

ஒரு சினிமாவில் நடிப்பதற்காக ஒரு கோடி ரூபாய் சம்பளம் பேசும் நடிகன், அதில் 60, 70 சதவீதம் வருமான வரியாகச் செலுத்த வேண்டி வரும் என்பதால், 50 இலட்சம் ரூபாயைக் கருப்பாகவும் 50 இலட்சம் ரூபாயை வெள்ளையாகவும் வாங்கிக் கொள்கிறான். இதனால் ஒரு பாதிப் பணம் - கருப்புப் பணம், கணக்கில் வரா பணமாக மாறிவிடுகிறது. 10 ரூபாய்க்கா சினிமா நுழைவுச் சீட்டை 50 ரூபாய்க் கொடுத்து ஒரு இரசிகன் வாங்கும்போது, 4 ரூபாய் கருப்புப் பணமாகி விடுகிறது.

இவ்வாறு, வருமானவரி, சொத்து வ விற்பனை வரி, ஏற்றுமதி - இறக்கும சுங்கத் தீர்வை, ஆயத் தீர்வை, கலால் வ கேளிக்கை வரி, தொழில் வரி, விற்பனை வரி என மைய - மாநில அரசுக விதித்துள்ள ஆயிரக்கணக்கான வரி தீர்வை விதிகளை மீறுவதால், கருப்பு பணம் உருவாவது ஒரு வழிவகையா உள்ளது.

அரசுத் துறையில் சாதாரண - நான்கா நிலை ஊழியர் முதல் பிரதமர் - அரசு தலைவர் வரை எல்லா மட்டங்களிலு இலஞ்ச ஊழல், கமிசன், அதிகார முறை கேடுகள் மூலமாகக் கைமாறும் தொகை முழுவதுமே கருப்புப் பணமாக உருமாற்ற அடைகின்றது.




தமிழ்நாட்டு அரசியல்வாதிகளை மட்டும் எடுத்துக் கொண்டால், ஜெயல - சசி கும்பல் ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் சொத்துக்கள் குவித்துள்ளது பகிரங்கமான செய்தி. அவரது கட்சி எம்.எல்.ஏ.க்கள் மந்திரிகளும் கோடி கோடியாகக் குவித்துள்ளனர் அவ்வளவும் கருப்புப் பணம். இவர்கள் தவிர ஒவ்வொரு ஆட்சியிலும் கோடிக் கணக்கில் கருப்புப் பணத்தைக் குவித்து வைத்துக் கொண்டுள்ள திருநாவுக்கரசு, வாழப்பாடி, ரகுபதி, இராமதாசு, பண்ருட்டி, வீரப்பன் போன்றவர்கள் உள்ளனர். இன்பசாகரன், தியாகேசுவரன், அரி பாஸ்கரன், பாண்டே போன்ற அதிகாரிகள் பலகோடி ரூபாய் குவித்துள்ளனர்.

பல ஆயிரம் கோடி ரூபாய் புழங்கும் இராணுவ ஆயுதக் கொள்முதல், அரசுக் கட்டுமானப் பணிகள், வங்கி - பங்குப் பத்திர மோசடி, மாட்டுத் தீவன ஊழல் - இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். மக்களுக்கான திட்ட ஒதுக்கீட்டில் 10 சதவீதம்தான் அதன் இலக்கைச் சென்றடைகிறது என்று முன்னாள் பிரதமர் ராஜீவே ஒப்புக் கொண்டுள்ளார். அப்படியானால் மீதி 90 சதவீதம் கருப்புப் பணமாக மாறுகிறது.

கருப்புப் பணத்தின் ஊற்று மூலம்



படிப்பகம்

www.padippakam.com

அரசியலுக்கு அடுத்து கிரிமினல் உலகம். பல்வேறு பொருள்களோடு போதை மருந்து, ஆயுதங்கள் மற்றும் ரொக்கப் பணக் கடத்தல் - ஹவாலா - வரை, இரகசிய உலகத்தினர் நடத்தும் தொழில்கள் முழுக்கவும் கருப்புப் பணத்தை வைத்தே இயங்குகின்றன. நமது நாட்டின் ஆண்டு மொத்த உற்பத்தி மதிப்பில் 8 சதவீதம் போதை மருந்து மற்றும் ஹவாலா தொழிலில் நடக்கிறது; அதாவது ஆண்டுக்கு 75,000 கோடி ரூபாய் ஹவாலா தொழிலில் கடத்தப்படுகிறது.

முக்கியமாக ஐந்து வகையினர் கருப்புப் பணப் பொருளாதாரத்தில் மூழ்கித் திளைக்கின்றனர். முதலாவதாக, அரசியல்வாதிகளின் 99 சதவீதப் பொருளாதாரம் கருப்புப் பணமே. சினிமாக்காரர்களின் 70 சதவீதம் பொருளாதாரம் கருப்புப் பணம்தான். அரசு ஊழியர்கள், அலுவலர்கள், அதிகாரிகளின் சட்டபூர்வ வருமானத்தைப் போல இன்னொரு மடங்கு கருப்புப் பணம்; அதாவது 50 சதவீதப் பொருளாதாரம் கருப்புப் பணம். சாலை அமைப்பு மற்றும் அரசுப் பொதுப் பணித் துறை காண்டிராக்டர்களின் - ஒப்பந்தக்காரர்களின் 30 சதவிதப் பொருளாதாரம் கருப்புப் பணம். இதே அளவு தொழிலதிபர்களின் பொருளாதாரம் கருப்புப் பணம். கிரிமினல் உலகின் பொருளாதாரம் நூற்றுக்கு நூறு கருப்புப் பணம்தான் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

இவ்வளவு தூரம் கருப்புப் பணப் பொருளாதாரம் வளர்ந்துள்ளதால், இதை சட்டபூர்வப் பொருளாதாரத்துக்கு "இணைப் பொருளாதாரம்" என்றே அழைக்கின்றனர். ஆனாலும், இந்தக் கருப்புப் பணம் முழுவதும் நாட்டு மக்கள் தொகையில் மூன்று சதவீதம் பேரிடமே குவிந்திருக்கிறது.

பெரும்பாலான தொழிலதிபர்களும் வணிகர்களும் சட்டவிரோதகமாகக் கருப்புப் பணத்தைக் குவிப்பதற்காக அதிகார வர்க்கத்துடனும் ஓட்டுக் கட்சித் தலைவர்களுடனும் இணைந்து ஒரு கள்ளக் கூட்டை உருவாக்கிக் கொண்டுள்ளனர். இந்த முக்கூட்டோடு பிற்காலத்தில் கிரிமினல் கூட்டமும் சேர்ந்து கொண்டு விட்டது. இப்போது கிரிமினல்களே தொழிலதிபர்களாகவும் அரசியல்வாதிகளாகவும் மாறி இந்த இணையான பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துகின்றனர்.

எம்.ஜி.ஆர். ஆட்சியின் துவக்க காலத்தில் சாராய வியாபாரிகளாக இருந்த உடையாரும் ஜேப்பியாரும் பின்னாளில் ஆலை அதிபராகவும் கல்வித் தந்தையாகவும் மாறியதை நாமறிவோம். இப்போது பல சட்டபூர்வ தொழில் - வணிகங்கள் கிரிமினல் போதை மருந்துக் கடத்தல்காரர்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டன. பம்பாய் சினிமா உலகே கிரிமினில் கும்பல்களின் ஆதிக்கத்தில் தான் உள்ளது.

கருப்புப் பணப் பொருளாதார வளர்ச்சி நாட்டுக்கு நல்லதுதான்; கேடு ஒன்றுமில்லை; அதனால் வேலை வாய்ப்பும் சந்தையும் பெருகவே செய்யும் என்று வாதிடும் பொருளாதார நிபுணர்களும் உண்டு. அடுத்தடுத்து வந்த அரசுகளும் கூட கருப்புப் பணம் குவிப்பது ஒன்றும் பெரிய கிரிமினல் குற்றம் அல்லவென்று ஏற்றுக் கொள்வதைப் போல, தானே முன்வந்து அறிவிக்கும் திட்டங்கள் பலவற்றையும் அவ்வப்போது கொண்டு வந்தன. குறைந்தபட்ச வரிகட்டி விட்டு கருப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக்கிக் கொள்ளலாம் என்கிற திட்டங்கள் 1951, 65, 75 மற்றும் 80, 90-களில் மீண்டும் மீண்டும் கொண்டு வரப்பட்டன. இந்தக் கருப்புப் பணம் எப்படி வந்தது என்று அறிவிக்கவும் தேவையில்லை என்று விலக்கு அளிக்கப்பட்டது.

வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களின் மூலதனம் - முதலீடுகளை ஈர்ப்பது என்கிற பெயரில் இந்தியாவிலிருந்து கடத்தப்பட்ட கருப்புப் பணம் வெள்ளைப் பணமாக திரும்ப வரவும் அனுமதிக்கப்பட்டது. அதேபோல வெளிநாட்டிலிருந்து ஒரே சமயத்தில் 5 கிலோ தங்கம் தடையின்றிக் கொண்டு வரலாம் என்று அனுமதிக்கப்பட்டது. இப்படிப்பட்ட திட்டங்கள் மூலம் ஜெயாவும் சசியும் ஆளுக்கு மூன்று இலட்சம் டாலர்கள் (அதாவது ஆளுக்கு 90 கோடி ரூபாய்) கருப்புப் பணத்தை இறக்குமதி செய்தனர்.

இப்படிப்பட்ட திட்டங்கள் எல்லாம், எவ்வளவு வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் கருப்புப் பணத்தைக் குவித்துக் கொள்வதில் தவறில்லை; பிறகு, அவற்றைச் சட்டபூர்வ வெள்ளைப் பணமாக மாற்றிக் கொள்ள அரசே அனுமதிக்கும் என்று உறுதியளிக்கின்றன.

ஐரோப்பாவில், ஆஸ்திரியாவுக்கும் சுவிஸ்சர்லாந்துக்கும் இடையே 37 ஆயிரம் பேர் மட்டுமே வாழும் லைசேட்ஸ்டைன் என்னும் சிறிய நாடுள்ளது. அங்குள்ள வங்கிகளில் மட்டும் 5,10,000 கணக்குகளை இந்தியக் குடிமகன்கள் வைத்திருக்கின்றனர். இன்னும் உலகம் முழுவதுமுள்ள பல ஆயிரம் வங்கிகளில் எவ்வளவு இலட்சம் கணக்குகளை இந்தியர்கள் வைத்துள்ளார்கள், ஒவ்வொரு கணக்கிலும் ஒரு கோடி ரூபாய் என்று வைத்துக் கொண்டாலும் எவ்வளவு கோடி கோடி ரூபாய் கருப்புப் பணமாக இங்கிருந்து கொண்டு குவிக்கப்பட்டுள்ளது என்று எண்ணிப் பாருங்கள்!




இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மைய அரசு அறிவித்த சலுகையைப் பயன்படுத்திக் கொண்டு கள்ளச் சொத்துக்களை வெள்ளையாக மாற்றிக் கொள்ளும் கருப்புப் பணக் கும்பல்.

கருப்புப் பணம் குவித்திருப்பது ஒரு ஒழுக்கக் கேடான விடயம், கிரிமினல் விடயம்தான். ஆனாலும், இது நாட்டின் பொதுவான பொருளாதாரத்தைப் பாதிப்பதால், ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் கவனிக்க வேண்டிய பெரும் பணக்காரர்கள் சம்பந்தப்பட்ட விடயம், ஏழை - எளிய மக்களாகிய நமக்கும் அதற்கும் என்ன தொடர்பு என்று பொதுவாக உழைக்கும் மக்கள் எண்ணுகின்றனர்.

விஜய் மல்லையா, அகர்வால் போன்ற தொழிலதிபர்கள் மட்டுமல்ல, ஜெயலலிதா - சசிகலா போன்ற கருப்புப் பண முதலைகள்தான் இன்றைய அரசியலின் நாயகர்களாகவும் நாயகிகளாகவும் உள்ளனர். நாம் யாருக்கு வோட்டுப் போட்டாலும் நாட்டை ஆளுபவர்கள் கருப்புப் பண ஆசாமிகள்தாம்.



படிப்பகம்

www.padippakam.com

வீடு - வீட்டுமனை தொழிலை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் கருப்புப் பண கிரிமினல்கள்தாம் உள்ளூர் தாதாக்களை ஏவி குடியிருப்போர்களை மிரட்டியும் தாக்கியும் வெளியேற்று கின்றனர். "ரேசன் கடை"ப் பொருட்கள், அரசு வழங்கும் இலவச வேட்டி சேலை போன்றவற்றைக் கடத்தியும், தானே உற்பத்தி செய்தும், கலப்படப் பொருட்கள், பதுக்கல் பொருட்கள் ஆகியவற்றை வைத்துக் கருப்புப் பண முதலைகள் நடத்தும் கள்ளச் சந்தையே எங்கும் நடக்கிறது.

உழைக்கும் மக்களின் அன்றாட வாழ்வில் எங்கும் எதிலும் கருப்புப் பண ஆசாமிகள் குறுக்கிடுகிறார்கள். தொழிலாளர்கள் உழைக்கும் ஆலைகளின் வரவு - செலவுக் கணக்கில் நடக்கும் மோசடி காரணமாக பல ஆயிரம் கோடி கருப்புப் பணமாக மாற்றப்படுகிறது. தொழிலாளிக்கு உரிய ஊதியம், போனசு முதலிய உரிமைகள் மறுக்கப்படுகின்றன. தொழிலுறவு அதிகாரிகளின் இலஞ்சம் கருப்புப் பணமாகப் போகிறது. நாம் மருத்துவரிடம் போனால் சிகிச்சைக்கான தொகை கருப்புப் பணமாகவே பெறப்படுகிறது; அங்கே இரசீதும் கிடையாது, மருத்துவரின் வருமான வரியில் மோசடி நடந்து கருப்புப் பணம் குவிகிறது. பிள்ளைகளைப் பள்ளி - கல்லூரியில் சேர்க்கும்போது தரப்படும் நன்கொடை கருப்புப் பணமாகிறது. போலீசு முதல் வெவ்வேறு நிலை அதிகாரிகள் பெறும் இலஞ்சம் கருப்புப் பணமே. வழக்கென்று போனால் வக்கீல்கள் வாங்கும் கட்டணமும் கருப்புப் பணமாகிறது. சினிமா - வானொளியைக் கருப்புப் பண ஆசாமிகள் கட்டுப்படுத்தும் அதேசமயம், "சினிமா டிக்கெட்" கூட கள்ளச் சந்தையில் விற்கப்பட்டு, கருப்புப் பணமாகிறது.

இப்படி எங்கும் எதிலும் ஆதிக்கம் வகிக்கும் கருப்புப் பணம், முதலாளியப் பொருளாதாரம் பிடித்துக் கொண்டுள்ள ஒரு பிறவி நோய்; அரிப்பு நோய். இந்த நோயைக் குணப்படுத்துவதற்கான மருந்து எதுவும் முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்களிடம் கிடையாது. சட்டபூர்வமான - பகிரங்கமான பொருளாதாரத்துக்கு இணையாக இது நீடித்திருப்பது நல்லது தான்; நாட்டின் வளர்ச்சிக்கு அவசியமானது கூட என்று வாதிடும் நிபுணர்களும் உண்டு. ஆனால், சொரியும் போது இதமாகத் தோன்றும் அரிப்பு நோய் மேலும் மேலும் பரவி உடம்பு முழுவதும் இரணமாகி விடுவதில் தான் முடியும். அதுபோல நாட்டின் பொருளாதார வாழ்வையே ஆட்டிப் படைக்கும் சக்தியாக கருப்புப் பண ஆதிக்கம் மாறிவிடும் நாள் வெகு தொலைவில் இல்லை.

● பச்சையப்பன்

22-ம் பக்கத் தொடர்ச்சி

பாண்டியன் தலைமையில் கமிசன் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. "குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால், குற்றவாளிகள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள்" என்று கூறுகிறார் பரூக். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இடமாற்றம் செய்யப் பட்டுள்ளார்கள். இதெல்லாம் வழக்கமான கண்துடைப்புத்தான் என்பதில் சந்தேக மில்லை.

லஷ்கர்-இ-தொய்பா... ∴பதாயின் எனப்படும் பன்னாட்டு இசுலாமியத் தற்கொலைப் படையினர் இந்தியப் படைமுகாம்கள் மீது நடத்தும் தாக்குதல் தவிர, இன்று ஜம்மு - காசுமீரில் என்ன நடக்கிறது என்பதற்கான ஒருவகை மாதிரிதான் இந்தச் சங்கிலித் தொடர் நிகழ்ச்சி. இது இந்திய இராணுவம் - துணை இராணுவப் படையின் கொலைவெறியை மட்டும் காட்டவில்லை. இந்திய அரசின் சதிச் செயல்களையும், அதை அப்படியே ஆதரித்துத் தூக்கிப் பிடிக்கும் போலித் தேச பக்தர்களின் முகத்திரையையும் கிழித் தெறிந்து விட்டது.

இன்னும் சற்று ஆழமாகப் பாருங்கள். "எல்லைக்கு அப்பால் இருந்து ஏவிவிடப்படும் அந்நியக் கூலிப் படையினரின் பயங்கரவாதப் படுகொலைகள்தான் காசுமீரில் முக்கியப் பிரச்சினை; இதன் காரணமாக பாகிஸ்தானைப் பயங்கரவாத நாடாக அறிவிக்க வேண்டும்" என்று இந்தியா யாரிடம் முறையிட்டு வருகிறதோ, அந்நாட்டு அதிபரின் வருகையின்போது சித்திசிங் போரா படுகொலையை பாகிஸ்தான் செய்ய வேண்டியதன் அவசியம், நோக்கம் என்ன? இப்படிச் செய்வது இந்தியாவுக்குச் சாதகமாகத்தான் அமையும் என்பது தெரியாதா? இதுவரை "நடுநிலை" வகித்த சீக்கியர்களைப் படுகொலை செய்வது, அச்சமூகத்தை முசுலீம் மக்களுக்கு எதிராகவும், தனக்கே எதிராகவும் திருப்பி விடும் என்பது பாகிஸ்தானுக்கு தெரியாதா?

சித்திசிங் போரா படுகொலை நடந்த ஐந்தாம் நாளே அதற்குக் காரணமான அந்நியத் தீவிரவாதக் கூலிப் படைகள் என சொல்லி 5 பேரைக் கொன்று விட்டு அரைகுறையாக எரித்துச் சிதைத்துப் புதைத்திருக்கிறது, இந்தியப் படை மோதலில்தான் கொல்லப்பட்டவர்கள் என்றாலும், அவர்களை அடையாளங் காணுவதற்கோ, பிரேதப் பரிசோதனை செய்வதற்கோ எவ்வித முயற்சியும் செய்யவில்லையே, ஏன்? என்னதான் பலன் தரும்படியான உடனடி நடவடிக்கை எடுக்கும்படி அரசு நிர்பந்தித்தாலும் அதற்காக அப்பாவி மக்களைப் பிடித்துக் கொன்று விடுவதுதான் முறையா? எப்படிப்பட்ட நிலையில் இந்தியப்படை உள்ளது?

உள்நாட்டு அரசியல் விவகாரமானால் துருவித் துருவி செய்திகள் வெளியிடும் வானொளி, பத்திரிகைகள், இந்திய அரசும்



இந்திய இராணுவத்தின் அட்டூழியங்களை எதிர்த்து சிறீநகரில் நடந்த ஆர்ப்பாட்டம்.

படையும் தரும் தகவல் எதுவானாலும் அப்படியே வாந்தி எடுப்பதும், அதை அப்படியே ஏற்று தேசபக்திக் கூட்டுப்பாடலில் கலந்து கொள்வதுதான் உண்மையான தேசபக்தியா? சந்தனக் கடத்தல் வீரப்பனைத் தேடுவது, நக்சலைட்டுக்களை வேட்டையாடுவது முதற்கொண்டு காசுமீரில் தீவிரவாதிகளை ஒடுக்குவது வரை சிறப்பு நடவடிக்கைப் படை என்றமைத்து எங்கு அனுப்பினாலும் அதன் நடவடிக்கைகள் பாலியல் வன்முறையில் ஈடுபடுவதும் சித்திரவதை - படுகொலைகள் செய்வது தானே வழக்கமாக உள்ளது. தீவிரவாதம், பிரிவினைவாதம், நக்சலிசத்துக்கு எதிரான நடவடிக்கை என்றால் போலீசு, துணை இராணுவம், இராணுவத்தின் அட்டூழியங்களைக் கண்ணை மூடிக் கொண்டு ஆதரிப்பதுதான் தேச பக்தியா?

● மாணிக்கவாசகம்



படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## இந்தியாவின் காசுமீர் போர்

**கா**சுமீர் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை எப்படியாவது நசுக்கிவிட வேண்டும் என்ற வெறி கொண்டிருக்கும் இந்து மதவெறிக் கூட்டணி அரசு, அதற்காக இப்பொழுது வான்வழித் தாக்குதலையும் நடத்தத் தொடங்கிவிட்டது. சமீபத்தில் தோடா பகுதியில் எல்லைப் பாதுகாப்புப் படை தீவிரவாதிகளைத் தேடி அழிக்கும் வேட்டையை நடத்திய பொழுது, அவர்களது மறைவிடங்களின் மீது இராணுவ ஹெலிகாப்டர்களில் இருந்து ராக்கெட் குண்டுகள் வீசியெறியப்பட்டன. மக்கள் வாழாத பகுதிகளில், தேவைப்படும் பொழுது வான்வழித் தாக்குதலைப் பயன்படுத்துவோம் என மைய அரசு எச்சரிக்கை விட்டுள்ளது. காசுமீரில் இந்திய இராணுவமும், துணை இராணுவப் படைகளும் நடத்தி வரும் தரைவழிச் சண்டையே பத்தாயிரக்கணக்கான காசுமீர் மக்களை அநியாயமாகக் காவு கொண்டு வரும் பொழுது, அம்மக்களின் உயிருக்கும், உடமைக்கும் பாதிப்பு ஏற்படுத்தாமல் வான்வழித் தாக்குதலை நடத்துவோம் என்று இந்திய அரசு கூறுவது கேழ்வரகில் நெய் வடியும் கதைதான்!

## ''சுதேசிக் கோமாளிகள்''

**ச**மீபத்தில் ஆர்.எஸ்.எஸ். நடத்திய கூட்டத்தில் பாரத் ஜுன்ஜுன்வாலா என்பவர், ''கோமியத்தைச் சுத்தப்படுத்தி பாட்டில்களில் அடைத்து விற்றால் சுதேசிப் பொருளாதாரமும் வளரும்; அந்நியச் செலாவணியும் கிடைக்கும்'' எனப் பேசி கைதட்டலை வாங்கிச் சென்றாராம். சாணியையே இறக்குமதி செய்து சரித்திரம் படைத்தவர்கள் இந்திய ஆட்சியாளர்கள். பா.ஜ.க. தாராளமயமாக்கலை அமல்படுத்தும் வேகத்தைப் பார்த்தால், மேலை நாடுகளில் கோமியம் (பசு மூத்திரம்) விற்பனைக்குக் கிடைத்தால், அதையும் இறக்குமதி செய்யாமல் ஒதுக்கிவிட மாட்டார்கள். பிறகு, ஆர்.எஸ்.எஸ். சுதேசிக் கோமாளிகளின்பாடுதான் திண்டாட்டமாகி விடும்!

## நகர்ப்புறச் சேரிகளை ஒழிக்க வரும் சட்டம்

**ம**காராஷ்டிரா மாநில அரசு, மும்பய் நகரில் ஏழைத் தொழிலாளர்கள் குடிசைப் போட்டுக் கொண்டு வாழ்வதைத் தடுக்கும் தடைச் சட்டமொன்றைக் கொண்டுவரத் திட்டமிட்டுள்ளது. இச்சட்டத்தின்படி ஜனவரி 1, 1995-க்குப் பிறகு மும்பய் நகரில் உருவான சேரிகள் அனைத்தும் சட்டவிரோதமானவை. இச்சட்டத்திற்குக் கட்டுப்பட்டு குடியிருப்புகளைக் காலி செய்யாதவர்கள் மீது பிணையில் வெளியே வர முடியாதபடி வழக்குத் தொடரப்பட்டு, அபராதத்தோடு சிறைத் தண்டனையும் விதிக்கப்படும். ஏழைத் தொழிலாளர்கள் நகர்ப்புற நிலங்களை 'ஆக்கிரமித்து'க் கொள்வதைச் சட்டம் போட்டு தடுக்கும் இந்த நியாயவான்கள் தான், பன்னாட்டு நிறுவனங்களும், தரகு முதலாளிகளும் நகர்ப்புற நிலங்களை வளைத்துப் போட்டுக் கொள்ளுவதற்கு வசதியாக நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தைத் திருத்துகின்றனர்.

முமபய் மாநகராட்சி ஏழைத் தொழிலாளர்களின் குடிசைகளை இடித்துத் தள்ளுவதை எதிர்த்து நடந்த ரயில் மறியல்



## மருத்துவர்கள் மீது பாயும் ஆந்திரப் போலீசு

**போ**லீசாரால் சுடப்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த மக்கள் போர்க் குழுவைச் சேர்ந்த நக்சல்பாரி புரட்சியாளர் சம்பையாவிற்கு அறுவை சிகிச்சை செய்து உயிரைக் காப்பாற்றியதற்காக, ஆந்திர மாநிலத்தின் ராஜமுந்திரி நகரைச் சேர்ந்த மூன்று மருத்துவர்கள் ஆந்திரப் போலீசால் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆந்திர மருத்துவர்கள், ''நோயாளிகளின் உயிரைக் காப்பாற்றுவது எங்களின் கடமை'' எனக் கூறி, போலீசாரின் மனிதாபிமானமற்ற அடாவடித்தனத்தை எதிர்த்து வருகின்றனர். மருத்துவர்களைச் சமாதானப்படுத்துவதற்காகக் கைது செய்யப்பட்ட மருத்துவர்களைப் பிணையில் விட்டுவிட்ட ஆந்திர போலீசு, ''நக்சல்பாரிகளுக்கு மருத்துவம் பார்க்கும் பொழுதே, போலீசுக்கும் தகவல் கொடுத்து விடுங்கள்'' எனக் கூறியுள்ளது. பச்சையாகச் சொன்னால், ''மருத்துவர்களே, ஆள்காட்டியாகச் செயல்படுங்கள்'' என்பதுதான் போலீசின் சமாதான பேரம்!

## மனித உரிமை கமிசன்களை நம்ப முடியுமா?

**மே**ற்கு வங்க மாநில மனித உரிமை கமிசன் 1997-98-ஆம் ஆண்டில் 4000 மனித உரிமை மீறல் புகார்களைப் பெற்றுள்ளது. இவற்றுள், 1582 புகார்களை எடுத்த எடுப்பிலேயே குப்பைக் கூடைக்கு அனுப்பிவிட்டது அக்கமிசன்; 1326 புகார்கள் ''கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபின்'' தள்ளுபடி செய்யப்பட்டன. மீதமிருந்த 1,092 புகார்களில் 243 புகார்கள் மட்டுமே தீவிர விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, 80 வழக்குகளில் மட்டுமே சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் மீது நடவடிக்கை எடுக்கவும், பாதிக்கப்பட்டவருக்கு நட்ட ஈடு/நீதி வழங்கவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## சர்வாதிகாரியின் மனித உரிமை பற்றி இங்கிலாந்தின் அக்கறை!

**சி**லி நாட்டின் அதிபராக இருந்த பினோசெட் பச்சை மனித இரத்தத்தைக் குடித்த கொடிய இராணுவ சர்வாதிகாரி. பினோசெட் ஆட்சிக் காலத்தில் நடந்த மனித உரிமை மீறல்களைப் பற்றி விசாரிக்க, அவரை ஸ்பெயினுக்கு அனுப்பி வைக்குமாறு அந்நாட்டு அரசு இங்கிலாந்திடம் கோரி வந்தது. மனித உரிமைகள் பற்றி தம்பட்டம் அடித்துவரும் இங்கிலாந்தோ, பினோசெட் மிகவும் நோய் வாய்ப்பட்டிருப்பதாகக் கதை விட்டு, அவரை ஸ்பெயினுக்கு அனுப்ப மறுத்துவிட்டு, பத்திரமாக இங்கிலாந்தில் இருந்து சிலிக்கு அனுப்பி வைத்தது. ''பினோசெட்டுக்கு வந்திருக்கும் நோய் பற்றியாவது ஸ்பெயினுக்குத் தெரிவிக்க வேண்டும்'' என இங்கிலாந்து நாட்டு நீதிபதிகள் கோரிய பொழுது, இங்கிலாந்து அரசோ, ''அதைப் பற்றி வெளியுலகுக்கு மட்டுமல்ல, நீதிமன்றத்திற்குக் கூடத் தெரிவிக்க முடியாது; அப்படித் தெரிவிப்பது பினோசெட்டின் மனித உரிமையை மீறுவதாகும்'' எனத் தடாலடியாக மறுத்து விட்டது.

Published and Owned by A. SHANMUGARAJ, 25, Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110 II Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: A. SHANMUGA RAJ.

படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (TAMIL FORTNIGHTLY) REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER FOR INDIA UNDER NO. 42648/85 Regd. No. TN/Chief.PMG- 544 / 2000

# இதுதான் இன்றைய இந்தியா




ஓட்டுக்கட்சிகள், நாடாளுமன்றம், சட்டமன்றம் - இந்த ஜனநாயக நிறுவனங்கள் அம்பலப்பட்டுப் போன பின்பு, நீதிமன்றங்கள்தான் இந்திய மக்களின் கலங்கரை விளக்கமாக இருக்கிறது என்று "சோ" போன்ற தேசியவாதிகள் பசப்பி வருகின்றனர். இந்திய நீதிமன்றங்களுக்கு இந்தத் தகுதி இருக்கிறதா என்று கேட்பதைவிட, உழைக்கும் மக்கள் இந்த நீதிமன்றங்கள் மீது நம்பிக்கை வைக்கலாமா என்றுதான் நாம் கேட்க முடியும். ஏனென்றால், இந்திய உழைக்கும் மக்களின் உயிரை, வாழ்க்கையை, உடமையை அநியாயமாகப் பறித்த 'நீதி'யான தீர்ப்புகள் ஏராளமுண்டு. இதோ அப்படிப்பட்ட ஒரு தீர்ப்பை எதிர்த்துதான் தில்லி நகரைச் சேர்ந்த "ஆட்டோ" மற்றும் "டாக்ஸி" ஓட்டுநர்கள், தங்கள் குழந்தைகளோடு ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர்.

தில்லி நகரம் வாகனப் புகையால் மாசுபடுவதைத் தடுப்பதற்காக எட்டு ஆண்டுகள் ஓடிவிட்ட 1842 அரசுப் பேருந்துகள், 17,200 ஆட்டோக்கள், 1,200 டாக்ஸிகள் அனைத்தும் இனியும் ஓடுவதைத் தடை செய்து, உச்சநீதி மன்றம் 1998-ஆம் ஆண்டில் தீர்ப்பளித்தது. அந்தத் தீர்ப்பு இந்த ஆண்டு ஏப்ரல் முதல் நடைமுறைக்கு வந்துவிட்டது. வெளிப்பார்வைக்குச் சரியானதாக, நியாயமானதாகத் தெரியும் இந்தத் தீர்ப்பு, இதோ இவர்களின் வாழ்க்கைக்கு எமனாக மாறிவிட்டது.

இந்த ஒன்றரை வருட காலத்தில் இவர்கள் தங்கள் வண்டிகளை மாற்றியிருக்கலாம்; அல்லது, வேறு வேலைக்குப் போயிருக்கலாம் என்று சில நடுநிலையாளர்கள் உச்சநீதி மன்றத்தின் தீர்ப்புக்கு முட்டுக் கொடுக்கலாம். வேறு உருப்படியான வேலை கிடைக்காததால்தான் இவர்கள் ஆட்டோ / டாக்ஸி ஓட்டிப் பிழைக்கிறார்கள். நினைத்த மாத்திரத்தில் புதிய வண்டி வாங்கி வலம் வருவதற்கு இவர்களொன்றும் குபேரன் வீட்டுப் பிள்ளைகள் இல்லையே?

தில்லி நகரம் மாசுபடுவதைத் தடுப்பதற்காக, நகருக்குள் இயங்கி வந்த தொழிற்சாலைகளை மூடச் சொல்லி உச்சநீதி மன்றம் உத்தரவிட்டதால், அந்த ஆலைத் தொழிலாளர்கள் அடுத்த வேளை கஞ்சிக்கு வக்கற்றுப் போனார்கள்; ஆனால், ஆலை அதிபர்களோ ஆலை நிலத்தைக் கூறு போட்டு விற்று, தங்கள் பணப்பெட்டியை நிரப்பிக் கொண்டார்கள். தில்லி நகரை அழகுபடுத்துவதற்காக நகர்ப்புறச் சேரிகளை இடித்துத் தள்ளச் சொல்லி உச்சநீதி மன்றம் பிறப்பித்த உத்தரவை தில்லி மாநகராட்சி எப்பொழுது நடைமுறைப் படுத்தும் என ஆவலாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் அடுக்குமாடிக் கட்டிடக் கம்பெனி முதலாளிகள். ஆட்டோ / டாக்ஸி ஓட்டுநர்களின் வயிற்றிலடித்த இந்தத் தீர்ப்பு எந்த முதலாளியின் கஜானாவை நிரப்பப் போகிறது?

இதோ, இரு இளம் பெண்கள் தில்லியில் நடந்த கார் கண்காட்சியில் இந்தியாவில் நுழைந்துள்ள சிறிய இரக கார்களின் மாதிரியைத் தூக்கிக் காட்டுகிறார்களே, அந்த கார் கம்பெனிகளுக்குதான் இந்தத் தீர்ப்பு கொழுத்த பரிசு கிடைத்தது போல. தில்லியைப் போலவே மும்பையிலும் சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்தும் டாக்ஸிகளைத் தடை செய்யப் போவதால், சென்னையில் பழைய கார்களின் உரிமத்தைப் புதுப்பிக்க அதிகாரிகள் மறுத்து வருவதால், இனி கார் கம்பெனிகளின் காட்டில் அடைமழை கொட்டப் போகிறது!




தில்லி ஆட்டோ / டாக்ஸி ஓட்டுநர்கள் உச்சநீதி மன்றத் தீர்ப்பு நடைமுறைக்கு வருவதைத் தள்ளிப் போடச் சொல்லிதான் போராடுகிறார்கள். ஆட்டோ / டாக்ஸி ஓட்டுநர்களின் வாழ்வா? இல்லை, தில்லியின் அழகா? (கொஞ்சம் பச்சையாகச் சொன்னால், கார் கம்பெனிகளின் இலாபமா?) என்ற பிரச்சினையில், உச்சநீதி மன்றம் "தேதியைத் தள்ளிப் போட முடியாது; தில்லியின் அழகுதான் முக்கியம்" என்று கூறிவிட்டது. அழகு ஆபத்தானது என்பார்கள். இயற்கை அழகே ஆபத்தானது என்றால், பன்னாட்டு கார் கம்பெனிகளின் இலாபத்திற்குத் துணை போகும் அழகைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை!